உ

சிவமயம்.

# ஔவையார்

## திருவாய்மலர்ந்த குறள்

### மூலமும்-உரையும்.

இஃது

செங்கை தொண்டைமண்டலக் கலாசாலையில்

பிரதம தமிழ்ப்பண்டிதர்

வித்வான். ஆ. அப்பன்செட்டியார் அவர்கள்

மாணாக்கர்

ம-ள-ள-ஸ்ரீ, ம. வடிவேலுமுதலியார்

எழுதிய

பொழிப்புரையும்,

பூ. சு. குப்புசாமி முதலியாரது

ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பித்தனர்.

2-ம். பதிப்பு. இதன் விலை

காப்பி 1000. 1915 அணா 8

(Registered Copy Right)

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41

உ

சிவமயம்.

# ஔவையார்

# திருவாய்மலர்ந்த குறள்

## மூலமும்-உரையும்.

இஃது

சென்னை தொண்டைமண்டல கலாசாலையில்

பிரதம தமிழ்ப்பண்டிதர்

வித்வான். ஆ. அப்பன்செட்டியார் அவர்கள்

மாணாக்கர்

ம-ள-ள-ஸ்ரீ, மா. வடிவேலுமுதலியார்

எழுதிய

பொழிப்புரையும்,

பூ. சு. குப்புசாமி முதலியாரது

ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பித்தனர்.

2-ம். பதிப்பு — இதன் விலை

காப்பி 1000. 1915 — அணா-8

(Registered Copy Right)

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR 41 MADRAS 41

உ

வேல்முருகன் துணை

ஔவையார் திருவாய்மலர்ந்த குறள்

# மூலமும்-உரையும்.

## வீட்டுநெறிப்பால்.

### பிறப்பின் நிலைமை.

1. ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்.

(பதவுரை.) ஆதியாய்=(இந்தச்சரீரத்திற்கு) முதன்மையாய், நின்ற=இருந்த, அறிவு=அறிவானது, (எனக்கு இதைச்சொல்ல இடங்கொடுத்தது) முதல் எழுத்து=ஆதியட்சரமாகிய (பிரணவத்தை) ஓதிய =(முதலிலே) உச்சரிக்கின்ற, நூலின் வேதத்தின் பயன்=பிரயோசனமாகும். (எ-று.)

(கருத்துரை.) நான்கு வேதங்களை முதலாகக்கொண்டு இந்நூலை சொல்லுகின்றேன் என்பது கருத்து.

(விசேஷவுரை.) இந்தச் சரீரத்துக்கு அறிவு ஆதியாயுள்ள தென்பது அறிவென்று சொல்லப்படும் ஆன்மாதன்னுடைய வினையினளவுக்குத் தகவேறோர் சரீரமெடுப்பதற்குக் காரணமாகப் பெறப்படுதலின், 'ஆதியாய்நின்றவறிவு' எனவும், வேதம் ஆரம்பத்

தில் உச்சரிப்பது பிரணவமே என்றும், அந்த வேதத்தையே ஆதாரமாகக் கொண்டு சொல்லப்பட்டது இந்நூலென்றுஞ் சொல்லுவார், 'முதலெழுத்தோதிய நூலின்பயன்' எனவுங்கூறினர்.

அறிவே ஆன்மாவென்றதை;

"ஓசையைச செவியாலோர்ந்து முருவினைக் கண்ணாலுற்று
நாசியாற் கந்தங்கொண்டு நாவினு லிரதந்துய்த்தும்
பூசியதோலினாலே புலப்படப் பரிசமுற்றும
ஆசற வுடலினிற்கு மறிவுகா ணான்மாத் தானே" என்பதினாலறிக. (1)

## 2. பரமாய சத்தியுட் பஞ்சமா பூதந் தரமாறிற் றோன்றும் பிறப்பு.

(பதவுரை.) பரம்=பரம்பொருளிடத்தில், ஆய=உண்டான, சத்தியுள்=பராசத்தியிலடங்கிய,பஞ்சமாபூதம்=ஐந்துபெரியபூதங்களும், தரம்மாறில்=தங்களில் ஒன்றுடனொன்றுமாறினால், பிறப்பு=ஜெந்மமானது, தோன்றும்=உண்டாகும். (எ-று.)

(கருத்துரை.) பஞ்சபூதங்களின் பரிணாமமே தேகம் என்பது கருத்து.

பரமாயசத்தியுள் என்றதற்கு பரத்திலிருக்கும் மாயாசத்தியுள் என்று கொள்ளலுமாம்.

பஞ்சபூத பரிணாமமே தேகமென்பார், 'பஞ்சமாபூதந் தரமாறிற்றோன்றும் பிறப்பு' எனவும், அதுபராசத்தியினிகழ்வதெனபார், 'பரமாயசத்தியுள்' எனவுங்கூறினர். (2)

## 3. ஓசை பரிச முருவஞ் சுவைநாற்ற மாசை படுத்து மளறு.

(பதவுரை.) ஓசை=சத்தமும், பரிசம்=பரிசமும், உருவம்=ரூபமும், சுவை=ரசமும், நாற்றம்=கந்தமும், (ஆகிய பஞ்சதன்மாத்திரைகளும்) ஆசைபடுத்தும்=ஆசையை உண்டாக்குகின்ற, அளறு=சேறாகும். (எ-று.)

(கருத்துரை.) தன்மாத்திரைகள் ஐந்தும் ஆசையை உண்டாக்கி ஆன்மாவைக் கெடுப்பவைகளாகும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) பௌதாதிகாகங்காரத்தில்தோன்றுவதுடன் தமோ குணத்தினையுமுடையவைகளாகையால் பஞ்சதன்மாத்திரைகளை 'ஆசைப்படுத்து மளறு' என்று கூறினர். (3)

4. தருமம் பொருள்காமம் வீடெனு நான்கு
முருவத்தா லாய பயன்.

(பதவுரை.) தருமம்=தருமம், பொருள்=பொருள், காமம்=ஆசை, வீடு=மோட்சம், எனும் = என்று சொல்லப்படும், நான்கும்=புருஷார்த்தங்கள் நான்கும், உருவத்தால்=சரீரத்தால், ஆய=உண்டான, பயன்=பிரயோசனமாம். (எ-று.)

(கருத்துரை.) புருஷார்த்தங்கள் நான்கும் சரீரத்தின்பிரயோசனம் என்பது கருத்து.

(விசேஷவுரை.) புருஷார்த்தங்கள் மானிடர் பிறவிக்கே முக்கியமாக சொல்லப்பட்டிருத்தலின், அவைநான்கும், உருவத்தாலாயபயன், எனக்கூறினர்.

தருமம் என்றது. முப்பத்திரண்டு தருமங்களை அன்றி, பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி இவர்கள் மூவர்க்கும் இல்லறத்திலிருப்போன் செய்யவேண்டிய தருமம் எனினுமாம். இதனை,

"இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை." என்பதினாலறிக.

பொருள் என்றது = செல்வப்பொருளினை. அது இல்லையாயின் தருமம் நிகழாதாகலின். அதுவும் நல்வழியில் தேடியதாயிருத்தல்வேண்டும். இதனை,

"பொருளிலார்க் கிவ்வுலகமில்லை." என்பதினாலறிக.

காமம் என்பது=ஆசை. வீடு என்பது=இம்மூன்று தருமங்களையும் விட்டு விடுதல் இதனை;

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனை நினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு." என்பதினாலறிக. (4)

## 5. நிலமைந்து நீர்நான்கு நீடங்கி மூன்றே யுலவையிரண் டொன்று விண்.

(பதவுரை.) நிலம்=பிருதிவியானது, ஐந்து=ஐந்தாவதாகவும், நீர்=அப்புபூதமானது, நான்கு=நாலாவதாகவும், நீடு=நீண்ட, அங்கி-தேயுபூதமானது, மூன்று=மூன்றாவதாகவும், உலவை=வாயுபூதமானது, இரண்டு = இரண்டாவதாகவும், விண்=ஆகாய பூதமானது, ஒன்று=முதலாவதாகவும் ஆகும். (எ-று.)

(கருத்துரை.) பஞ்சபூதங்களும் எண்ணலளவையால் இக்கணக்குகளை யமையும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களும் வரிசைக்கிரமங்களால் மேற்சொன்ன எண்களையுடையவவென்பார் இங்ஙனங் கூறினார். (5)

## 6. மாயன்பிரம னுருத்திரன் மகேசனோ டாயுஞ் சிவமூர்த்தி யைந்து.

(பதவுரை.) மாயன்=விஷ்ணுவும், பிரமன்=பிரமனும், உருத்திரன்=ருத்திரனும், மகேசன்=மகேசனும், ஆயும்=வேதத்திலாராயும், சிவமூர்த்தி = சதாசிவனுமாக, ஐந்து=பஞ்சமூர்த்தங்களாம். (எ-று.)

(கருத்துரை.) மூர்த்திகள் ஐவர் ஆவார்கள் என்பதுகருத்து.()

## 7. மாலயனங்கி யிரவி மதியுமையோ டேலுந் திகழ்சத்தி யாறு.

(பதவுரை.) ஏலும்=பொருந்திய, திகழ் = விளங்குகின்ற, சத்தி=சத்திகள், மால்=விஷ்ணு, அயன் = பிரமன், அங்கி = அக்கினியும், இரவி=சூரியனும், மதி=சந்திரனும், உமை = உமாதேவியும், (ஆக) ஆறு=அறுவராம். (எ-று.)

(கருத்துரை.) சத்திகள் அறுவர்களாம் என்பது கருத்து, (7)

## 8. தொக்குதிரத் தோனேன் மூளை நிணமென்பு சுக்கிலந் தாதுக ளேழு.

(பதவுரை.) தொக்கு=சரீரம், உதிரம்=இரத்தம், ஊன்=மாமிசம், மூளை=மூளை, நிணம்=நிணம், என்பு=எலும்பு, சுக்கிலம்=சுக்கிலம், (ஆக) தாதுகள்எழு=எழுதாதுகளாகும். (எ-று.)

(கருத்துரை.) எழுதாதுகளாகும் என்பதுகருத்து. (8)

## 9. மண்ணொடு நீரங்கி மதியொடு காற்றிரவி விண்ணெச்ச மூர்த்தியோ டெட்டு.

(பதவுரை.) மண்=பிருதிவி, நீர்=அப்பு, அங்கி, தேயு, மதி=சந்திரன், காற்று=வாயு, இரவி=சூரியன், விண்=ஆகாயம், எச்சமூர்த்தி=யாகதேவதை, (ஆக) எட்டு=எட்டுமூர்த்தங்களாவார்.

(கருத்துரை.) எண்வகையான மூர்த்தங்களாவார்கள்என்பது கருத்து.

அஷ்டமூர்த்தஙகளாவன;

"நிலநீர்நெருப்புயிர்நீள் விசும்புநிலாப்பகலோன்
புலனாயமைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகேழெனத்திசைபத் தெனத்தானொருவனுமே
பலவாகிநின்றவாதோ ணோக்கமாடாமோ" என்று ஸ்ரீமந் மாணிக்கவாசகர் கூறியதினாலறிக. (9)

**10. இவையெல்லாங்கூடி யுடம்பாயவொன்றி
னவையெல்லா மானது விந்து.**

(பதவுரை) இவை எல்லாம்=மேலேசொல்லப்பட்டவைகளெல்லாம், கூடி=சேர்ந்து, உடம்புஆய=சரீரமான, ஒன்றின் = ஒருவஸ்துவில், நவை=குற்றஙகள், எல்லாம்=யாவும், ஆனது = உண்டானது, விந்து=சுக்கிலத்தாலாகும். (எ-று.)

(கருத்துரை.) பஞ்சபூதஙகள், பஞ்சதன்மாத்திரைகள் நான்கு புருஷார்த்தஙகள், பஞ்சமூர்த்திகள், ஆறுசத்திகள், எழுதாதுக்கள், அஷ்டமூர்த்தங்கள் ஆகிய இவைகளெல்லாஙகூடி விந்துவின் காரணத்தால் சரீரமுண்டானது என்பது கருத்து. (10)

## 2. உடம்பின் பயன்.

**1. உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லா
முடம்பினி லுத்தமனைக் காண்.**

(பதவுரை.) உடம்பினை=சரீரத்தை, பெற்ற = அடைந்த, பயன் ஆவது எல்லாம்=பிரயோசனமாவது, உடம்பினில் = சரீரத்திலுள்ள, உத்தமனை=கடவுளை, காண்=தரிசிப்பதற்காகும். (எ-று.)

(கருத்துரை) சரீரத்தின்பயன் ஈஸ்வரனைக் காணுதல் என்பது கருத்து.

(விசேஷவுரை.) சர்வேஸ்வரன் ஜீவான்மாக்களிடத்தில்வியாபித்திருக்க வேண்டியது அவனுடைய கடைமையாகையால் 'உடம்பினி லுத்தமனைக்காண்' என்றார். (1)

## 2. உணர்வாவ வெல்லா முடம்பின் பயனே யுணர்க வுணர்வுடை யார்.

(பதவுரை.) உணர்வாவ=உணர்சசியாவன, எல்லாம்=யாவும், உடம்பின்=தேகத்தின், பயன்=பிரயோசனமாகும், (அதை) உணர்வு உடையார் = நல்லுணர்ச்சி யுள்ளவர்கள், உணர்க = அறிந்து கொள்ளக்கடவர், (எ-று,)

(கருத்துரை.) ஆன்மாக்களுக் குண்டாயிருக்கின்ற உணர்சசி சரீரங்களின் பிரயோசனமேயாம் என்பது கருத்து.

சரீரங்களின் பிரகிருதிகளுக்குத்தகுந்த உணர்சசியையேஆன்மாக்கள் அடைகின்றன வென்பார், 'உணர்வாவவெல்லா முடம்பின்பயனே' எனவும், இவ்விஷயத்தை உணர்ச்சி யுடையவர்களே அறிந்துகொள்ளக் கடவர்களென்பார். 'உணர்கவுணர் வுடையார்' எனவுங கூறினர்.

சரீரத்தின் உணர்சசியே ஆன்மா அடையுமென்றதை;
"மாதாவுதரத்தில் மலமிகில்மந்தனும்" என்பதிஞலறிக. (2)

## 3. ஒருபயனவை துடம்பின் பயனே தருபயனுஞ் சங்கரனைச் சார்.

(பதவுரை.) ஒரு=ஒப்பற்ற, பயனாவது=பிரயோசன மாவது, உடம்பின்=சரீரத்தினது, பயனே=பிரயோசனமாகும், (அதாவது) தரு=கொடுக்கின்ற, பயனும்=பிரயோசனமாகிய, சங்கரனை=சிவ பெருமானை, சார்=அடைதலாம். (எ-று.)

(கருத்துரை.) சரீரத்தின் பயனாவது சிவபெருமானைச் சேர்த லாகும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) ஒருபயன் என்றது=வீட்டையடைதல். இதையடையச் சங்கரனைச் சேரவேண்டுமென்பார், 'தருபயனுஞ்சங் கரனைச்சார்' என்றார். (3)

## 4. பிறப்பினாற் பெற்ற பயனாவ வெல்லாந் துறப்பதாந் தூநெறிக்கட் சென்று.

(பதவுரை.) பிறப்பினால்=சன்மத்தினால், பெற்ற = அடைந்த, பயனாவ எல்லாம்=பிரயோசனங்களெல்லாம், தூநெறிக்கண்சென்று=உயர்ந்த மார்க்கத்திற்போய், துறப்பது ஆம் = சர்வ இன்பங்களையும் விட்டொழிவதாகும். (எ-று.)

(கருத்துரை.) இந்தப்பிறவியினாலாகும் பயனாவது சர்வ இன் பங்களையுந் துறப்பதாகும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) பிறவிகளில் மானிடப்பிறவி விசேடித்ததாக லின், இப்பிறவியிலேயே ஈஸ்வரனை யடையவேண்டு மென்பார், 'துறப்பதாந்தூ நெறிக்கட்சென்று' என்றுகூறினார். (4)

## 5. உடம்பினா லன்றி யுணர்வுதா னில்லை யுடம்பினா லுன்னியதே யாம்.

(பதவுரை.) உடம்பினால்=சரீரத்தினால், அன்றி = அல்லாமல் உணர்வுதான்=உணர்ச்சியானது; இல்லை=உண்டாவதில்லை, (ஆகை

யால் அவ்வுணர்ச்சி) உடம்பினால்=சரீரத்தினால், உன்னியதே ஆம்= நினைக்கப்பட்டதே யாகும். (எ-று)

(கருத்துரை.) உடம்பினால் உணர்சசியுண்டாவதேயன்றி வேறொன்றினாலு மன்று என்பது கருத்து.

(விசேஷவுரை.) உணர்ச்சியானது உடம்பினா லுன்னப்பட்டதேயென்பார், 'உடம்பினாலுன்னியதேயாம்' எனக்கூறினார். (5)

## 6. மாசற்றகொள்கை மனத்திலடைந்தக்கால் ஈசனைக் காட்டு முடம்பு.

(பதவுரை.) மாசு அற்ற=குற்றம் நீங்கிய, கொள்கை = குணமானது, மனத்தில் = மனத்தில், அடைந்தக்கால்= உண்டானால், உடம்பு=சரீரமானது, ஈசனை=சர்வேஸ்வரனை, காட்டும் = உணர்விக்கும். (எ-று.)

(கருத்துரை.) உடம்பானது மனத்திலுள்ள மாசற்றவுடன் கடவுளை உணர்விக்கும் என்பது கருதது.

(விசேஷவுரை.) சரீரம் மாயா சம்பந்தப்பட் டிருப்ப தாகையால் அதிலுள்ளடங்கிய மனமானது சீக்கிரததில் சுத்தமடையாதென்பதை நோக்கி 'மாசற்றகொள்கை மனத்திலடைந்தக்கால்' எனவும், அங்ஙனஞ் சுத்தமடைந்தால் அந்தச்சரீரத்தால் சர்வேஸ்வரனைக் காணலாகுமென்பார், 'ஈசனைக்காட்டும் உடம்பு' எனவுங் கூறினார். (6)

## 7. ஓசை யுணர்வுக ளெல்லாந் தருவிக்கு நேசத்தா லாய வுடம்பு.

(பதவுரை.) ஓசை = சததம்முதலிய, உணர்வுகள் எல்லாம்= உணர்சசிகளை யெல்லாம், நேசத்தால்=ஸ்ரீபுருடர்களது விருப்பத்தால், ஆய=உண்டான, உடம்பு=சரீரமானது, தருவிக்கும் =உண்டாக்கும். (எ-று.)

(கருத்துரை.) பஞ்சதன்மாத்திரைகளையும் சரீரமானது கொ க்கும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) ுரைசென்று ஒன்றைச்சொல்லியிருந்தாலும் னம்பற்றி மற்றைய பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் நான் சையுங்கொள்க. உடம்பின் தத்துவ அளவுப்படியே அறிவுகள் ண்டானதென்பார், இங்ஙனங் கூறினூர். (7)

## 8. உயிர்க்குறுதி யெல்லா முடம்பின் பயனே அயிர்ப்பின்றி யாதியை நாடு.

(பதவுரை.) உயிர்க்கு=ஆன்மாவுக்கு, உறுதி எல்லாம்=உறுதி யைத்தருவது, உடம்பின=சரீரத்தின், பயன் ஏ = பிரயோசனமே பாகும், (ஆகையால்) அயிர்ப்பு இன்றி = சந்தேகமில்லாமல், ஆதி யை=முதலவனை, நாடு=விரும்பு. (எ-று)

(கருத்துரை.) சரீரமானது உயிர்க்குறுதியைத் தருவதால் அதை ஆதாரமாகக்கொண்டு சர்வேஸ்வரனை விரும்பு என்பது கருத்து.

(விசேஷவுரை.) உடம்பில்லையானல் உயிர்க்குறுதிதேட இய லாதென்பார். 'உயிர்க்குறுதியெல்லாம் உடம்பின்பயனே' என வும், அதைக்கொண்டு இறைவனை நாடவேண்டுமென்பார், 'அயிர் ப்பின்றியாதியை நாடு' எனவுங் கூறினூர். (8)

## 9. உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம் திடம்பட வீசனைத் தேடு.

(பதவுரை.) உடம்பினை=சரீரத்தை, பெற்ற=அடைந்த, பய னவ எல்லாம் = எல்லாப்பிரயோசனங்களும், திடம்பட = உறுதி யாக, ஈசனை=சர்வேஸ்வரனை, தேடு=ஆராய்வதாகும். (எ-று.)

(கருத்துரை.) சரீரங் கிடைத்தபோது சர்வேஸ்வரனை ஆராய்ந்தறியவேண்டும். என்பது கருத்து.

(விசேஷவுரை.) எல்லாப்பிறவிகளிலும் அரியதாகிய மானிடப்பிறவியை எடுத்துள்ளவர்கள் சர்வேஸ்வரனை யடையவேண்டியது கடமையென்பார் இங்ஙனங்கூறினர். (9)

**10.** அன்னத்தா லாய வுடம்பின் பயனெல்லா
முன்னோனைக் காட்டி விடும்.

(பதவுரை.) அன்னத்தால் = போஜனத்தால், ஆய=உண்டான, உடம்பின்=சரீரத்தின், பயன் எல்லாம்=சர்வ பிரயோஜனமாவது, முன்னோனை=சர்வேஸ்வரனை, காட்டிவிடும் = உணர்த்துவிக்கும். (எ-று.)

(கருத்துரை.) சரீரத்தின் பயனாவது சர்வேஸ்வரனை உணர்த்துவதாம் என்பது கருத்து.

(விசேஷவுரை.) சரீரத்திற்கு அன்னமே ஆதாரமாயுள்ளதென்பார், 'அன்னத்தாலாயவுடம்பின்' எனவும்.ஆன்மாவுக்குச் சரீரமில்லாவழி சிவபெருமானைக்காண வொண்ணாதென்பார், 'பயனெல்லா முன்னோனைக் காட்டிவிடும்' எனவுங்கூறினர். (10)

## 3. உள்ளுடம்பின் நிலைமை.

**1.** கற்கலாங்கேட்கலாங் கண்ணாரக்காணலா
முற்றவுடம்பா லாய வுணர்வு.

(பதவுரை.) உற்ற = பொருந்திய, உடம்பால் = உள்ளுடம்பினால், ஆய=உண்டான, உணர்வு=அறிவானது, கற்கலாம்=கற்பத

ற்குமாகும், கேட்கலாம்=கேட்பதற்குமாகும், கண்ணார = கண்கள் நிரம்ப, காணலாம்=காண்பதற்கு மாகும். (எ-று.)

(கருத்துரை.) உள்ளுடம்பிலுண்டான வுணர்ச்சியானது சகல காரியங்களுக்கும் அநுகூலமாகும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) சூக்குமதேகமாகிய தத்துவதேகமானது ஆன்மாவுக்கில்லை யாயின் எந்தக்காரியமும் நடவாதென்பார், 'கற்கலாங் கேட்கலாங் கண்ணாரக்காணலா முற்றுடம்பாலாயவுணர்வு' எனக்கூறினார். (1)

**2. வெள்ளிபொன் மேனிய தொக்கும்வினையு**
**வுள்ளுடம்பி னாய வொளி. [டைய**

(பதவுரை.) வினையுடைய=வினையினாலுண்டான, உள் உடம்பின்=சூட்சுமதேகத்தின், ஆய=உண்டான, ஒளி = தேஜஸானது, வெள்ளி=வெள்ளி, பொன்=பொன்,(இவைகளுடைய) மேனியது=சொரூபத்தை, ஒக்கும்=ஒப்பாகும். (எ-று.)

(கருத்துரை) சூக்குமதேகத்தின் தேஜஸானது வெள்ளியையும், பொன்னையும் போலவிளங்குவதாம் என்பது கருத்து.

(விசேஷவுரை.) உள்ளுடம்பின் ஒளிதேஜோமய முடையதென்பார், 'வெள்ளி பொன்மேனிய தொக்கும்வினையுடைய - உள்ளுடம்பினாய வொளி' எனக்கூறினார். (2)

**3. சென்றுண்டுவந்து திரிதரு முள்ளுடம்பு**
**மென்றுங் கெடாத திது.**

(பதவுரை) இது உள்ளுடம்பு=இந்த உள்ளுடம்பானது, சென்று=வெளிப்பட்டு, உண்டு=புசித்து, வந்து=திரும்பிவந்து, திரிதரும்=திரியும். (ஆகையால்) என்றும்=எப்பொழுதும், கெடாதது=அழியாததாகும். (எ-று.)

(கருத்துரை) சூக்ஷ்ம சரீரமானது சர்வகாரியங்களும் செய்து திரிந்துவருவதால் என்றுங்கெடாததா யிருக்கும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) சூக்கும சரீரம் என்பது தத்துவக் கூட்டமாகையால் அது தூலசரீர முள்ளவரைக்கும் இருந்தே யாகவேண்டுமென்பார், 'உள்ளுடம்பென்றுங் கெடாததிது' எனக்கூறினர். (3)

## 4. வருபய னுண்டு மகிழ்ந்துடலை நிற்கு மொருபயனைக் காட்டு முடம்பு.

(பதவுரை.) வரு=உண்டாகின்ற, பயன் = பிரயோசனத்தை, உண்டு=அநுபவித்து, மகிழ்ந்து=சந்தோஷித்து, உடலை = ஸ்தூல சரீரத்துடன், நிற்கும்=கலந்திருக்கின்ற, உடம்பு = சரீரமானது, ஒருபயனை=ஒப்பற்ற பிரயோசனத்தை, காட்டும் = உணர்த்துவிக்கும். (எ-று.)

(கருந்துரை.) சூக்குமசரீரமானது ஸ்தூலசரீரத்துடன் கலந்திருந்து சர்வபிரயோசனங்களையும் ஆன்மாவுக்குக்காட்டும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) சூக்கும சரீரமானது ஆன்மாவுக்குசகலபோகங்களையும் உண்டாக்கும் என்பார் இங்ஙனம் கூறினர். (4)

## 5. அல்லற் பிறப்பை யகற்றுவிக்கு மாய்ந்தா தொல்லை யுடம்பின் றொடர்பு. [ய

(பதவுரை.) ஆய்ந்த=ஆராய்ந்து, ஆய=உண்டான, தொல்லை-பழைமையாகிய, உடம்பின்=சரீரத்தினது, தொடர்பு=தொடர்ச்சியானது, அல்லல்=தன்பத்தை விளைவிக்கின்ற, பிறப்பை=ஜென்மத்தை, அகற்றுவிக்கும்=நீக்கும். (எ-று.)

(கருத்துரை.) சூக்கும சரீரமானது பிறவியை ஒழிக்கும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) சூக்கும சரீரமானது பிறவிநோயை யொழிக்கு மென்பார், 'அல்லற்பிறப்பை யகற்றுவிக்கு மாய்ந்தாய தொல்லையு டம்பின் றொடர்பு' எனக்கூறினர். (5)

## 6. நல்வினையுந் தீவினையு முண்டு திரிதருஞ் செய்வினைக்கும் வித்தா முடம்பு.

(பதவுரை.) உடம்பு = சூக்கும சரீரமானது, நல்வினையும் = நல்வினைகளையும், தீவினையும் = தீவினைகளையும், உண்டு = அநுபவித்து, திரிதரும் = திரியும், (அன்றி) செய் = உயிர்களால் செய்யப்படுகின்ற, வினைக்கும் = இருவினைகளுக்கும், வித்து ஆம் = காரணமாகும். (எ-று.)

(கருத்துரை.) சூக்கும சரீரமானது வினைகளை யநுபவிக்கவும், செய்யவுங் காரணமாயமையும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) ஸ்தூல தேகத்தால பயனின்றென்பார், 'நல்வினையுந் தீவினையு முண்டு திரிதருஞ் செய்வினைக்கும் வித்தாமுடம்பு' எனக்கூறினர். (6)

## 7. உள்ளுடம்பின் வாழ்வன வொன்பதுமே கள்ளவுடம் பாகி விடும். |யைக்

(பதவுரை.) உள் உடம்பின் = சூக்குமதேகத்தில், வாழ்வன = வாழ்பவைகளாகிய, ஒன்பதும் = நவத்துவாரங்களும், ஏழை = உயிர்களுக்கு, கள்ளவுடம்பு = திருட்டுஉடம்பாக, ஆகிவிடும் = ஆகும்.

(கருத்துரை.) சூக்குமசரீரமானது நவத்துவாரங்களோடுகூடி வாழ்வதாகும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) ஸ்தூலசரீரத்தின் உட்கிடையாய் நவத்துவாரங்களோடு கூடியதேயாமென்பார், இங்ஙனங்கூறினர். (7)

8. பொய்க்கெல்லாம்பாசனமா யுள்ளதற்கோ
மெய்க்குள்ளா மாயவுடம்பு. [ர்வித்தாகு

(பதவுரை.) மெய்க்கு=சரீரத்திற்கு, உள் ஆம் = உள்ளேயிருக்கின்ற, மாயஉடம்பு=சூக்குமசரீரமானது, பொய்க்குஎல்லாம்=சர்வ பொய்களுக்கும், பாசனம்ஆய்=ஆதாரமாக, உள்ளதற்கு = இருக்கின்ற சரீரததிற்கு, ஓர்வித்து ஆகும்=ஒரு ஆதாரமாகும். (எ-று.)

(கருத்துரை.) பொய்யாகிய ஸ்தூலசரீரத்திற்கு சூக்குமசரீரமானது ஆதாரமாகும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) சரீரமானது நிலையில்லாத மண்பாண்டமாகுமென்பார், 'பொய்க்கெல்லாம்பாசனமாயுள்ளது' எனவும், ஸ்தூலசரீரமானது சூக்கும சரீரமில்லாவழிநிலையாதெனபார், 'வித்தாகுமெய்க்குள்ளாக மாயவுடம்பு' எனவுங்கூறினார்.

சரீரம் மண்பாண்ட மென்றதை;

"காகமோடு கழுகலகை நாய்நரிகள்சுற்று
சோறிடுந்துருத்தியை
காலிரண்டுநவவாசல் பெற்றுவளர்
காமவேணடன சாலையை
மோகவாசை முறியிட்டபெட்டியை
முமலமிகுத்தொழுகு கேணியை
மொய்த்துவெங கிருமிதத்துகும்பியை
முடங்கலார் கிடைசரக்கினை
மாகவிந்திரதநு மின்னையொத்திலக
வேதமோதிய குலாலனா
வனையவெய்யதடி காரனையமன்
வந்தடிக்கு மொருமட்கலத்

தேகமானபொயை மெய்யெனக்கரு
மையமையை யிசைவாடவோ
தெரிவதற்கரிய பிரயமேயமல
சிற்சுகோதய விலாசமே'' என்பதினாலறிக. (8)

## 9. வாயுவினா லாய வுடம்பின்பயனே யாயுவி னெல்லை யது.

(பதவுரை.) வாயுவினால் = பிராணவாயுவினால், ஆய = உண்டான, உடம்பின்=சரீரத்தினது, பயன்=பிரயோசனமாவது, ஆயுவின்=ஆயுசின், எல்லையது=அளவினையுடையதாகும். (எ-று.)

(கருத்துரை.) பிராணவாயுவானது விந்துவிற்கலந்து பாய்ந்த அளவே ஆயுசின் அளவாகும் என்பது கருத்து.

(விசேஷவுரை) ஒவ்வொருதேகங்களுக்கும் ஆயுளானது விந்துவின்கலந்துசெல்லும் பிராணவாயுவின் அளவினைக்கொண்டதேயாகுமென்பார், இங்ஙனங்கூறினர். (9)

## 10. ஒன்பதுவாசலு மொக்க வடைத்தக்கா லன்பதி லொன்று மரன்.

(பதவுரை.) ஒன்பதுவாசலும்=நவத்துவாரங்களையும், ஒக்க= ஒருப்பட, அடைத்தக்கால்=மூடினால், அன்பு அதில் = அன்பில், அரன்=சிவபெருமானானவன், ஒன்றும்=சேர்தலாகும். (எ-று.)

(கருத்துரை.) நவத்துவாரங்களையும் மூடி யோகஞ்செய்வோர்களுடைய அன்பில் சிவபெருமான் கலந்திருப்பவனாவான் என்பது கருத்து.

(விசேஷவுரை.) யோகஞ் செய்வோர் நவத்துவாரங்களையும் அடைத்தே செய்யவேண்டியதென்பார், 'ஒன்பதுவாசலுமொக்கவடைத்தக்கால்' எனவும்,அவர்களுடையஆசையில்சர்வேஸ்வரன்கலந்திருப்பானென்பார், 'அன்பதிலொன்றுமரன்' எனவுங்கூறினர்.

யோகஞ்செய்வோர் நவத்துவாரங்களையும் அடைக்கவேண்டு மென்றதை;

"கண்மூடியொருகண மிருக்கவென்றாற்பாழ்த்த
கர்மங்கள் போராடுதே" என்று ஸ்ரீதாயுமானவர் சொல்லி யிருப்பதினாலறிக.

அன்பில் சிவம்கலக்கும் அவசரமானது அன்பும்சிவமும் நன் றேயாகும் என்றதை;

"அன்புசிவமிரண் டென்ப ரறிவிலார்
அன்பேசிவமாவ தியாருமறிகிலார்
அன்பேசிவமாவ தியாருமறிந்தபின்
அன்பேசிவமா யமர்ந்திருப்பாரே" என்பதினாலறிக.

## 4. நாடிதாரணை.

### 1. எழுபத்தீ ராயிர நாடி யவற்றுள் முழுபத்து நாடிமுதல்.

(பதவுரை.) எழுபத்தீராயிரம் = எழுபத்திரண்டாயிரம் என் னுந்தொகையினையுடைய, நாடி அவற்றுள் = நாடிகளில், முதல் = முதன்மையாகிய, நாடி = நாடிகளாவன, முழுபத்து = பத்தாகும்.

(கருத்துரை.) சரீரத்திலுள்ள எழுபத்திரண்டாயிர நரம்புக ளில் முதன்மையாயுள்ளவை பத்துநாடிகளாகும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) சரீரமானது எழுபத்தீராயிரம் என்னுந்தொ கையினையுடைய நரம்புகளால் கட்டப்பட்டதென்பார், 'எழுபத்தீ ராயிரநாடி' எனவும், இவைகளில் பத்துநாடிகளே சரீரத்தைப்

போஷிக்கக் கூடியனவென்பார், 'அவற்றுள் முழுபத்து நாடிமுதல்' எனவுங்கூறினார்.

தசநாடிகளாவன = அத்தி, அலம்புடை, இடை, காந்தாரி, நரு, சங்கினி, சிகுவை, சுழிமுனை, பிங்கலை, புருடன் என்பவைகளாம். (1)

**2. நரம்பெனு நாடி யிவையினுக் கெல்லா
முரம்பெறு நாடியொன் றுண்டு.**

(பதவுரை.) நரம்பெனும் = நரம்பென்று சொல்லப்படுகின்ற, நாடி இவையினுக்கு எல்லாம் = எல்லாநாடிகளுக்கும், உரம்பெறும் = பலம்பொருந்திய, நாடி = நாடியாவது, ஒன்றுஉண்டு = ஒன்றிருக்கின்றது. (எ-று.)

(கருத்துரை.) சர்வநாடிகளும் சேர்வதற்கு ஆதாரமான நாடி ஒன்றிருக்கிறது என்பது கருத்து.

(விசேஷவுரை.) நாடிகளுக்கெல்லாம் ஆதாரநாடிஒன்று இருக்கவேண்டுமென்பார், 'நரம்பெனுநாடி யிவையினுக்கெல்லா - முரம்பெறுநாடி யொன்றுண்டு' எனக்கூறினார். (2)

**3. உந்தி முதலா யுறுமுடிகீழ் மேலாய்ப்
பந்தித்து நிற்கும் பரிந்து.**

(பதவுரை.) உந்திமுதலா = வயிறுமுதலாக, உறுமுடி = பொருந்திய சிரசுவரைக்கும், கீழ்மேலாய் = கீழுமேலுமாக, பரிந்து = விரும்பி, பந்தித்துநிற்கும் = கட்டப்பட்டுநிற்கும். (எ-று.)

(கருத்துரை.) சகலநாடிகளுக்கும் ஆதாரஸ்தானம் உந்தியேயாகும் என்பது கருத்து.

ஒவ்வொருமனிதர்களுக்கும் உண்டாயிருக்கின்ற எழுபத்தீராயிரநரம்புகளும் சரீரங்களுக்கு ஆதாரமாயமைவனவாகையால் அவ

நனம் அமையும்போது சரீரத்தைக் காப்பாற்றுதற்கு முக்கியஸ்தானமாகிய உந்தியினின்றே உண்டாகவேண்டுமென்பார், 'உந்திமுதலா' எனவும், அங்ஙனமுண்டான அதுசிரமளவும் இடம்வலமாகப் பின்னிநிற்குமென்பார், 'உறுமுடிகீழ்மேலாய்ப் பந்தித்து நிற்கும் பரிந்து' எனவுங்கூறினர். (3)

## 4. காலொடு கையி னடுவிடத் தாமரை
## நூல்போலு நாடி நுழைந்து.

(பதவுரை.) (அங்ஙனமுண்டான) நாடி = நரம்பானது, காலொடு=கால்களிடத்திலும், கையில்=கைகளிடத்தும், நடுஇடை=நடுவிடங்களிலும், தாமரை நூல்போலும்=தாமரையிலிருந்து எடுக்கின்ற நூலைப்போல, நுழைந்து=(சென்று) கலந்து. (எ-று.)

(கருத்துரை) நாடியானது கால்கைமுதலிய அவயவங்களில் தாமரைநூல்போல் கலந்திருக்கும் என்பது கருத்து.

(விசேஷவுரை) நாடிகளானவை சரீரத்தில் பலவிடத்திலுங் கலந்திருக்குமென்பார், 'காலொடுகையி னடுவிடைத்தாமரை-நூல்போலுநாடி நுழைந்து' எனக்கூறினர். (4)

## 5. ஆதித்தன் றன்கதிர் போலவந் நாடிகள்
## பேதித்துத் தாம்பரந்த வாறு.

(பதவுரை.) ஆதித்தன்தன்=சூரியனுடைய, கதிர்போல=கிரணங்களைப்போல, அநாடிகள்=அந்நரம்புகள், பேதித்து = பிறழ்ந்து, தாம்=அவைகள், பரந்தவாறு=கலந்தவிதமாகும். (எ-று.)

(கருத்துரை.) சரீரத்தின்கண் எழுபத்தீராயிர நாடிகளும் சூரியனுடைய கிரணங்களைப்போல எங்கும்மாறிமாறிக் கலந்திருக்கும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) நாடிகள் கத்தரிக்கோல்போல் வலமிடமாக மாறியிருப்பதே சுபாவமாமென்பார், 'நாடிகள்பேதித்து நாமமாகத் தவாறு' எனக்கூறினர். (5)

6. மெய்யெல்லா மாகி நரம்போ டெலும்பி
பொய்யில்லை நாடிப் புணர்வு. [சைந்து

(பதவுரை.) நாடி=நரம்பினது, புணர்வு=சேர்க்கையானது, மெய்எல்லாம் ஆகி=சரீரம்முழுமைக்குமாய், நரம்போடு எலும்பு=நரம்புடன் எலும்புகளும், இசைந்து=சேர்ந்துநிற்பதாகும், (ஆகையால்இது) பொய் இல்லை=உண்மையாகும். (எ-று.)

(கருத்துரை.) நாடிகள் நரம்புகளிலும், எலும்புகளிலுங் கலந்து சரீரம் முழுமைக்குமிருக்கும் என்மது கருத்து.

(விசேஷவுரை ) நாடிகளில்லாதபோது சரீரம் நில்லாதென்பார், 'மெய்யெல்லாமாகி நரம்போடெலும்பிசைந்து பொய்யில்லை நாடிப்புணர்வு' எனக்கூறினர். (6)

7. உந்தி முதலாகி யோங்காரத் துட்பொரு
நின்றது நாடி நிலை. [ளாய்

(பதவுரை.) உந்திமுதலாகி = கொப்பூழ்முதலாய், ஓங்காரத்து=பிரணவத்திற்கு, உட்பொருளாய் = அந்தர் முகப்பொருளாய், நாடிநிலை=நரம்புகளின் நிலையானது, நின்றது=இருந்தது. (எ-று.)

(கருத்துரை ) நாடிகளின் நிலையானது உந்திமுதல் சரீரத்தில் பின்னப்பட்டுநின்றது என்பது கருத்து.

நாடிகள் சரீரத்தின் நிலைப்பதற்கு ஆதாரமாயுள்ள உந்தியின் கண்ணேதோன்றி நிற்பனவாகலான், 'உந்திமுதலாகி யோங்காரத்துட்பொருளாய்நின்றது நாடிநிலை' எனக்கூறினர். (7)

8. நாடிகளூடுபோய்ப் புக்கநலஞ்சுடர்தான்
வீடுதருமாம் விரைந்து.

(பதவுரை) நாடிகள்=நரம்புகளில், ஊடுபோய்=ஊடுருவிச்சென்று, புக்க=புகுந்த, நலஞ்சுடர்தான்=நன்மைமிகுந்த தேஜோமயப்பொருளானது, விரைந்து=சீக்கிரம், வீடுதரும் ஆம் = மோட்சத்தைக் கொடுக்கும். (எ-று.)

(கருத்துரை.) நாடிகளில் சூட்சரூபமாய்க் கலந்திருக்குங் கடவுளை உணர்ந்தால் அவர்வீடுதருவர் என்பது கருத்து.

(விசேஷவுரை.) கடவுள் பரிபாகமில்லார்க்கு உணரப்படாறுகையாலும் அவன் ஒவ்வொரு ஆன்மாக்களிலுங் கலந்திருக்கவேண்டியவனுகையாலும் அங்ஙனங்கலக்கும்வழி சூட்சுமரூபமாய்க் கலப்பானென்பார், 'நாடிகளூடுபோய்ப் புக்க நலஞ்சுடர்தான்' எனவும், அவனை உள்ளபடியே உணர்ந்தவர்க்கு மோட்சம்வருமென்பார், 'வீடுதருமாம்விரைந்து' எனவுங்கூறினர். (8)

9. நாடிவழக்க மறிந்து செறிந்தடங்கி
நீடொளிகாண்ப தறிவு.

(பதவுரை.) நாடி = நரம்புகளின், வழக்கம் = வழக்கங்களை, அறிந்து=உணர்ந்து, செறிந்து=நெருங்கி, அடங்கி=ஒடுங்கி, நீடு=மிகுந்த, ஒளி=தேஜஸை, காண்பது = தெரிசிப்பது, அறிவு = அறிவாகும். (எ-று.)

(கருத்துரை.) நாடியின் வழக்கத்தை யறிந்து அடங்கிச சிவபெருமானைக்காண்பது அறிவாகும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) அறிவானது சர்வேஸ்வரனை அறிவதற்கு உரியதாகுமென்பார், 'நீடொளிகாண்பதறிவு' எனக்கூறினர். (9)

**10.** அறிந்தடங்கி நிற்குமந் நாடிகடோறுஞ்
செறிந்தடங்கி நிற்குஞ் சிவம்.

(பதவுரை.) அறிந்து=உணர்ந்து, அடங்கி=ஒடுங்கி, நிற்கும்=இருக்கின்ற, அநாடிகள்தோறும்=அந்த நாடிகளிலெல்லாம், சிவம்-சிவமானது, செறிந்து = நிறைந்து, அடங்கிநிற்கும் = மறைந்திருக்கும். (எ-று.)

(கருத்துரை.) சிவபெருமான் நாடிகளிலெல்லாம் தினமுங் கலந்திருப்பார் என்பது கருத்து.

(விசேஷவுரை.) சிவபெருமானானவன் நாடிகளிலெல்லாங் கலந்து நிற்குமென்பார், 'அறிந்தடங்கி நிற்குமந் நாடிகடோறுஞ் செறிந்தடங்கி நிற்குஞ்சிவம்' எனக்கூறினார். (10)

## 5. வாயுதாரணை.

**1.** மூலத்திற்றோன்றி முடிவிலிருநான்காகிக்
கால்வெளியிற் பன்னிரண்டாங்காண்.

(பதவுரை.) மூலத்தில்=மூலாதாரத்தில், தோன்றி=உண்டாய், முடிவில்=முடிவின்கண். இருநான்குஆகி=எட்டாகி, கால்=வாயுவானது, வெளியில்=வெளியினிடத்தில், பன்னிரண்டுஆம்=பன்னிரண்டாகும், காண்=பார்ப்பாயாக. (எ-று.)

(கருத்துரை.) வாயுவானது மூலாதாரத்திலுண்டாய் முடிவில் எட்டாகப் பரந்து வெளிப்படும்போது பன்னிரண்டாகநிற்குமென்பதுகருத்து. (1)

**2.** இடைபிங்கலைகளி ரேசகமாற்றி
லடையு மரணு மருள்.

(பதவுரை.) இடை=இடைகலையிலும், (இடதுநாசியிலும்) பிங்கலைகளில்=பிங்கலைகளிலும், (வலதுநாசியிலும்) இரேசகம்ஆற்றில்=இரேசகஞ்செய்தால், அரனார்அருள் = சிவபெருமானுடைய திருவருளானது, அடையும்=உண்டாகும். (எ-று.)

(கருத்துரை) நாசித்துவாரங்களினால் இரேசக, பூரக, கும்பகங்களைச்செய்தால் சிவபெருமானுடைய திருவருள்கைகூடும் என்பதுகருத்து. (2)

## 3. அங்குலியான்மூடி முறையாலிரேசிக்கிற் பொங்குமாம் பூரகத்தினுள்.

(பதவுரை.) அங்குலியால்=விரல்களினால், மூடி=மூடி, முறையால்=கிரமத்தோடு, இரேசிக்கில்=இரேசகஞ்செய்தால், பூரகத்தினுள்=பூரகத்திலே, பொங்குமாம்=விளங்கும். (எ-று.)

(கருத்துரை.) விரல்களினால் நாசியை மூடவேண்டிய கிரமப்படிமூடி இரேசித்து அதைப்பூரித்தால் சிவபெருமானுடைய திருவருள் விளங்கும் என்பதுகருத்து. (3)

## 4. எண்ணிலியூழி யுடம்பாயிரேசிக்கி னுண்ணிலைமை பெற்றதுணர்வு.

(பதவுரை.) எண்ணிலியூழி=அநேககாலங்கள், உடம்பு=சரீரத்தில், ஆய்=ஆய்ந்து,இரேசிக்கில்=இரேசகஞ்செய்தால்,உணர்வு=உணர்ச்சியானது, உள்நிலைமைபெற்றது = அகநிலைமையை யடைந்ததாகும். (எ-று.)

(கருத்துரை.) அநேககாலங்கள்வரைக்கும் பிராணாயாமஞ் செய்தால் அகமானது உறுதிப்பாட்டையடையும் என்பது கருத்து. ()

## 5. மயிர்க்கால் வழியெல்லா மாய்கின்றவாயு வுயிர்ப்பின்றி யுள்ளேபதி.

(பதவுரை.) மயிர்க்கால் வழியெல்லாம்=மயிர்க்கால் வழிகளி லெல்லாம், மாய்கின்ற=செலவாகின்ற, வாயு=வாயுவை, உயிர்ப்பி ன்றி=பெருமூச்சுவிடாமல், உள்ளே=அந்தர்முகத்தில், பதி=அடக் கஞ்செய். (எ-று.)

(கருத்துரை.) மயிர்க்கால்கள் வழியெல்லாம் வீணாகமாய்ந்து விடுகின்ற வாயுவைஉள்ளே அடக்கஞ் செய்யவேண்டும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) மயிர்க்கால்களில் வாயு செல்லுவது சுபாவ ந்தானே யென்பார், 'மயிர்க்கால் வழியெல்லா மாய்கின்றவாயு' எனவும், மூசசைஉள்ளேயடக்கவேண்டு மென்பார், 'உயிர்ப்பின்றி யுள்ளேபதி' எனவுங்கூறினார். (5)

## 6. இரேசிப்பதுபோலப் பூரித்துநிற்கிற்
## றராசுமுனை நாக் கதுவேயாம்.

(பதவுரை.) இரேசிப்பதுபோல=இரேசகஞ் செய்வதுபோல. பூரித்துநிற்கில்=பூரகஞ்செய்திருந்தால், நாக்கது=நாவானது, தரா சுமுனையாம்=தராசுமுனைபோல் நிற்கும். (எ-று.)

(கருத்துரை) இரேசகத்தின் அளவைப்போலவே பூரகமுஞ் செய்தால் நாவானது தராசின்முனையைப்போல்நடுவுநிலைமையாய நிற்கும் என்பதுகருத்து.

(விசேஷவுரை.) யோகநூலார் இரேசகத்தையும் பூரகத்தை யும் தாங்கள் பழகிய நூற்களிற் சொல்லியவண்ணம் முறையுடன் செய்து அண்ணாக்கு பெரியநாக்கு இவைகளை உண்ணாக்குக்கு மத் தியமாக அசையாமல் நிறுத்தவேண்டுமென்பார், 'இரேசிப்பதுபோ லப்பூரித்துநிற்கிற் றராசுமுனை நாக்கதுவேயாம்' என்றுகூறினார்()

## 7. கும்பகத்தினுள்ளே குறித்தரனைத் தாணோ
## றாய்ப்பிபோனிற்குந் தொடர்ந்து. [க்கிற்

(பதவுரை.) கும்பகத்தின்உள்ளே=கும்பகத்தில், அரனை=சிவ பெருமானை, குறித்து=பார்த்து, தான்=தான், நோக்கில்=தரிசித் தால், தொடர்ந்து = வாயுவானதுதொடர்ந்து, தும்பிபோல் நிற் கும்=தும்பியைப்போலிருக்கும். (எ-று)

(கருத்துரை.) வாசியை எந்தப்பக்கத்திலும் செல்லவொட்டா மல் நிறுத்துவதாகிய கும்பகத்தில் வாயுவானது தும்பியைப்போல் தொடர்ந்துநிற்கும் என்பது கருத்து.

(விசேஷவுரை) கும்பகஞ்செய்யுங்கால் வாசியானது தும்பி யின் சலனம்போல் அசையாது நிற்குமென்பார்; 'தும்பிபோல்நிற் குந்தொடர்ந்து' எனக்கூறினர். (௭)

## 8. இரேசகபூரக கும்பகமாற்றிற் றராசுபோனிற்குந் தலை.

(பதவுரை.) தலை=தலையானது, இரேசகம் = ரேசகத்தையும், பூரகம்=பூரகத்தையும், கும்பகம்=கும்பகத்தையும், ஆற்றின்=கிரம ப்படிசெய்தால், தராசுபோல் = துலையின்முனையைப்போல், நிற்கும்=இருக்கும். (எ-று.)

(கருத்துரை.) இரேசக, பூரக, கும்பகங்களை முறையேசெய் தால் அவர்களுக்கு தலையானது தராசுமுனையைப்போல் நிற்கும் என்பதுகருத்து. (௮)

## 9. வாயுவழக்க மறிந்து செறிந்தடங்கி லாயுட்பெருக்க முண்டாம்.

(பதவுரை.) வாயு=கலைகளின், வழக்கம்=மாறும்வழக்கத்தை, அறிந்து=நன்றாயுணர்ந்து, செறிந்து அடங்கில் = ஒருமித்துஒடுங்கி னல், ஆயுள்பெருக்கம் = ஆயுசுவிர்த்தியானது, உண்டு ஆம்=உண் டாகும். (எ-று.)

(கருத்துரை.) வாயுகூடியேஉண்டாவது சரீரமாகையால் அவ் வாயுக்களின் தன்மைகளை நன்றாயுணர்ந்து அவைகளை அடக்கி னால் ஆயுசுவிர்த்தியை யடையும் என்பது கருத்து. (9)

**10. போகின்றவாயு பொருந்திற்சிவமொக்குந்**
**தாழ்கின்ற வாயுவடக்கு.**

(பதவுரை.) போகின்ற வெளிப்பட்டுப்போகின்ற, வாயு=வா யுவானது, பொருந்தில்=சரீரத்திற்குள் அடங்கினால், சிவம்ஒக்கும்= சிவத்திற்கொப்பாகும், (ஆகையால்) தாழ்கின்ற=அங்ஙனங்கழிந்து போகின்ற, வாயு=வாயுவுனிலே, அடக்கு=சரீரத்தின்கண்ணே நிறு த்துக. (எ-று.)

(கருத்துரை.) வெளியே வீணாகப்போகின்ற வாயுவை உள்ளே யே யடக்கினால் சிவபெருமானாக ஆகக்கூடும் என்பது கருத்து. ()

# 6. அங்கிதாரணை.

**1. அந்தத்திலங்கி யழல்போலத்தானோக்கிற்**
**பந்தப் பிறப்பறுக்க லாம்.**

(பதவுரை) அந்தத்தில் = கடைசியில், அங்கி = மூலாக்கினி யை. அழல்போல = தேஜஸைப்போல், தான் = யோகியானவன், நோக்கில்=தரிசித்தால், பந்தம்=பற்றுமிடல்புடைய, பிறப்பு=ஜெக் மத்தை, அறுக்கலாம்=நீக்கலாம். (எ-று.)

(கருத்துரை.) யோகிகள் மூலாக்கினியைச் சுழிமுனையில் தரி சித்தால் ஜெக்மத்தை யறவே ஒழித்தவர்களாவார்கள் என்பது கருத்து.

**2** உள்ளும்புறப்பு மொருங்கக் கொழுவூறிற்
கள்ளமல மறுக்கலாம்.

(பதவுரை.) உள்ளும் = அகத்திலும், புறம்பும்=வெளியிலும்— ஒருங்க=ஏகமாக, கொழு=கொழுமையானது, ஊறில் = ஊறுமாகுல், கள்ளம்=வஞ்சனையையுடைய, மலம்=மாய்கையை, அறுக்கலாம்=நீக்கலாம். (எ-று)

(கருத்துரை.) உள்ளும் வெளியும் ஒன்றுகப்பார்ப்போர் மாய்கையை ஒழிப்பவர்களாவார்கள் என்பது கருத்து. (2)

**3.** எரியுங்கழல்போல வுள்ளுறநோக்கிற்
கரியுங் கனலுருவமாம்.

(பதவுரை.) எரியும்=எரிகின்ற, கழல்போல = அக்கினியைப் போல, உள்ளுற = அந்தர்முகத்தில், நோக்கில் = தரிசித்தால், கரியும்=அடுப்புக்கரியும், கனல்உருவமாம் = அக்கினியின் ரூபத்தையடைவதாகும். (எ-று.)

(கருத்துரை.) அந்தர்முகத்தில் அக்கினி தரிசனஞ் செய்ய வேண்டும் என்பது கருத்து. (3)

**4.** உள்ளங்கி தன்னையொருங்கக்கொழுவூறில்
வெள்ளங்கி தானும்விரைந்து.

(பதவுரை.) உள்ளங்கிதன்னை=மூலாக்கினியை, ஒருங்க=ஏகமாக, கொழுவூறில்=கொழுமையானது ஊறினல், விரைந்து=சீக்கிரமாக, வெள்ளங்கிதானும்=அதுவெள்ளங்கியாகும். (எ-று.) (4)

**5.** உந்தியினுள்ளே யொருங்கச்சுடர்பாய்ச்சி
லந்தியழ லுருவமாம்.

(பதவுரை) உச்சியின் உள்ளே = மூலாதாரத்தின்கண், ஒரு = ஏகமாக, சுடர் = அக்கினியை. பாய்ச்சில் = பாய்ச்சினால். அந்நிலையில், உருவம் அழலாம் = சரீரம் அக்கினிமயத்தையடையும் ( )

(கருத்துரை) மூலாதாரத்தில் மூலக்கனலை வளரச்செய்தால் சரீரம் அக்கினிமயத்தையடையும் என்பது கருத்து. ( )

6. ஐயைந்து மாய வகத்து ளெரிநோக்கிற்
பொய்யைந்தும் போகும் புறம்.

(பதவுரை) ஐயைந்தும் = இருபத்தைந்து தத்துவங்களும். மாய-மாய, அகத்துள் = உள்ளே, எரிநோக்கில் = மூலாக்கினியைத் தரிசித்தால், பொய்யைந்தும் = ஐந்து பொய்களும், புறம்போகும் = வெளிப்பட்டுப் போகும். (எ-று.) (6)

7. ஐம்பதோ டொன்று மழல்போலத் தானோக்
கிலும்பரொளியாய் விடும். [கி

(பதவுரை.) ஐம்பதும்ஒன்றும் = ஐம்பத்தோரட்சரங்களையும், அழல்போல = அக்கினிசொரூபமாக, தான் = தான், நோக்கில் = பார்த்தால். உம்பர் = மேலே விளங்குகின்ற, ஒளியாய்விடும் = தேஜோனகைகூடும். (எ-று.)

(கருத்துரை) ஐம்பத்தோரட்சரங்களையும் தேஜோ சொரூபமாகத் தரிசித்தால் சரீரமும் தேஜோமயத்தை யடையும் என்பது கருத்து. (7)

8. தாண்டிஞ் சுடரைத் துளங்காமற் றானோக்
வேண்டுங் குறைமுடிக்கலாம். [கில்

(பதவுரை) ஆண்டும் = தவசிரேஷ்டர்களால் ஆண்டப்படுகி-ன்ற, சுடரை = தேஜோமயப்பொருளை, துளங்காமல் = அசையா

மல். தான் = தான், நோக்கில் = பார்த்தால், வேண்டும் = அவர்களால விரும்பப்படுகின்ற, குறை = குறைவினை. முடிக்கலாம் = நிறைவேற்றலாம் (எ-று)

(கருத்துரை.) எக்காலத்திலும் அழியாத்தன்மையையுடைய இறைவனை உள்ளபடியே உணர்வார்கள் சர்வகுறைகளினின்றும் நீங்குவார்கள் என்பது கருத்து. (8)

## 9. உள்ளத்தாலங்கி யொருங்கக் கொழூஉறில் மெள்ளத்தான் வீடாம் விரைந்து.

(பதவுரை) உள்ளத்தால் = மனதினால், அங்கி = அக்கினியானது, ஒருங்க = முழுமையும், கொழூஉறில் = கொழுவானது விசேஷித்குமானால், வீடு = மோட்சவீடானது, மெள்ளத்தான் விரைந்து = பொறுமையோடு விரைந்து, ஆம் = உண்டாகும். (எ-று)

(கருத்துரை.) மனத்தினால் அக்கினியை வசப்படுத்தவேண்டும் என்பதுகருத்து. (9)

## 10. ஒள்ளிதா யுள்ள சுடரை யுறநோக்கில் வெள்ளியா மாலை விளக்கு.

(பதவுரை.) ஒள்ளிதாயுள்ளசுடரை = விளக்கமுற்றிருக்கின்ற தேஜோமயப்பொருளை, உற = மிகுதியும், நோக்கில் = பார்த்தால், மாலைவிளக்கு = மாலையிலுண்டாகும் விளக்கானது, வெள்ளியாம் = வெள்ளிபோல்விளங்கும். (எ-று.)

(கருத்துரை.) சர்வேஸ்வரனை முழுமையும் உற்றுப்பார்த்தால் தேஜோமயத்தை யடையலாம் என்பதுகருத்து. (10)

## 7. அமுததாரணை.

**1.** அண்ணாக்குத் தன்னை யடைத்தங் கமிர்து
விண்ணோர்க்கு வேந்தனுமாம். [ண்ணில்

(பதவுரை.) அண்ணாக்குதன்னை அடைதது=அண்ணாக்குளன்
ம் மேல்நாக்கை மேல்வழிக்கு அடைத்து, அங்கு = அவ்விடத்தி
லுண்டாகின்ற, அமிர்து=அமிர்ததத்தை, உண்ணில் = பானஞ்செய்
ல், விண்ணோர்க்கு வேந்தனுமாம்=தேவர்களுக்குத் தலைவனான
ந்திரனுமாகலாம். (எ-று.)

(கருத்துரை.) மேல்நாக்கை அவ்விடத்திலுள்ள வழிக்குத்தடை
கவைததுப் பார்த்தாலுண்டாகின்ற அமிர்தத்தைப் பானமாகப்
ருகின்ற யோகிகள் தேவேந்திரபதவியையும் அடைவார்கள்
ன்பது கருத்து. (1)

**2.** ஈரெண் கலையி னிறைந்த வமிர் துண்ணில்
பூரண மாகும் பொலிந்து.

(பதவுரை.) ஈரெண்கலையில்=பதினாறுகலைகளிலும், நிறைந்த-
ணமாயிருக்கின்ற, அமிர்து=அமிர்ததத்தை. உண்ணில்=பானஞ்
ய்தால், பொலிந்து = விளங்கி, பூரணமாகும் = பரிபூரணதசை
டையலாம். (எ-று.)

(கருத்துரை.) பன்னிரண்டுகலைகளிலும் கலந்திருக்கின்ற அமி
த்தைப் பானஞ்செய்தால் பரிபூரண தசையை அடைவதற்குத்
டையில்லை என்பது கருத்து. (2)

**3.** ஓங்காரமான கலசத்தமிர் துண்ணில்
போங்கால மில்லை புரிந்து.

(பதவுரை.) ஓங்காரம் ஆனகலசத்து=பிரணவாகாரமாயிருக்கின்ற கலசத்திலுள்ள, அமிர்துஉண்ணில் = அமிர்தத்தைப் பருகினால், புரிந்து=செய்து, போவகாலமில்லை = இறக்குங்காலம்வருதலில்லையாகும். (எ-று.)

(கருத்துரை) பிரணவாகாரமாயிருக்கின்ற கலசத்தினிடமாகவிருக்கின்ற அமிர்தத்தையுண்டால் அவர்கள் சிரஞ்சீவியாக வாழ்வார்கள் என்பது கருத்து. (3)

## 4. ஆனகலசத் தமிர்தை யறிந்துண்ணில் போனகம் வேண்டாமற் போம்.

(பதவுரை.) ஆன=பொருந்தின, கலசத்து அமிர்தை=பொற்கலசத்திலிருக்கின்ற அமிர்தத்தை, உண்ணில்=பருகினால, போனகம்=சாப்பாடு, வேண்டாமற்போம் = வேண்டியதில்லாமற் போயவிடும். (எ-று.)

(கருத்துரை.) அமிர்தகலசத்தில் நிறைந்திருக்கின்ற அமிர்தத்தை உள்ளன்போடு உண்போர்கள் என்றைக்கும ஆகாரம் வேண்டாத மகாயோகிகளாவார்கள் என்பதுகருத்து. (4)

## 5. ஊறுமமிர்தத்தை யுண்டியுறப் பார்க்கில் கூறும் பிறப்பறுக்க லாம்.

(பதவுரை.) ஊறுமமிர்தத்தை = சுரக்கின்ற அமிர் தத்தை, உண்டிஉற=உண்டியாக, பார்க்கில்=பார்த்தால், கூறும்=சொல்லப்படுகின்ற, பிறப்பு=ஜென்மவேரை, அறுக்கலாம்=ஒழிக்கலாம். ()

(கருத்துரை.) யோக மேலீட்டால் எவனொருவன் அங்குவிளைகின்ற அமிர்தபானஞ்செய்கிறானோ, அவன் இனிவருஞ் ஜென்மங்களை வெகுலேசாக அறுப்பவனாவான் என்பதுகருத்து. (5)

**6. ஞான வொளிவிளக்கா னல்லவமிர் துண்
ஆன சிவயோகி யாம். [ணில்**

(பதவுரை.) ஞான ஒளி=ஞானதேஜஸையுடைய, விளக்கால் = விளக்கினுல், நல்ல = உயர்வாகிய, அமிர்து = அமிர்தத்தை. உண்ணில்=பருகினுல், ஆன =பொருந்தின, சிவயோகியாம் = சிவயோகியாகக்கூடும். (எ-று)

(கருத்துரை.) ஞானத்தையே உள்ளபடி யநுபவித்து அதினுல் விளையக்கூடிய அமிர்தத்தைப்பருகினுல் உண்மையான சிவயோகியாவதற்குத் தடையில்லை என்பது கருத்து. (6)

**7. மேலையமிர்தை விளங்காமற் ருனுண்ணி
காலனை வஞ்சிக்க லாம். [ல்**

(பதவுரை.) மேலை அமிர்தை=மேல்நிலத்தில் விளைந்துவருகின்றஅமிர்தத்தை,விலங்காமல்=ஒழியாமல்=தான் உண்ணில்=தான் பருகுவாளுனுல், காலனை=எமனை, வஞ்சிக்கலாம்=வஞ்சனை செய்யக்கூடும். (எ-று.)

(கருத்துரை) சுழிமுனஸ்தானத்திற்கு மேற்பட்ட ஸ்தானத்தில் உண்டாகின்ற அமிர்தத்தைப் பானஞ்செய்தால் எமன்வருதலில்லை என்பதுகருத்து. (7)

**8. காலனலூக்கக் கலந்தவமிர்துண்ணில்
ஞான மதுவா நயந்து.**

(பதவுரை.) கால் அனல்ஊக்க=காற்றினுலுண்டாகின்ற அனலானது ஊக்க, கலந்த=அதினுல் அவ்விடத்தில் சேர்ந்திருக்கின்ற, அமிர்து உண்ணில்=அமிர்தத்தைப்பருகினுல், நயந்து=விரும்பி, ஞானமதுவாய்=ஞானமானது கைகூடும். (எ-று.)

(கருத்துரை.) சரசம்பந்தமா யிருக்கின்ற அமிர்தத்தை யுண்டால் ஞானமகைகூடும் என்பது கருத்து. (8)

9. எல்லையிலின்னமிர்த முண்டாங் கினிதிருக்கில்
தொல்லை முதலொளியேயாம்.

(பதவுரை.) எல்லையில் இன்னமிர்தம் உண்டு=அளவு சொல்லப்படாத இனிமையாகிய அமிர்தத்தைப்புசித்து, ஆங்கு=அவ்விடத்தில், இனிது இருக்கின் = செவ்வையாகவிருந்தால், தொல்லை= பழமையான, முதல் ஒளியேஆம்=முதல்வனுடைய தேஜோமயமே உண்டாவதாகும். (எ-று.)

(கருத்துரை.) அளவு சொல்லப்படாத பேரின்பாமிர்தத்தை உண்டிருந்தால் இறைவனுடைய சொரூபமே கைகூடும் என்பது கருத்து. (9)

10. நிலா மண்டபத்தி னிறைந்த வமிர்துண்ணில்
உலாவலா மந்தரத்தின் மேல்.

(பதவுரை.) நிலாமண்டபத்தில்=சந்திரனெனவன் எழுந்தருளியிருக்கின்ற மண்டபத்தின்கண், நிறைந்த அமிர்து உண்ணில்=நிறைந்திருக்கின்ற பேரின்பாமிர்தத்தை உண்டால், அந்தரத்தின்மேல்= மேலாகாயத்தில், உலாவலாம்=வாசஞ்செய்யலாம். (எ-று.)

(கருத்துரை.) சந்திரமண்டலத்தி லிருக்கின்ற அமிர்தத்தைப் பானஞ்செய்யவல்லவர்க்கு மேலுலகத்தில் உலாவுகின்ற சக்தியுண்டாகும் என்பது கருத்து. (10)

## 8. அர்ச்சனை.

**1.** மண்டலங்கண் மூன்று மருவவுடனிருத்தி
அண்டரனை யர்ச்சிக்கு மாறு.

(பதவுரை.) மண்டலங்கள் மூன்றும்=சோமசூரியாக்கினியென்னும் மூன்றுமண்டலங்களையும், மருவ=சேர, உடன் இருத்தி=உடனையிருக்கப்பண்ணி, அண்டு=பொருந்தின, அரனை=சிவபெருமானை, அர்சசிக்கும் ஆறு=அருச்சனைசெய்யும் விதமாகும். (எ-று.)

(கருத்துரை.) மும்மண்டலங்களையுஞ் சகாயமாகக்கொண்டே இறைவனை அர்ச்சிக்கவேண்டும் என்பது கருத்து. (1)

**2.** ஆசனத்தைக்கட்டி யரன்றன்னை யர்ச்சித்
பூசனைசெய் துள்ளே புணர். [துப்

(பதவுரை.) ஆசனத்தைகட்டி=ஆசனங்களை ஏற்படுத்திக்கொண்டு. அரன் தன்னை=சிவபெருமானை, அர்சசித்து = அருசசனைசெய்து, பூசனைசெய்து=பூசித்து, உள்ளே = மனத்தின்கண், புணர்=கலப்பாயாக. (எ-று.)

(கருத்துரை.) ஆசனங்களோடு இறைவனை யோகசாதனத்தால் கலக்கவேண்டும் என்பதுகருத்து. (2)

**3.** உள்ளமே பீட முணர்வே சிவலிங்கந்
தெள்ளிய ரர்ச்சிக்கு மாறு.

(பதவுரை.) உள்ளமேபீடம்=மனமேபீடமாகவும், உணர்வேசிவலிங்கம்=உணர்ச்சியே சிவலிங்கமாகவும், தெள்ளி=ஆராய்ந்து, அர்ச்சிக்கும்ஆறு=அருச்சனைசெய்யும்விதமாகும். (எ-று.)

(விசேஷவுரை.) பரமேஸ்வரனை உள்ளபடியே ஆஸ்ரயிக்கவேண்டியவர்கள் அவனை இருதயகமலத்திலிருந்தே வணங்கவேண்டுமென்பார், 'உள்ளமேபீட முணர்வேசிவலிங்கம்' எனவும் இவ்வண்ணஞ்செய்பவர்கள் ஞானிகளென்பார், தெள்ளியரர்ச்சிக்குமாறு' எனவுங் கூறினர். (3)

## 4. ஆதாரத்துள்ளே யறிந்துசிவ னுருவைப் பேதமற வர்ச்சிக்கு மாறு.

(பதவுரை.) சிவனுருவை பரமேஸ்வரனுடையரூபத்தை, ஆதாரத்துள்ளே=ஆறாதாரங்களுக்குள், அறிந்து-உணர்ந்து, பேதமற=யாதொருவித்தியாசமு முண்டாகாமல், அர்ச்சிக்குமாறு = அருச்சனைசெய்யும் விதமாகும்.

(கருத்துரை.) ஆறாதாரங்களிலும் சிவபெருமானுடைய சொரூபத்தைக்கண்டே பெரியோர்கள் அருச்சனைசெய்வார்கள் என்பது கருத்து.

(விசேஷவுரை.) மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறாதாரங்களினுமேஇறைவனை உள்ளபடி உணரவேண்டுமென்பார், 'ஆதாரத்துள்ளே யறிந்து சிவனுருவை' எனவும், அங்ஙனமறியப்பட்ட இறைவனை அவ்விடங்களிலேயே அர்ச்சனைசெய்யவேண்டுமென்பார், 'பேதமறவர்ச்சிக்குமாறு' எனவுங்கூறினர். (4)

## 5. பூரித் திருந்து புணர்ந்து சிவ னுருவைப் பாரித்தங் கர்ச்சிக்கு மாறு.

(பதவுரை.) பூரித்திருந்து = பூரகஞ்செய்து, புணர்ந்து=கலந்து, சிவனுருவை=சிவபெருமானுடைய சொரூபத்தை, அங்கு=அவ்விடத்தில், அர்ச்சிக்குமாறு=அருச்சனைசெய்யும் விதமாகும் (எ-று.)

(கருத்துரை.) சிவபெருமானைப் பூரகத்தால் அர்ச்சனை செய்ய வேண்டும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) சிவயோகஞ்செய்வோர் இரேசக, பூரக, கும்பகங்களையே அவ்யோகத்திற்கு முதற்காரணமாகக்கொண்டு அதில் பூரகத்தினாலேயே இறைவனை அர்ச்சிக்கவேண்டுமென்பார். 'பூரித்திருந்து புணர்ந்துசிவனுருவைப் - பாரித்தர்ச்சிக்குமாறு' எனக் கூறினார். (5)

## 6. விளக்குறு சிந்தையான் மெய்ப்பொருளைக் கண்டு துளக்கற வர்ச்சிக்கு மாறு.

(பதவுரை.) விளக்குறு = தெளிவிக்கப்பட்ட, சிந்தையால் = மனத்தினால். மெய்ப்பொருளை = உண்மைவஸ்துவை, கண்டு = பார்த்து, துளக்கற = குற்றமில்லாமல், அர்ச்சிக்குமாறு = அருச்சனைசெய்யும் விதமாகும். (எ-று.)

(கருத்துரை.) தெளிந்த சிந்தையுடையவர்களே சர்வேஸ்வரனை அடையவேணடும் என்பது கருத்து

(விசேஷவுரை.) யோகிகள் கல்விகேள்விகளில் விளங்கிய சிந்தையுடையவர்களென்பார், 'விளக்குறுசிந்தையான' எனவும், இறைவனைக் காணவேண்டியது அதியாவசியமென்பார், 'மெய்ப்பொருளைக்கண்டு துளக்கறவர்ச்சிக்குமாறு' எனவுங்கூறினார். (6)

## 7. பிண்டத்தி னுள்ளே பேராதிறைவனைக் கண்டுதா னர்ச்சிக்கு மாறு.

(பதவுரை.) பிண்டத்தினுள்ளே = உள்ளிடத்திலே, பேராது = நீங்காமல், இறைவனை = கடவுளை, கண்டு = பார்த்து, அர்ச்சிக்குமாறு = அருச்சனைசெய்யும் விதமாகும். (எ-று.)

(கருத்துரை.) அந்தர்முகத்தில் இடைவிடாது இறைவனை அர்ச்சிக்கவேண்டும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) சர்வமனிதர்களும் கடவுளை அந்தர்முகமாக அருச்சனை செய்யவேண்டுமென்பார். 'பிண்டத்திலுள்ளே போரா திறைவனைக்-கண்டுதானர்ச்சிக்குமாறு' எனக்கூறினார். (7)

8. மந்திரங்களெல்லா மயங்காம லுண்ணினை
முந்தரனை யர்ச்சிக்கு மாறு. [ந்து

(பதவுரை.) மந்திரங்கள் எல்லாம்=சர்வமந்திரங்களிலும், மயங்காமல்=மயக்கத்தை யடையாமல். உள் நினைந்து=அகத்தில் நினைந்து. முந்து=முன்னதாக, அரனை=சிவபெருமானை, அர்ச்சிக்குமாறு=அருச்சனை செய்யும் விதமாகும். (எ-று.)

(கருத்துரை.) சர்வமந்திரங்களை யெல்லாம் மயங்காமல் சர்வேஸ்வரனை உள்ளிடத்தில் நமஸ்காரஞ் செய்யவேண்டும் என்பது கருத்து.

(விசேஷவுரை.) ஐம்பத்தோரெழுத்தையும் அந்தந்த ஆதாரங்களில் விரோதிக்காமல்நிறுத்தவேண்டுமென்பார், 'மந்திரங்களெல்லாமயங்காமல்' எனவும், அந்தர்முகத்தில் நினைக்கவேண்டு மென்பார், 'உண்ணினைந்து' எனவும், சர்வேஸ்வரனை வணங்கவேண்டுமென்பார், 'முந்தரனையர்ச்சிக்குமாறு' எனவுங்கூறினார். (8)

9. போராக் கருத்திறற் பிண்டத்தி னுண்ணி
தாராதனை செய்யு மாறு. [னைந்

(பதவுரை.) பிண்டத்தினுள்=அந்தர்முகத்திலிருந்து, போராக் கருத்திறல்=ஒழியாதஎண்ணத்திறல், நினைந்து=எண்ணி, ஆராதனை செய்யுமாறு=அருச்சனைசெய்யவேண்டிய விதமாகும். (எ-று.)

(கருத்துரை.) இறைவனை அந்தர்முகத்தில் அருச்சனைசெய்ய வண்டும் என்பதாம்.

(விசேஷவுரை.) இறைவன் அந்தர்முகத்தில் எழுந்தருளியிரு பவனென்பார், 'உண்ணினைந்து' எனவும், 'அவனை இடைவிடா ல் சிந்திக்கவேண்டு மென்பார், 'போராக்கருத்தினால்' எனவும், திப்படி அருச்சனைசெய்யவேண்டுமென்பார், 'ஆராதனை செய்யு ாறு' எனவுங்கூறினார். (9)

**10.** உள்ளத்தினுள்ளே யுறப்பார்த்தங்கொண் மெள்ளத்தா னர்ச்சிக்கு மாறு. [சுடரை

(பதவுரை) ஒள்சுடரை = ஒள்ளியதேஜோமயப் பொருளை, ள்ளத்தினுள்ளே = மனத்தின்கண், உற=மிகுதியாக, பார்த்து= ண்டு, அங்கு=அவ்விடத்தில், மெள்ளத்தான்=மெதுவாக, அர்சசி குமாறு=அர்ச்சனைசெய்யும் விதமாகும். (எ-று.)

(கருத்துரை.) சர்வேஸ்வரனாகிய இறைவனை நாம் நமஸ்காரஞ் சய்யவேண்டியது அந்தர்முகத்தி லென்பது கருத்து. (10)

## 9. உள்ளுணர்தல்.

**1.** எண்ணிலி யூழி தவஞ்செய்திங் கீசனை உண்ணிலைமை பெற்ற துணர்வு.

(பதவுரை.) எண்ணிலியூழி=அநேககாலங்களாக, தவஞ்செய் ு=தவத்தைச்செய்து, இங்கு=இவ்விடத்தில், ஈசனை=சர்வேஸ்வர ை, உண்ணிலைமைபெற்றது = மனோவுறுதியால் அடையப் பெற் து, உணர்வு=நல்லுணர்ச்சியாகும். (எ-று.)

(கருத்துரை.) நல்லுணர்ச்சியானது அநேககாலம்வரைக்கும் இடைவிடாமல் தவஞ்செய்து ஈஸ்வரனைப்பெற்றதாகும் என்பது கருத்து. (1)

## 2. பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சித்து நல்லுணர்வு பெற்ற நலம்.

(பதவுரை.) பல்லூழிகாலம்பயின்று=நெடுங்காலம் வரைக்கும் பழகி, அரனை அர்ச்சித்து=சர்வேஸ்வரனை அர்ச்சனைசெய்து, நல்லுணர்வு=உயர்வாகிய உணர்ச்சியை, பெற்றநலம்=அடைந்தநன்மையாகும். (எ-று.)

(கருத்துரை.) அநேககாலம்வரைக்குந் தவஞ்செய்து நல்லுணர்ச்சியைப்பெற்ற விதமாகும் என்பது கருத்து. (2)

## 3. எண்ணற்கரிய வருந்தவத்தா லன்றே நண்ணப் படுமுணர்வு தான்.

(பதவுரை.) எண்ணற்கு அரிய=நினைப்பதற்கு அருமையான, அருந்தவத்தால்=அருமையாகிய தவத்தினால், உணர்வுதான்=உணர்ச்சியானது. நண்ணப்படும்=அடையப்படும். (எ-று.)

(கருத்துரை.) அநேககாலம்வரைக்கும் இடைவிடாமற் செய்த தவப்பயிற்சியினாலேயே நல்லுணர்ச்சியை யடையவேண்டும் என்பது கருத்து. (3)

## 4. முன்னைப்பிறப்பின் முயன்ற தவத்தினால் பின்னைப் பெறுமுணர்வு தான்.

(பதவுரை.) முன்னைப்பிறப்பின்=பூர்வஜென்மத்தில், முயன்ற=முயற்சிசெய்த, தவத்தினால்=தவத்தினால், பின்னைப்பெறும்=பிறகே அடையக்கூடுமானது,உணர்வுதான்=நல்லுணர்வேயாகும். (எ-று.)

(கருத்துரை.) பூர்வஜென்மத்தில் செய்த தவசிரேஷ்டத்தால் நல்லுணர்வை யடைவதாகும் என்பது கருத்து. (4)

5. காயக் கிலேச முணர்ந்த பயனன்றே
ஓயா வுணர்வு பெறல்.

(பதவுரை.) காயக்கிலேசம்=சரீரத்தினுடைய கிலேசத்தை, உணர்ந்த=தெரிந்துகொண்ட, பயன் அன்றே=பயன் அல்லவா; ஓயா உணர்வுபெறல்=ஒழிதலில்லாத உணர்ச்சியால் பெறுவதாகும். ()

(கருத்துரை.) சரீரத்தினுடைய உண்மையைத்தெரிந்து தவஞ்செய்தாலே நல்லுணர்ச்சியைப் பெறக்கூடும் என்பது கருத்து. (5)

6. பண்டைப் பிறவிப் பயனுந் தவத்தினால்
கண்டங் குணர்வு பெறல்.

(பதவுரை.) பண்டைப்பிறவிப்பயனும்=பூர்வஜெந்மத்தின் பயனாகிய, தவத்தினால்=தவத்தினால், கண்டங்குணர்வுபெறல் = பார்த்து நல்லுணர்வைப் பெறுதலாகும். (எ-று.)

(கருத்துரை.) பூர்வஜெந்மப்பயனே நல்லுணர்வு உண்டாவது என்பது கருத்து. (6)

7. போராத் தவத்தின் பயனும் பிறப்பின்மை
ஆராய்ந் துணர்வு பெறின்.

(பதவுரை.) போராதவத்தின்பயனும் = ஒழியாத தவத்தின்பயனாகிய, பிறப்பின்மை=ஜென்மமில்லாமையே, ஆராய்ந்து=உணர்ந்து, உணர்வுபெறல்=நல்லுணர்வு பெறுவதாகும். (எ-று)

(கருத்துரை.) தவத்தின்பயனே நல்லுணர்ச்சியை யடைதலாகும் என்பது கருத்து. (7)

**8.** ஞானத்தா லாய வுடம்பின் பயனன்றே
மோனத்தா லாய வுணர்வு.

(பதவுரை.) ஞானத்தால் ஆய=ஞானத்தினலுண்டான, உடம்பின்=சரீரத்தினுடைய, பயனன்றே, பிரயோஜனமல்லவா, மோனத்தாலாய=மௌனஞானத்தாலுண்டான, உணர்வு = உணர்ச்சியாகும். (எ-று.) (8)

**9.** ஆதியோ டொன்று மறிவைப் பெறுவது
நீதியாற் செய்த தவம். [தான்

(பதவுரை.) ஆதியோடு ஒன்றும்=முதற்பொருளுடன்கலக்கின்ற, அறிவைப்பெறுவதுதான் = நல்லுணர்ச்சியை யடைவதுவே, நீதியாற்செய்ததவம்=நியாயத்துடன்செய்த தவமாகும். (எ-று.)

(கருத்துரை.) உண்மைத்தவமாவது நல்லுணர்ச்சியை யடைவதாகும் என்பது கருத்து. (9)

**10.** காடுமலையுங் கருதித் தவஞ்செய்தால்
கூடு முணர்வின் பயன்.

(பதவுரை.) காடும் மலையுங்கருதி=காட்டிலிருந்தும் மலையிலிருந்தும்கிளைத்து, தவஞ்செய்தால்=தவத்தைச்செய்தால், உணர்வின்பயன்கூடும்=நல்லுணர்ச்சியின் பிரயோசனமானதுகைகூடும் ()

(கருத்துரை.) காடுமலைகளில் தவஞ்செய்தாலே நல்லுணர்ச்சிகிட்டுவதாகும் என்பது கருத்து. (10)

## 10. பத்தியுடைமை.

1. பத்தியா லுள்ளே பரிந்தரனைத் தானோக்
முத்திக்கு மூல மது. [கில்

(பதவுரை) பத்தியால்=அன்பினால், உள்ளே=மனத்தின்கண்ணே, பரிந்து=விரும்பி, அரனை=சிவபெருமானை, தான்நோக்கின்-தான்பார்த்தால், அது = அப்பார்வையானது, முத்திக்குமூலம்=மோட்சத்திற்குக் காரணமாகும். (எ-று.)

(கருத்துரை.) இறைவனைப் பத்தியோடுவணங்குவதே மோட்சத்திற்குக் காரணமாகும் என்பது கருத்து. (1)

2. பாடியு மாடியும் பல்காலும் நேசித்துத்
தேடுஞ் சிவசிந்தை யால்.

(பதவுரை.) பாடியுமாடியும் = பாடியும்ஆடியும், பல்காலும்=நெடுநாள்வரைக்கும், நேசித்தும்=பழகியும், சிவசிந்தையால் = சிவனை நினைக்கும மனத்துடனே, தேடும்=தேடவேண்டும். (எ-று )

(கருத்துரை.) பத்தியைநெடுநாளாகச் சிவசிந்தனையுடன் தேடவேண்டும் என்பது கருத்து. (2)

3. அன்பா லழுது மலறியு மாள்வானை
யென்புருகி யுள்ளே நினை.

(பதவுரை.) ஆள்வானை=நம்மையாண்டருள்செய்கின்ற இறைவனை, அன்பால்=பத்தியின்மேலீட்டால், அழுதும்அலறியும்=அழுதும் அலறியும், என்புருகி=எலும்புகள் உருகும்படி, உள்ளே=மனத்தின்கண்ணே, நினை=சிந்தனைசெய். (எ-று.)

(கருத்துரை.) இறைவனை நல்லஅன்பினுடன் நினைக்கவேண்டும் என்பது கருத்து. (3)

**4. பூசனை செய்து புகழ்ந்து மனங்கூர்ந்து**
**நேசத்தா லீசனைத் தேடு**

(பதவுரை.) பூசனைசெய்து=பூசித்து, புகழ்ந்து=கொண்டாடி, மனங்கூர்ந்து=மனம்ஒருமித்து, நேசத்தால் = உள்ளன்பினால், ஈசனைத்தேடு=பரமசிவனை ஆராயவேண்டும். (எ-று.)

(கருத்துரை.) சர்வேஸ்வரனை உள்ளபடியேபூசித்து உணரவேண்டும் என்பது கருத்து. (4)

**5. கண்ணா லுறப்பார்த்துக் காதலாற் றானோக்கில்**
**உண்ணுமே யீச னொளி.**

(பதவுரை.) கண்ணால்உறப்பார்த்து=கண்களால் மிகவும்பார்த்து, காதலால்=விருப்பத்துடன், தான்நோக்கில் = தான் பார்த்தால், ஈசனஒளி=பரமேஸ்வரனுடைய ஒளிமயமானது, உண்ணுமே=விழுங்கக்கூடியதாக விகசிக்கும். (எ-று.)

(கருத்துரை.) சர்வேஸ்வரனை உள்ளபடியே உணர்ந்து அகமார்க்கமாகத் தரிசிப்பவர்களுக்கு அவ்வெம்பெருமானுடைய தேஜோமயமானது அடியார்களை தன்னுள் அடக்கி மேம்பட்டுநிற்குமென்பது கருத்து. (5)

**6. நல்லானைப் பூசித்து நாதனென வுருகில்**
**நில்லாதோ வீச னிலை.**

(பதவுரை.) நல்லானைப்பூசித்து = நல்லவனாகிய பரமேஸ்வரனைப்பூசைசெய்து, நாதனெனவுருகில்=தலைவனே யென்று மனமிளகிநின்றால், ஈசன்நிலை = சர்வேஸ்வரனுடைய உண்மை நிலையானது, நில்லாதோ=குடிகொண்டிருக்க மாட்டாதோ. (எ-று.)

(கருத்துரை.) பரமேஸ்வரனைப் பூசைசெய்து யாவரொருவர் மன
னிருக்கின்றார்களோ அவர்களிடத்தில சர்வேஸ்வரனுடைய கிருபா
நோக்கமானது நிலைபெற்றுநிற்கும் என்பது கருத்து. (6)

7. அடியார்க் கடியரா யன்புருகித் தம்முள்
படியொன்றிப் பார்த்துக் கொளல்.

(பதவுரை.) அடியார்க்கடியராய்=அடியார்களுக்கு அடியார்
களாக, அன்பு உருகி=பக்தியினாலுருகி, தம்முள்=தம்முடைய மன
தினுள்ளே, படியொன்றி — உள்ளுலகங்களிற்கலந்து, பார்த்துக்
கொளல்=தரிசித்து அடைதல்வேண்டும். (எ-று.)

(கருத்துரை.) அன்பர்களில் அன்பினால் இளகித்துதிசெய்
கின்றவர்களுக்கே இறைவனுடைய திருவருள்கைகூடும் என்பது
கருத்து. (7)

8. ஈசனைக் கருதி யெல்லா வுயிர்களையும்
நேசத்தால் நீநினைந்து கொள்.

(பதவுரை.) எல்லாவுயிர்களையும் = சர்வபிராணிகளையும், ஈச
னைக்கருதி=சர்வேஸ்வரனுடைய திருவுருவமென்று நினைந்து,
நேசத்தால்=பிரியத்தினால், நீநினைந்துகொள்=நீபக்திசெய்து கொ
ள்ளக்கடவாய். (எ-று.)

(கருத்துரை.) சர்வபிராணிகளையும் ஈஸ்வரனுடைய சொரூப
மாகவே கொள்ளவேண்டும் என்பது கருத்து. (8)

9. மெய்ம்மயிர்கூர விதிர்ப்புற்று வேர்த்தெழு
பொய்ம்மையி லீசனைப் போற்று. [ந்து

(பதவுரை.) மெய்ம்மயிர்கூர = சரீரத்தில் மயிர்க்கூச்செறிய,
விதிர்ப்புற்று=புளகாங்கிதமாய், வேர்த்தெழுந்து = வேர்வையுடன்

எழுந்து, பொய்ம்மையில் = உண்மையாயிருக்கின்ற. ஈசனைப்போற்று = பரமேஸ்வரனை துதிசெய், (எ-று.)

(கருத்துரை.) சரீரம்புளகாங்கிதங்கொள்ள உண்மையான கடவுளை வணங்கவேண்டுமென்பது கருத்து. (9)

**10.** செறிந்தறிந்து நாடிச் செவ்விதாயுள்ளே
அறிந்தரனை யாய்ந்துகொளல்.

(பதவுரை.) செறிந்தறிந்து = சேர்ந்துணர்ந்து, நாடி = விரும்பி, செவ்விதாய = நன்றாய், உள்ளே = மனத்தினகணே, அறிந்து = உணர்ந்து, அரனை ஆய்ந்துகொளல் = பரமேஸ்வரனை ஆராய்ந்துணரவேண்டும். (எ-று.)

(கருத்துரை.) இறைவனை அந்தர்முகத்தில் தரிசிக்கவேண்டும் என்பது கருத்து. (10)

## திருவருட்பால்.

### அருள்பெறுதல்.

**1.** அருளினா லன்றி யகத்தறி வில்லை
அருளின் மலமறுக்க லாம்.

(பதவுரை.) அருளினாலன்றி = திருவருளினாலல்லாமல், அகத்து = மனத்தின்கண், அறிவில்லை = உணர்ச்சியில்லை, அருளின் மலம் அறுக்கலாம் = திருவருளினால் மாயாமலத்தை யறுத்தொழிக்கக்கூடும். (எ-று.)

(கருத்துரை.) திருவருளினால் சகலவிதமான மாய்கையையும் அறுத்தொழிக்கலாம் என்பது கருத்து. (1)

2. இருளைக் கடிந்தின் றிறைவ னருளால்
தெருளுஞ் சிவசிந்தை யாம்.

(பதவுரை.) இன்று இருளைக்கடிந்து = இன்றைக்கு இருளா
கிய அஞ்ஞானத்தைக்கடிந்து, இறைவன் அருளால் = சிவபெருமா
னுடைய கிருபையால், தெருளுஞ்சிவசிந்தையாம்=தெளிவை யடை
யக்கூடிய சிவசிந்தனையுண்டாகும். (எ-று.)

(கருத்துரை.) சிவபெருமானுடைய திருவருளால் அஞ்ஞான
த்தைப் போக்கடிக்கலாம் என்பது கருத்து. (2)

3. வாய்மையாற் பொய்யா மனத்தினால் மாச
தூய்மையா மீச னருள். [ற்ற

(பதவுரை.) வாய்மையால்=உண்மையினாலும், பொய்யாமன
த்தினால்=பொய்க்காதமனத்தினாலும், மாசற்றதூய்மையால்=குற்ற
மற்றபரிசுத்தத்தினாலும், ஈசன்அருள்=சர்வேஸ்வரனுடைய திருவ
ருள் உண்டாகும். (எ-று.)

(கருத்துரை.) உண்மையினால் சர்வகாரியங்களிலும் வல்ல
இறைவனை அடையலாம் என்பது கருத்து. (3)

4. ஒவ்வகத்து ணின்ற சிவனருள்பெற்றக்கா
அவ்வகத்து ளானந்த மாம். [ல்

(பதவுரை.) ஒவ்வகத்துள்நின்ற = ஒத்ததாகியமனத்தின்கண்
ணெழுந்தருளியிருந்த, சிவனருள்பெற்றக்கால்=சிவபெருமானுடைய
திருவருளையடைந்தால், அவ்வகத்துள் ஆநந்தமாம்=ஆனந்த மனத்
திற்கு ஆநந்தமுண்டாகும். (எ-று.)

(கருத்துரை.) நல்லமனத்திலிருக்கின்ற சிவபெருமானுடைய
திருவருளையடைந்தால் ஆநந்த முத்தியாகும் என்பது கருத்து. (4)

**5. உன்னுங் கரும முடிக்கலா மொள்ளிதாய்
மன்னு மருள்பெற்றக் கால்.**

(பதவுரை.) ஒள்ளிதாய்மன்னும் = தேஜோமயத்தைதயுடைய தாய் நிலைபெற்றிருக்கின்ற, அருள்பெற்றக்கால்=திருவருளையடை வோமானல், உன்னுங்கருமம்முடிக்கலாம்=நினைக்கப்பட்ட கரும ங்களையெல்லாம் நிறைவேற்றலாம். (எ-று)

(கருத்துரை.) திருவருளையடைந்தால் எண்ணிய கருமங்களை ஈடேற்றலாம் என்பது கருத்து. (5)

**6. எல்லாப் பொருளு முடிக்கலா மீசன்றன்
றொல்லையருள் பெற்றக் கால்.**

(பதவுரை) ஈசன்றன் தொல்லையருள் பெற்றக்கால்=பரமே ஸ்வரனுடைய பழமையாகிய திருவருளைப்பெற்றால், எல்லாப்பொ ருளும் முடிக்கலாம்=சர்வபொருள்களையும் முடிக்கலாம. (எ-று.)

(கருத்துரை.) சர்வேஸ்வரனுடைய திருவருளைப் பெற்றுள்ள வர்கள் சர்வகாரியங்களையுஞ் செய்ய வல்லவராவார்கள் என்பது கருத்து. (6)

**7. சிந்தையுணின்ற சிவனருள் பெற்றக்கால்
பந்தமாம் பாச மறும்.**

(பதவுரை.) சிந்தையுள்நின்ற=மனத்தின்கண்ணிருந்த, சிவன் அருள்பெற்றக்கால்=சிவபெருமானுடைய திருவருளையடைந்தால், பந்தமாம்பாசம்=பந்தப்பட்டமாய்கையானது, அறும்=தன்னைவிட் டகலும். (எ-று.)

(கருத்துரை.) யாவருடைய மனத்தின்கண்ணுமிருக்கின்ற பர மேஸ்வரனுடைய திருவருளைப்பெற்றால் சர்வமாயைகளையும் அறுத் தொழிக்கலாம் என்பதுகருத்து. (7)

**8.** மாசற்ற கொள்கை மதிபோலத் தான்றோ
ஈசனருள் பெற்றக் கால். [ன்றும்

(பதவுரை.) ஈசன் அருள்பெற்றக்கால்=சர்வேஸ்வர னுடைய திருவருளையடைந்தால், மாசற்றகொள்கை=குற்றமற்ற தன்மையான து, மதிபோலத்தான்தோன்றும் = சந்திரனொளியைப்போல் காணப்படும். (எ-று.)

(கருத்துரை.) பரமேஸ்வரனுடைய திருவருளை யடைந்தவர்களுக்கு உள்ளுணர்ச்சி துல்லியமாயிருக்கும் என்பதுகருத்து. (8)

**9.** ஆவாவென் றோதி யருள்பெற்றார்க் கல்
தாவாதோ ஞான வொளி. [லாது

(பதவுரை.) ஆவாவென்று ஓதி = ஆ! ஆஆ!! என்றுசொல்லி, அருள்பெற்றார்க்கல்லாது-திருவருளைப்பெற்றவர்களுக்கல்லாமல், தாவாதோஞானவொளி=ஞானதேஜஸானதுகைகூடாதோ? ()

(கருத்துரை.) திருவருளைப் பெற்றவர்களுக்கு ஞானதேஜஸானது கைகூடும் என்பது கருத்து. (9)

**10.** ஓவாச் சிவனருள் பெற்றா லுரையின்றித்
தாவாத வின்பந் தரும்.

(பதவுரை.) ஓவா சிவன் அருள்பெற்றால்=ஒழியாத சிவபெருமானுடைய திருவருளைப்பெற்றால், உரையின்றி = சொல்லில்லாமல், தாவாதவின்பநதரும்=ஒழியாத சுகத்தைக் கொடுக்கும்.(எ-று)

(கருத்துரை.) ஒழியாமல் சர்வேஸ்வரனுடைய திருவருளைப் பெற்றால் மௌனஞானங் கைகூடும் என்பது கருத்து. (10)

## 2. நினைப்புறுதல்.

**1.** கருத்துறப் பார்த்துக் கலங்காமலுள்ளத்
திருத்திச் சிவனை நினை.

(பதவுரை.) கருத்துறப்பார்த்து = மனத்திற் பொருந்தப்பார்த்து, கலங்காமல் = தளராமல், சிவனை உள்ளத்து இருத்தி = பரமேலை மனத்தில்வைத்து, நினை = நினைப்பாயாக. (எ-று.)

(கருத்துரை.) மனத்தை உறுதியாக நிறுத்தி சிவபெருமானை நினைக்கவேண்டும் என்பது கருத்து. (1)

**2.** குண்டலியி னுள்ளே குறித்தரனைச் சிந்தி
மண்டலங்கள் மேலாகப் பார். [த்து

(பதவுரை.) குண்டலியின் உள்ளே குறித்து = குண்டலி சத்தியி னுள்ளே நினைத்து, அரனை சிந்தித்து = சிவபெருமானை நினைத்து, மண்டலங்கள் மேலாகப்பார் = மும்மண்டலங்களையும்மேலாகத்தரிசிப்பாயாக. (எ-று.)

(கருத்துரை.) மூலநிலத்தில் குண்டலிசத்தியை நினைத்து மும் மண்டலங்களையும் நினைக்கவேண்டும் என்பது கருத்து. (2)

**3.** ஓர்மின்கள் சிந்தையி லொன்றச் சிவன்ற
பார்மின் பழம்பொருளே யாம். [ன்னைப்

(பதவுரை.) சிவன் தன்னை = சிவபெருமானை, சிந்தையிலொன்ற ஓர்மின் = மனத்திற்பொருந்த நினையுங்கள், (அன்றி) பார்மின்கள் = தரிசனஞ் செய்யுங்கள், பழம்பொருளேயாம் = (இங்ஙனஞ்செய்தால்) பழம்பொருளாகிய இறைவனைக்கூடும். (எ-று.)

(கருத்துரை) சிவபெருமானை உள்ளத்தின்கண் நினைத்து தரி
சித்தால் இறைவனாகக்கூடும் என்பது கருத்து. (3)

4. சிக்கெனத் தேர்ந்துகொள் சிந்தையி லீச
மிக்க மலத்தை விடு. [னை

(பதவுரை) ஈசனை=பரமேஸ்வரனை, சிந்தையில்=மனத்தில்,
சிக்கெனத்தேர்ந்துகொள் = வலிவாகதெளிந்துகொள், (அப்படி
செய்வையானால்) மிக்கமலத்தைவிடு — மிகுந்தமாயாமலத்தை விடு
வாயாக. (எ-று.)

(கருத்துரை.) தெளிந்தமனத்தினால் சர்வேஸ்வரனைத் துதிசெ
ய்தால் மாயாமலத்தை யறுக்கக்கூடும் என்பது கருத்து. (4)

5. அறிமின்கள் சிந்தையி லாதாரத் தைச்சே
துறுமின்க ளும்முளே யோர்ந்து. [ர்ந்

(பதவுரை.) ஆதாரத்தைச்சேர்ந்து = ஆறுதாரங்களையுஞ்சேர்
ந்து, சிந்தையில்=மனத்தினுள்ளே, அறிமின்கள்=இறைவனை உண
ருங்கள், உம்முளேஓர்ந்து=உமக்குள்ளேயாராய்ந்து, உறுமின்கள்-
இறைவனை அடையுங்கள். (எ-று.)

(கருத்துரை.) மனத்தினுள்ளே இறைவனை ஆராய்ந்தறியவே
ண்டும் என்பது கருத்து. (5)

6. நித்தம் நினைந்திரங்கி நின்மலனையொன்
முற்றுமவ னொளியேயாம். [றுவிக்கில்

(பதவுரை.) நித்தம்=அநுதினமும், நின்மலனை=பரிசுத்தனாகி
யகடவுளை, நினைந்துஇரங்கி = மனமிரங்கிசிந்தித்து, ஒன்றுவிக்
கில்=பொருத்துவித்தால், அவன்ஒளியே=அவனுடைய தேஜோமய
மே, முற்றுமாம்=முடிவாகக் கிடைக்குமாம். (எ-று.)

(கருத்துரை.) தினந்தோறும் நிர்மலனாகிய இறைவனைத் துதி செய்தால் அவனுடைய தேஜோமயத்திலேயே கலப்பதற்காகுமாம் என்பது கருத்து. (6)

7. ஓசையுணர்ந்தங்கே யுணர்வைப்பெறும்பரிசால்
ஈசன் கருத்தா யிரு.

(பதவுரை.) ஓசைஉணர்ந்து=சத்தத்தைத்தெரிந்து, அங்கே= அந்தர்முகத்திலே, உணர்வைப்பெறும்=உணர்ச்சியையடைந்த, பரிசால்=தன்மையினால், ஈசன்கருத்தாய்இரு = சர்வேஸ்வரனுடைய எண்ணமாகவே யிருப்பாயாக. (எ-று.)

(கருத்துரை.) சத்தத்தையுணர்ந்து சதாகாலமும் ஈஸ்வரசிந்தனையாகவே யிருக்கவேண்டும் என்பது கருத்து. (7)

8. இராப்பகலன்றி யிருசுடர்ச் சிந்திக்கில்
பராபரத்தோ டொன்றலு மாம்.

(பதவுரை.) இராப்பகலன்றி=அகோராத்திரமும், இருசுடர்= சந்திரசூரியாக்கினிகளாகிய சுடர்களை, சிந்திக்கில் = நினைத்தால், பராபரத்தோ டொன்றலுமாம்=பராபரப் பொருளினிடத்தில் கலக்கவுங்கூடும். (எ-று.)

(கருத்துரை.) அகோராத்திரம் இறைவனைச்சிந்தித்தால் இறைவனுடன் கலந்திருக்கக்கூடும் என்பது கருத்து. (8)

9. மிக்கமனத்தால் மிகநினைந்து சிந்திக்கில்
ஒக்கச் சிவனுருவ மாம்.

(பதவுரை.) மிக்கமனத்தால் = நல்லமனத்தினால், மிகநினைந்து=மிகுதியும்எண்ணி, சிந்திக்கில்=தியானித்தால், ஒக்கச்சிவனுருவமாம்=ஒப்பாகச் சிவசொருபத்தை யடையக்கூடும். (எ-று.)

(கருத்துரை) உயர்வாகிய மனத்தைக்கொண்டு உண்மையுடனே யோகஞ் செய்தால் சிவசாரூப்பியத்தை யடையலாம் என்பது கருத்து. (9)

**10.** வேண்டுவார் வேண்டும் வகைதான் விரித்
காண்டற்கரிதாஞ் சிவம். [தெங்குங்

(பதவுரை) வேண்டுவார் வேண்டும் வகைதான் விரிந்து = வேண்டுபவர்கள் விரும்புகின்ற விதமாகப் பரவி, எங்கும் = எவ்விடத்திலும், சிவம் = சிவமானது, காண்டற்கு அரிதாம் = பார்ப்பதற்கு அருமையானபொருளாகும். (எ - று)

(கருத்துரை.) சர்வேஸ்வரன் யார் எப்படி விரும்புகின்றார்களோ அப்படியெல்லாம் உருத்தாங்கியும் யாவராலும் பார்ப்பதற்கருமையானவனாக முடிகிறான் என்பது கருத்து. (10)

## 3. தெரிந்துதெளிதல்.

**1.** தேறித்தெளிமின் சிவமென்றே யுள்ளுண
கூறிய பல்குணமு மாம். [ர்வில்

(பதவுரை.) உள்ளுணர்வில் = மனவுணர்ச்சியில், சிவம் = சிவமென்னும் பொருளானது, கூறிய = சொல்லப்பட்ட, பல்குணமாமென்றே = பலகுணங்களிலும் கலந்துள்ளதாமென்று, தேறிதெளிமின் = ஆராய்ந்துணருங்கள். (எ-று.)

(கருத்துரை.) சகலகுணங்களிலுங் கலந்திருக்கிறபொருள்சிவமென்றே தெளிவாயாக என்பது கருத்து. (1)

**2.** உண்டில்லை யென்று முணர்வை யறிந்தக்
கண்டில்லை யாகுஞ் சிவம். [கால்

(பதவுரை) உண்டில்லையென்றும் = உண்டென்றும், இல்லையென்றும் = சொல்லும்படியாகவிருக்கின்ற, உணர்வை = உணர்ச்சியை, அறிந்தக்கால் = உணர்ந்தால், சிவம் = சிவமென்னும் பொருளானது, கண்டில்லையாகும் = கண்டதும், காணாததுமான பொருளாகும். ( )

(கருத்துரை) அனுரூபமாயிருக்கின்ற உணர்வை யறிந்தால் சிவமும் அவ்வாறேவெளிப்படும் என்பது கருத்து. (2)

3. ஒருவர்க்கொருவனே யாருமுயிர்க்கெல்லா
ஒருவனே பல்குணமு மாம். [ம்

(பதவுரை.) ஒருவர்க்கு ஒருவனேயாகும் = ஒருவருக்கும் ஒருவனேயாய் எழுந்தருளியிருக்கின்ற, உயிர்க்கெல்லாம் = சர்வபிராணிகளுக்கெல்லாம், ஒருவனே = இறைவன் ஒருவனே, பல்குணமுமாம் = பலகுணங்களிலும் கலந்தபொருளாகும். (எ-று)

(கருத்துரை.) சர்வேஸ்வரன் ஒருவனே பலகுணங்களையுமுடைய உயிர்களுக்கும் ஆதாரமாயுள்ளவன் என்பது கருத்து. (3)

4. எல்லார்க்குமொன்றேசிவமாவ தென்றுண
பல்லோர்க்கு முண்டோ பவம். [ர்ந்த

(பதவுரை) எல்லார்க்கும் = சர்வபிராணிகளுக்கும், சிவம் ஒன்றேயாவது = சிவமாவது ஒன்றே பொதுவாகவிருப்பது, என்றுஉணர்ந்த பல்லோர்க்கும் = என்று அறிந்தசகலருக்கும், பவம்உண்டோ = பிறவிஉண்டாகுமோ? உண்டாகாது. (எ-று.)

(கருத்துரை) எல்லார்க்கும் பொதுவாகவுள்ளவன் ஈஸ்வரன் ஒருவனேயென்று உணரவல்லார்க்கு இனிப்பிறக்கும் ஜன்மமில்லை என்பது கருத்து. (4).

5. ஆயுமிரவியுமொன்றே யனைத்துயிர்க்கும்
ஆயுங்கா லொன்றே சிவம்.

(பதவுரை.) ஆயும்=ஆராய்கின்ற, இரவியும்=சூரியனும், அனைத்துயிர்க்கும்=சர்வபிராணிகளுக்கும், ஒன்றே = ஒருபொருளேயாகும், (அதுபோல) ஆயுங்கால் = ஆராய்ந்துபார்த்தால், சிவம் ஒன்றே=சிவமென்னும்பொருளும் யாவர்க்கும் ஒன்றேயாகும். (எ-று.)

(கருத்துரை.) எல்லார்க்குஞ்சூரியன் ஒருவனே யாயதுபோல சிவமும் ஒன்றேயாகும் என்பது கருத்து. (5)

**6.** ஓவாததொன்றே பலவா முயிர்க்கெல்லாந்
தேவான தென்றே தெளி.

(பதவுரை.) ஓவாதது ஒன்றே = என்றும் ஒழியாதிருக்கின்ற பொருளொன்றே, பலவாம் உயிர்க்கு எல்லாம் = பலவகைப்பட்ட உயிர்களுக்கெல்லாம், தேவானது = தெய்வமாயிருப்பது, என்று தெளி=என்றுதெளிந்து கொள்வாயாக. (எ-று.)

(கருத்துரை.) எக்காலத்தும் அழியாமலிருக்கின்றதே வொன்றே பலவகையானஉயிர்களுக்கெல்லாம் பிரதானமானது என்பது கருத்து. (6)

**7.** தம்மையறியாதார் தாமறிவோமென்பதென்
செம்மையா லீசன் றிறம்.

(பதவுரை.) தம்மை அறியாதார் = தம்மைத்தாமே யறியாத அறிவீனர்கள், ஈசன் திறம் = சர்வேஸ்வரனுடைய வல்லமையை, செம்மையில்=உண்மையாக, தாம் அறிவோம் என்பது என்=தாம் தெரிந்துகொள்வோம் என்றுசொல்வது ஏன்? (எ-று.)

(கருத்துரை.) தம்மைத்தாம் அறியாத அஞ்ஞானிகள் இறைவன் குணத்தை யறியமாட்டார்கள் என்பது கருத்து. (7)

**8.** எல்லாவுலகத் திருந்தாலு மேத்துவர்கள்
நல்லுலக நாத னடி.

(பதவுரை.) எல்லாவுலகத்து இருந்தாலும் = எல்லாலோகங்க ளிலிருந்தாலும், நல் உலகநாதனடி = உயர்ந்த உலகநாதனுடைய திருவடிகளை, ஏத்துவர்கள் = துதிசெய்வார்கள். (எ-று.)

(கருத்துரை.) எந்தவுலகத்தி லிருந்தாலும் இறைவ னுடைய திருவடிகளை யாவரும்வணங்குவார்கள் என்பது கருத்து. (8)

**9. உலகத் திற்பட்ட உயிர்க்கெல்லா மீசன்**
**நிலவுபோ னிற்கும் நிறைந்து.**

(பதவுரை.) உலகத்தில்பட்ட = இவ்வுலகங்களிலிருக்கின்ற, உயிர்க்கெல்லாம் = சர்வபிராணிகளுக்கும், ஈசன் = சர்வேஸ்வரனான வன், நிறைந்து = வியாபகமாகி, நிலவுபோல்நிற்கும் = பூரணசந்திர னைப்போலவிருக்கும். (எ-று.)

(கருத்துரை) இவ்வுலக ஆன்மாக்களி லெல்லாம் இறைவன் கலந்திருக்கின்றான் என்பது கருத்து. (9)

**10. உலகத்தில் மன்னு முயிர்க்கெல்லா மீசன்**
**அலகிறந்த வாதியே யாம்.**

(பதவுரை.) உலகத்தில்மன்னும் = உலகத்தினிடத்தில் நிலைபெ ற்றிருக்கின்ற, உயிர்க்கெல்லாம் = சர்வபிராணிகளுக்கும், ஈசன் = சர்வேஸ்வரனானவன், அலகிறந்த ஆதியேயாம் = அளவுசொல்லப்ப டாத தற்பொருளேயாவான். (எ-று.)

(கருத்துரை.) சர்வபிராணிகளுக்கும் இறைவன் முதற்பொரு ளாயுள்ளவன் என்பது கருத்து. (10)

## 4. கலை ஞானம்.

1. சத்தியாஞ் சந்திரனைச் செங்கதிரோ னூடு
முத்திக்கு மூல மது. [ருவில்

(பதவுரை.) சத்தியாஞ் சந்திரனை = பெண்ரூபமாகிய சந்திரனை, செங்கதிரோன் = சூரியனானவன், ஊடுருவின் = ஊடுருவிக்கலந்தால், அது = அந்தமார்க்கமானது, முத்திக்குமூலம் = மோட்சத்திற்குக்காரணமாகும். (எ-று.)

(கருத்துரை.) சந்திரகலையையும் சூரியகலையையும் சேர்த்தலன்றே மோட்சமடையவழியேற்படும் என்பது கருத்து. (1)

2. அயனங்கொள் சந்திர னாதித்த னொன்
நயனமா முத்திக்கு வீடு. [றில்

(பதவுரை.) அயனங்கொள் = தட்சிணாயனமென்றும் உத்திராயணமென்றும் இரண்டுபிரிவைக் கொண்டிருக்கின்ற, சந்திரனில் = சந்திரனிடத்தில், ஆதித்தன், சூரியனானவன், ஒன்றில் = பொருந்தினால், நயனமாம் = கண்ணைப்போன்று விளங்குவதாகிய, முத்திக்கு வீடு = மோட்சத்துக்குவீடு கிடைப்பதாகும். (எ-று.)

(கருத்துரை.) சந்திரகலையுடன் சூரியகலையானது பொருந்தச் செய்யும் கலைஞானமானது மோட்சவீட்டையடையக் காரணமாகும் என்பது கருத்து. (2)

3. அஞ்சாலு மாயா தறம்பொரு ளின்பமுந்
துஞ்சாதவர் துறக்கு மாறு.

(பதவுரை.) அஞ்சாலும்மாயா = பஞ்சாவஸ்தைகளாலும் ஒயாத, அறம் = தருமமும், பொருள் = பொருளும், இன்பமும் = சுக

மும். துஞ்சாதவர்=என்றும் இறக்காதவர் ஆகக்குமாறு = வடக விடும் வழிகளாகும். (எ-று.)

(கருத்துரை.) அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றும் பிரவியொழிந்தவர்கள் விடக்கூடியவைகளாகும் என்பது கருத்து.

**4. ஈசனோடொன்றி லிசையாப்பொருளில்லை தேசவிளக் கொளியே யாம்.**

(பதவுரை.) ஈசனோடு ஒன்றில்=சர்வேஸ்வரனோடு கலந்துவிட்டால், இசையாப்பொருள் இல்லை = கைகூடாதபொருள் இல்லையாம், (எனெனில்) தேசவிளக்கொளியாம்=அப்பொருளானது தேசவிளக்குகளுக்கு ஒளிகொடுப்பதாகும். (எ-று.)

(கருத்துரை) சர்வேஸ்வரனானவன் தேசங்களுக் கெல்லாம் ஒளியாயிருக்கிறதினால் அவனோடுகலப்பவர்களுக்கு சகலபொருள்களுங் கைகூடுமெனவாகும் என்பது கருத்து. (4)

**5. தாஞ்செய் வினையெல்லாந் தம்மையறவுணரில் காஞ்சனமே யாகுங் கருத்து.**

(பதவுரை.) தம்மையறவுணரில்=தம்மைத்தாமே முழுமையும் பற்றறவுணர்ந்து கொண்டால், தாஞ்செய் வினையெல்லாம் = தம்மால் செய்யப்பட்ட வினைகளெல்லாமொழிந்து, கருத்து=மனமானது, காஞ்சனமேயாகும்=பொன்னேயாகும். (எ-று.)

(கருத்துரை.) யார்எப்படிப்பட்ட வினைகளைச்செய்தாலும் அவர்கள் தம்மைத்தாம் உணர்ந்தவர்களாயிருந்தால் அவையாவும் ஒழிந்து பொன்போன்ற மனத்தை யுடையவர்களாவார்கள் என்பது கருத்து. (5)

**6. கூடகமான குறியெழுத்தைத் தானறியில் வீடக மாகும் விரைந்து.**

(பதவுரை.) கூடகமான = சரீரமெடுத்தற்குக் காரணமான, குறியெழுத்தை=அறிகுறியாயிருக்கின்ற எழுத்தை, தான் அறியில்= தான் உணர்ந்தால், விரைந்து=சீக்கிரமாக, வீடகமாகும் = மோட்சமடைகைகூடும். (எ-று.)

(கருத்துரை.) சரீரமுண்டானதற்குக் காரணமா யிருக்கின்ற அடையாளமான எழுத்தை உண்மையாக உணர்பவர்கள் மோட்ச வீட்டை யடைவார்கள் என்பது கருத்து. (6)

7. வீடகமாக விழைந்தொல்லைவேண்டுமேல்
கூடகத்திற் சோதியோ டொன்று.

(பதவுரை.) வீடகமாக = மோட்சத்தையடைய, விழைந்து= ஆசைப்பட்டு, ஒல்லை=சீக்கிரமாக, வேண்டுமேல்=விரும்புவார்களானல், கூடகத்தில் சோதியோடு ஒன்று=கூடப்பிரமத்தினுடன் கலந்து வருவாயாக. (எ-று)

(கருத்துரை.) மோட்சவீட்டையடைய விரும்புவோர்கள் கூடகப் பிரமத்தை விரும்பி அதனுடன் கலக்கவேண்டும் என்பது கருத்து. (7)

8. பூரித்து நின்ற சிவனைப் புணரவே
பாரித்ததாகுங் கருத்து.

(பதவுரை.) பூரித்து நின்ற=எங்குங்கலந்திருந்த, சிவனைப்புணரவே=சிவபெருமானேடுகூடினல், கருத்து=மனமானது, பாரித்ததாகும்=பெருமையை யுடையதாகும். (எ-று.)

(கருத்துரை.) சர்வபிராணிகளிடத்தில் வியாபித் திருக்கின்ற சர்வேஸ்வரனைக்கலந்தால் எண்ணமானது சுத்தமுடைய தாகும் என்பது கருத்து. (8)

9. இரேசக மாற்றி யிடையருதே நிற்கில்
பூரிப்ப துள்ளே சிவம்.

(பதவுரை.) இரேசகம்ஆற்றி=இரேசகத்தைசசெய்து, இடையறுதேசிற்கில்=மத்தியில் விடாமலிருந்தால், சிவம்=சர்வேஸ்வரனானவன், உள்ளேபூரிப்பது=உள்ளே நிறைந்திருப்பவனாவான். (எ-று)

(கருத்துரை.) இரேசகம் என்னும் வழியைக் கிரமத்துடன் இடைவிடாமற்செய்தால் சிவபெருமானானவன் உள்ளே மலிந்திருப்பவனாவான் என்பது கருத்து. (9)

10. சிந்தையில் நின்ற நிலைவிசும்பிற் சாக்கிர
சந்திரனிற் றேன்று முணர்வு. [மாம்

(பதவுரை.) சிந்தையில் நின்றநிலை=மனத்திலுண்டான உண்மையினால், விசும்பில்=ஆகாயத்தில், சாக்கிரமாம் = சாக்கிராவஸ்தையாகும் (ஆகையால்) உணர்வு = உணர்ச்சியானது, சந்திரனில் தோன்றும்=சந்திரகலையில் வெளிப்படும் (எ-று.)

(கருத்துரை.) மனோநிலையானது சந்திரனில் சாக்கிராவஸ்தையில் உணர்ச்சி ரூபமாக வெளிப்படும் என்பது கருத்து. (10)

## 5. உருவொன்றிநிற்றல்.

1. எள்ளகத் தெண்ணெ யிருந்ததனை யொக்
உள்ளகத்தீச னொளி. [குமே

(பதவுரை.) உள்ளகத்தீசன் ஒளி = மனத்திலே யிருக்கின்ற ஜெகதீஸ்வரனுடைய தேஜோமயமானது, எள்ளகத்து எண்ணெய் இருந்ததனை ஒக்கும் = எள்ளினிடத்து எண்ணெய் வியாபித்திருந்ததை யொப்பாகும். (எ-று.)

(கருத்துரை) சர்வேஸ்வரன் ஒவ்வொரு ஆன்மாக்களுடைய மனத்திலும் கலந்திருப்பது எள்ளினிடத்து எண்ணெய் கலந்திருப்பதுபோலாகும் என்பது கருத்து. (1)

2\. பாலின்க ணெய்போற் பரந்தெங்கு நிற்கு
நூலின்க ணீச னுழைந்து. [மே

(பதவுரை.) நூலின்கண் ஈசன் நுழைந்து = சர்வேஸ்வரனென் நூலின்கண்ணே கலந்து, பாலின்கண்நெய்போல்=பாலிற்கலந்திருக்கிற நெய்யைப்போல, பரந்தெங்கும்நிற்கும் = எவ்விடத்திலும் கலந்திருக்கும். (எ-று.)

(கருத்துரை.) பாலில்நெய்கலந்திருப்பதுபோல சர்வேஸ்வரன் சகல ஆன்மாக்களிலும் கலந்திருப்பான் என்பது கருத்து. (2)

3\. கரும்பினிற் கட்டியுங் காய்பாலி னெய்யும்
இரும்புண்ட நீரு மியல்பு.

(பதவுரை.) கரும்பினிற்கட்டியும் = கரும்பினிடத்து வெல்லமும், காய்பாலில்நெய்யும்=காய்கின்றபாலினிடத்து நெய்யும், இரும்புண்டநீரும் = இரும்பினால் உண்ணப்பட்ட ஜலமும், இயல்பு=சர்வேஸ்வரனுடைய இலட்சணங்களாம். (எ-று.)

(கருத்துரை.) சர்வேஸ்வரனுடைய லட்சணங்கள்மேலே சொன்னபொருள்களின் குணங்கள்போன்றவை என்பது கருத்து. (3)

4\. பழத்தினிரதம்போற் பரந்தெங்கு நிற்கும்
வழுத்தினு லீச னிலை.

(பதவுரை.) வழுத்தினல்=துதிசெய்தால், ஈசன் நிலை=சர்வேஸ்வரனுடைய உண்மைநிலையானது, பழத்தின் இரதம்போல=பழங்களினுடைய இரசத்தைப்போல, பரந்து எங்கும்நிற்கும் = எவ்விடத்தும் வியாபித்துநிற்கும். (எ-று.)

(கருத்துரை.) சர்வேஸ்வரனுடைய வியாபகமானது பழுதின்றன் இருதயம்போன்றதாகும் என்பது கருத்து. (4)

**5. தனுவொடுதோன்றுமே தானெல்லாமாகி**
**யனுவதுவாய் நிற்குமது.**

(பதவுரை.) தானே எல்லாம் ஆகி=தானே எல்லாப்பொருள்களாகியும், அனுவதுவாய் நிற்கும்அது=அணுரூபமாயும் நிற்குமப்பொருளானது, தனுவொடுதோன்றும்=இந்தசரீரத்துடனேயே உண்டாகும். (எ-று)

(கருத்துரை.) எல்லாமாகியும் அணுவாகியுமிருக்கின்ற பொருளானது சரீரத்துடனேயுண்டாகும் என்பதுகருத்து. (5)

**6. வித்துமுளைபோல் விரிந்தெங்கு நிற்குமே**
**யொத்துளே நிற்கு முணர்வு.**

(பதவுரை.) உள்ளே ஒத்துநிற்கும் உணர்வு=மனத்தில் ஒத்திருக்கின்ற உணர்ச்சியானது, வித்தும் முளைபோல்=விதையையும் முளையையும்போல, விரிந்தெங்கும்நிற்கும்=எவ்விடத்தும் கலந்து நிற்கும். (எ-று.)

(கருத்துரை.) வித்தின் முளையைப்போல இறைவன் சகலஉயிர்களிலும் கலந்திருப்பான் என்பது கருத்து. (6)

**7. அச்சமாங்கார மகத்தடக்கி னற்பின்னை**
**நிச்சயமா மீச னிலை.**

(பதவுரை.) அச்சம் ஆங்காரம்=பயத்தையும் அகங்காரத்தையும், அகத்து அடக்கினால் = மனத்திலடக்கினால், பின்னை=பிறகு, ஈசன்நிலை = சர்வேஸ்வரனுடைய உண்மை நிலையானது, நிச்சயமாம்=உண்மையாகவிளங்கும். (எ-று.)

(கருத்துரை.) அச்சத்தையும் அகங்காரத்தையும் அடக்குகின்றவர்களுக்கே இறைவனுடையகுணம்வெளிப்படுமென்பதுகருத்து.

8. மோட்டினீர் நாற்ற முளைமுட்டை போ
வீட்டுளே நிற்கு மியல்பு. [லுமே

(பதவுரை.) வீட்டுளேநிற்கும் இயல்பு = நாம்சரீரத்திற்குள்நி
ற்கின்ற இயல்பானது, மோட்டினீர்நாற்றம்=மோட்டிலே யுள்ள
நீர்நாற்றத்தையுடைய, முளைமுட்டைபோலும்=முளையானதுமுளை
க்கின்ற எருமுட்டைபோலும். (எ-று.) (8)

9. நினைப்பவர்க்கு நெஞ்சத்துள் நின்மலனா
அனைத்துயிர்க்குந் தானுமவன். [ய் நிற்கும்

(பதவுரை.) அனைத்துயிர்க்குத் தானும்அவன் = எல்லாவுயிா
களுக்கும் ஒருவனுயிருக்கின்ற அவன், நினைப்பவாக்கு = தன்னை
உண்மையாக நினைப்பவர்களுடைய, நெஞ்சத்துள் = மனத்தினுள்
ளே, நின்மலனுய்நிறகும்=பரிசுத்தனுயிருப்பான். (எ-று)

(கருத்துரை.) இறையவன் தன்னை உள்ளபடியே நினைப்பவர்
களுடைய மனததில் பரிசுத்தனுக எழுந்தருளியிருப்பான் என்பது
கருத்து. (9)

10. ஓசையினுள்ளேயுதிக்கின்றதொன்றுண்டு
வாசமலர் நாற்றம்போல் வந்து.

(பதவுரை). வாசமலர் நாற்றம்போல்வந்து=வாசனை பொருந்
திய மலரினுடைய சுகந்தத்தைப்போலவந்து, ஓசையினுள்ளே உதி
க்கின்றது ஒன்றுஉண்டு = சத்தத்தினுள் தோன்றுவது ஒரு பொரு
ளிருக்கின்றது. (எ-று.)

(கருத்துரை.) சத்த தன்மாத்திரையினிடமாக பூவின் மணம்
போலவரும்பொருள் ஒன்றிருக்கின்றது என்பது கருத்து. (10)

## 6. முத்திகாண்டல்.

**1. மனத்தோ டுறுபுத்தி யாங்கார ஞ் சித்தம்
அனைத்தினு மில்லை யது.**

(பதவுரை.) அது=முத்தியானது, மனத்தோடுறுபுத்தியாங்காரஞ் சித்தம்=மனம், புத்தி, ஆங்காரம், சித்தம் என்னும், அனைத்தினும் இல்லை=எல்லாவற்றிலுமில்லை. (எ-று.)

(கருத்துரை.) மனம், புத்தி, ஆங்காரம் சித்தம் எனனும் நான்கினுள்ளும் மோட்சமில்லை என்பது கருத்து. (1)

**2. வாக்குங்கருத்து மயங்குஞ் சமயங்கள்
ஆக்கிய நூலினு மில்.**

(பதவுரை.) வாக்குங்கருத்தும்=வசனமும் எண்ணமும், மயங்குஞ்சமயங்கள் = மயங்குகின்ற சமயங்களானவை, ஆக்கிய=உண்டாக்கின, நூலினுமில்=சாஸ்திரங்களிலுமில்லை. (எ-று.)

(கருத்துரை.) எந்தசசாஸ்திரங்களிலும் மனோவாக்குகள் மயங்குகின்றகாலம் சொல்லப்படவில்லை என்பது கருத்து. (2)

**3. உருவமொன் றில்லை யுணர்வில்லையோதும்
அருவமுந் தானதுவே யாம்.**

(பதவுரை.) உருவம் ஒன்று இல்லை = ஒருரூபமுமில்லை, உணர்வு இல்லை=உணர்ச்சியுமில்லை, ஓதும்=சொல்லப்படுகின்ற, அருவமும்தான் அதுவேயாம்=அருவப்பொருளும் அதுவேயாகும்(எ-று.)

(கருத்துரை.) உருவம், உணர்வு இவைகளில்லாத பொருள் அருவமேயாகும் ஆகையால் அதைநாடினல் முததிகாண்டலாகும் என்பது கருத்து. (3)

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
MADRAS 41

**4. தனக்கோ ருருவில்லை தானெங்கு மாகி
மனத்தகமாய் நிற்கு மது.**

(பதவுரை.) அது தனக்கொருஉருவில்லை=அப்பொருளுக்கொரு ரூபமுமில்லை, (ஆகையால்) தானெங்குமாகி = தான்சர்வஇடங்களிலும் வியாபித்ததாகி, மனத்தகமாயநிற்கும் = மனதிலிடத்திலும் வசித்திருக்கும். (எ-று.)

(கருத்துரை.) சர்வேஸ்வரன் என்னும்பொருளானது எவ்விடத்திலும் வியாபித்திருப்பதொனருமைகையால் அன்பர்களுடைய மனதின்கண்ணேயிருக்கும் என்பது கருத்து. (1)

**5. பெண்ணாணலியென்னும் பேரொன் றிலதாகி
விண்ணாகி நிற்கும் வியப்பு.**

(பதவுரை.) வியப்பு = அப்பொருளினுடைய வியப்பானது. பெண்ணாணலியென்னும்பேர்=பெண்ணென்றும் ஆண் என்றும் அலியென்றும் வழங்குகின்றபேர், ஒன்று இலதாகி=ஒன்றாயினும் இல்லாததாய், விண்ணாகிநிற்கும்=ஆகாயமாயிருக்கும். (எ-று.)

(கருத்துரை.) சர்வேஸ்வரன் ஆண், பெண், அலி என்றுசொல்லாதபடி ஆகாயமாயிருக்கும் என்பது கருத்து. (5)

**6. அனைத்துருவ மாய வறிவை யகலில்
தினைத்துணையு மில்லை சிவம்.**

(பதவுரை.) அனைத்து உருவமாய=எல்லாரூபங்களாயு மடைகின்ற, அறிவை அகலில்=அறிவைவிட்டால், சிவம் = சிவமானது, தினைத்துணையும் இல்லை=தினையளவுமில்லையாகும். (எ-று.)

(கருத்துரை.) சர்வரூபமாயுமிருக்கின்ற அறிவைவிட்டால் சிவமில்லை என்பதுகருத்து. (6)

7. துனிமுகத் துக்காதியாத் துன்னறிவின் றி
அணிதா ரிரண்டு விரல்.

(பதவுரை.) துனிமுகத்துக்கு ஆதியாக = வருந்துகின்ற முகத்துக்கு முதன்மையாக, துன் அறிவின்றி = நெருங்கிய அறிவின்றமல். அணிதார் இரண்டுவிரல் = அணிதாராயிருப்பது இரண்டுவிரலாகும். (எ-று) (7)

8. மயிர்முனையிற் பாதி மனத்தறி வுண்டேல்
அயிர்ப்புண்டாங் காதிநிலை.

(பதவுரை.) மயிர்முனையிற்பாதி = ஒருமயிரினுடைய முனையிற் பாதியினளவு, மனத்துஅறிவுஉண்டேல் = மனத்தினிடத்தில் அறிவு இருக்குமானால், அங்குஆதிநிலை = அவ்விடத்தில் முதற்பொருளினுடைய உண்மைநிலையானது, அயிர்ப்புஉண்டு = அயிர்ப்பு உண்டாகும். (எ-று)

(கருத்துரை.) சர்வேஸ்வரனுடைய உண்மைநிலையானது மயிர்முனையிற்பாதியினளவு கைகூடுமானால் முத்திகாணுதலாகும் என்பது கருத்து. (8)

9. தற்பர மான சதாசிவத்தோ டொன்றில்
உற்றறி வில்லை யுயிர்க்கு.

(பதவுரை.) தற்பரமான = ஞானபரமாகிய, சதாசிவத்தோடு ஒன்றில் = சதாசிவத்தினுடன் கலந்தால், உயிர்க்கு = ஆன்மாவுக்கு, உற்றறிவில்லை = உற்றறியுமறிவுஇல்லையாம். (எ-று.)

(கருத்துரை.) சதாசிவத்தோடுகலந்து விட்டால் அறிவுக்குச் சொந்தவுணர்ச்சி யுண்டாவதில்லை என்பது கருத்து. (9)

10. உறக்க முணர்வு பசிகெடப் பட்டால்
பிறக்கவும் வேண்டா பிறப்பு.

(பதவுரை) உறக்கம் = தூக்கமும், உணர்வு = உணர்ச்சியும், பசி=பசியும், கெடப்பட்டால்=கெட்டால், பிறப்பு=ஜெந்மங்களில், பிறக்கவும்வேண்டா=பிறக்கவேண்டியதில்லை. (எ-று.)

(கருத்துரை.) உறக்கமுதலியவை யொழிந்தால் பிறவியில்லை என்பது கருத்து. (10)

## 7. உருபாதீதம்.

**1.** கருவின்றி வீடாங் கருத்துற வேண்டில்
உருவின்றி நிற்கு முணர்வு.

(பதவுரை.) கருவின்றி = கருவில்லாமல், வீடாய் = மோட்சமாக, கருத்துஉறவேண்டில்=மனஞ்சம்மதிக்குமானல், உணர்வு= உணர்ச்சியானது, உருவின்றிநிற்கும=அரூபமாகவிருக்கும்.(எ-று.)

(கருத்துரை.) ஜெந்மத்தைவிரும்பாமல் மோட்சத்தை யடைய விரும்பினுல் உணர்ச்சியானது ரூபத்தை விரும்பாது என்பது கருத்து. (1)

**2.** பிறத்தலொன் றின்றிப் பிறவாமை வேண்டில்
அறுத்துருவ மாற்றி யிரு.

(பதவுரை.) பிறத்தல் ஒன்று இன்றி = பிறப்பதொன்றில்லாமல், பிறவாமைவேண்டில்=பிறவாநெறியை விரும்பினுல், உருவம் அறுத்து=ரூபத்தையறுத்து, மாற்றியிரு=வேறுபடுத்தி யிருக்கக்கடவாய். (எ-று.)

(கருத்துரை.) ஜெந்மவேரை யொழிக்கவேண்டியானல் ரூபத்தைமாற்றி யிருக்கவேண்டும் என்பது கருத்து. (2)

3. உருவங்க ளெல்லா மறுத்தற மாற்றில்
கருவேது மில்லை தனக்கு.

(பதவுரை.) உருவஙகளெல்லாம் = ரூபங்களெல்லாம், அறுத்து=நீக்கி, அறமாற்றில்=முழுமையும்மாற்றினால், தனக்கு = ஆன்மாவுக்கு, கருஏது மில்லை=எந்தசெந்மமுமில்லை. (எ-று.)

(கருத்துரை.) சர்வரூபங்களையும் ஒழித்தால் பிறகு ஜென்மமில்லையென்பது கருத்து. (3)

4. கறுப்பு வெளுப்பு சிவப்புறுபொன்பச்சை
யறுத்துருவ மாற்றி யிரு.

(பதவுரை.) கறுப்பு=கறுப்பும், வெளுப்பு = வெளுப்பும், சிவப்பு=சிவப்பும், பொன்=மஞ்சளும், பச்சை=பச்சையும் ஆகிய, உருவம்=ரூபஙகளை, அறுத்து=நீக்கி, மாற்றியிரு = வேறு சிவரூபத்தை யடைந்திரு. (எ-று.)

(கருத்துரை.) சகலநிறங்களையும் வெறுத்து சொரூபத்தையடையவேண்டும் என்பது கருத்து. (4)

5. அனைத்துருவமெல்லா மறக்கெடுத்து நின்
பினைப்பிறப் பில்லையாம் வீடு. [றால்

(பதவுரை.) அனைத்து உருவம் எல்லாம்=சகலரூபங்களையும், அறக்கெடுத்து நின்றால் = முழுமையுங்கெடுத்திருந்தால், பினை= பிறகு, பிறப்பில்லை=ஜென்மம் உண்டாவதில்லை, வீடு ஆம்=மோட்சமுண்டாகும். (எ-று.)

(கருத்துரை.) சகலரூபங்களையும் ஒழித்தால் மோட்சமென்பது கைகூடும் என்பது கருத்து. (5)

**6.** நினைப்புமறப்பற்று நிராகரித்து நின்றால்
தனக்கொன்று மில்லை பிறப்பு.

(பதவுரை.) நினைப்பும் மறப்பும் அற்று=நினைவும்மறப்புமற்று, நிராகரித்த நின்றால்=விட்டிருந்தால், தனக்குபிறப்பு ஒன்றுமில்லை-ஒருவனுக்கு ஒருபிறப்பு மில்லையாம். (எ-று)

(கருத்துரை.) நினைப்புமறப்பற்றவர்களுக்கு ஜென்மமில்லைஎன்பது கருத்து. (6)

**7.** குறித்துருவ மெல்லாங் குறைவின்றி மாற்
றித்துப் பிறப்பில்லை வீடு. [றில்

(பதவுரை.) குறித்து உருவமெல்லாம் = சொல்லப்பட்டரூபங்களெல்லாம், குறைவின்றி = யாதொருகுறைவுமில்லாமல், மாறறின்=மாற்றினால், மறித்துப்பிறப்பில்லை = மறுஜந்மம் உண்டாவதில்லை, வீடு=மோட்சமுண்டாகும் (எ-று)

(கருத்துரை.) சர்வரூபங்களையும் மாற்றினால் வேறு பிறப்பில்லைமோட்சமுண்டாகும் என்பது கருத்து. (7)

**8.** பிதற்று முணர்வை யறுத்துப் பிரபஞ்ச
விகற்ப முணர்வதே வீடு.

(பதவுரை.) பிதற்று முணர்வையறுத்து=பிதற்றுகின்ற உணர்ச்சியைநீக்கி, பிரபஞ்சவிகற்பம்=உலகபேதத்தை, உணர்வதேவீடு=உணர்ந்துகொள்வதே மோட்சமாகும். (எ-று.)

(கருத்துரை.) சிலவிகற்பமான உணர்ச்சியைநீக்கி உலகவிகற்பத்தை உணர்ந்து கொள்வதே மோட்சமாகும் என்பதுகருத்து.(8)

**9.** பிறப்பறுக்க வீடாம் பேருவமை யின்றி
அறுத்துருவ மாற்றி யிரு.

(பதவுரை) பேர் உவமையின்றி = பெரிய ஒப்புவமை யில்லாமல், உருவம்அறுத்து = சர்வரூபங்களையும் நீக்கி, மாற்றியிரு = மாறுதல்செய்திருந்தால், பிறப்பறுக்கவீடாம் = துறவியையொழிக்கும்படியான மோட்சமுண்டாகும். (எ-று.) (9)

## 10. ஓசையுணர்வோடுயிர்ப்பின்மையற்றக்கால் பேசவும் வேண்டா பிறப்பு.

(பதவுரை) ஓசை = ஓசையையும். உணர்வோடு = உணர்ச்சியையும். உயிர்ப்பின்மை = பெருமூச்சில்லாமையையும், அற்றக்கால் = நீங்கினால், பிறப்பு = ஜென்மம் உண்டென்று, பேசவும்வேண்டா = பேசவேண்டியதே யில்லை. (எ-று.)

(கருத்துரை) ஓசைமுதலியவைகளை ஒழித்தால் ஜென்மம் இல்லையென்பது கருத்து. (10)

# 8. பிறப்பறுதல்.

## 1. தன்னை யறிவு மறிவுதனைப் பெறில் பின்னைப் பிறப்பில்லை வீடு.

(பதவுரை.) தன்னை அறியும் அறிவுதனைப்பெறில் = தன்னைத் தானே உணராகின்ற உணர்ச்சியைப்பெற்றால், பின்னைபிறப்பில்லை = பிறகு ஜென்மமென்பது உண்டாவதில்லை, (ஆனால்) வீடு = மோட்சமுண்டாகும். (எ-று)

(கருத்துரை.) தன்னைத் தானறியும் உணர்ச்சி ஒருவனுக்கு உண்டானால் மோட்சவீட்டைக்கூடும் என்பது கருத்து. (1)

2. அறம்பாவ மாயு மறிவுதனைக் கண்டால்
பிறந்துழல வேண்டா பெயர்ந்து.

(பதவுரை.) அறம்பாவம் ஆயும்=தருமத்தையும் பாவத்தையும ஆராய்கின்ற, அளவுதனைக் கண்டால்=உணர்ச்சியை யுணர்ந்தால், பெயர்ந்து=பலதடவைகளில், பிறந்துழலவேண்டா = ஜெந்மித்து வருந்தவேண்டியதில்லை. (எ-று.)

(கருத்துரை.) அறம்பாவங்களை யுணர்ந்தவர்கள் வேறு ஜெந்மம் எடுப்பதில்லை என்பது கருத்து. (2)

3. சிவனுருவந் தானாய்ச் செறிந்தடங்கி நிற்கில்
பவநாச மாகும் பரிந்து.

(பதவுரை) சிவன் உருவம்தானாய் = சிவசொரூபமே தன்னுடைய ரூபமாக, செறிந்து அடங்கி நிற்கில்=கலந்து பொறுமையாயிருந்தால், பரிந்து=விரும்பி, பாவம்நாசமாகும்=செந்மமாறும்.

(கருத்துரை) தாம் சிவமாக உண்மையாகக் கொள்பவர்களுக்கு ஜெந்மமில்லையாகும் என்பது கருத்து. (3)

4. உறக்கமுணர்வோ டுயிர்ப்பின்மை யற்றால்
பிறப்பின்றி வீடாம் பரம்.

(பதவுரை.) உறக்கம் = நித்திரையும், உணர்வு= நல்லறிவும், உயிர்ப்பின்மை = உயிர்ப்பில்லா திருத்தலுமாகிய இவைகள், அற்றால்=நீங்கினால், பிறப்பின்றி=ஜெந்மமில்லாமல், பரம்வீடாம்=மேலாகிய மோட்சமுண்டாகும். (எ-று.)

(கருத்துரை.) ஊண் உறக்கமுதலியவைகளை யறவேயொழித்தவர்களுக்குப் பிறவியில்லை என்பது கருத்து. (4)

**5.** நினைப்பு மறப்பு நெடும்பசியு மற்றால்
அனைத்துலகும் வீடா மது.

(பதவுரை) நினைப்பும் மறப்பும் நெடும்பசியும்அற்றால் = எண்ணுதலும் மறத்தலும்மிக்கபசியும்ஒழிந்தால், அனைத்துலகும் வீடாம் அது = எல்லாவுலகங்களும் அந்த மோட்சவீடாகும். (எ-று.)

(கருத்துரை.) நினைப்பு முதலியவைகளை ஒழியப் பெற்றவர்களுக்கு எல்லாவுலகங்களும் மோட்சவுலக மாகவே தோன்றும் என்பது கருத்து. (5)

**6.** உடம்பிரண்டுங் கெட்டா லுறுபய னொன்
றிடப்படு மீசன் றிறம். றுண்டு

(பதவுரை.) உடம்பிரண்டுங்கெட்டால் = ஸ்தூலதேகம்சூட்சுமதேகங்களாகிய இரண்டுங்கெட்டால், உறுபயன் ஒன்றுஉண்டு = வாக்கூடிய பிரயோசனம் ஒன்றிருக்கிறது, (அதாவது) ஈசன் திறம் இடப்படும் = சர்வேஸ்வரனுடைய சக்திநிடப்படுதலாகும் (எ-று.)

(கருத்துரை.) இரண்டு உடம்பையும் நசிப்பித்தாலே சிவனருள் கைகூடும் என்பது கருத்து. (6)

**7.** தன்னை யறிந்து செறிந்தடங்கித் தானற்
பின்னைப் பிறப்பில்லை வீடு. [றால்

(பதவுரை.) தன்னையறிந்து = தன்னைத்தானுணர்ந்து, செறிந்து அடங்கி தான் அற்றால் = நின்றடங்கி தானென்னும் அகங்காரம் ஒழிந்தால், பின்னைபிறப்பில்லைவீடு = பிறகு ஜென்மம் வராமல் மோட்சமுண்டாகும். (எ-று.)

(கருத்துரை.) தன்னைத்தான் அறிபவனுக்கு மோட்சமே கைகூடும் என்பது கருத்து. (7)

**8.** மருளன்றி மாசறுக்கின் மாதூ வெளியாய்
இருளின்றி நிற்கு மிடம்.

(பதவுரை.) மருளன்றி=மயக்கமில்லாமல், மாசறுக்கின்=குற்றங்களையறுத்தால், மாதூவெளியாய் = மகத்தான பரிசுத்தமாகிய தேஜோமயமாய், இருளின்றி நிற்கும் இடம் = அஞ்ஞானமில்லாமல் நிற்கின்ற இடங்கிடைக்கும். (எ-று.)

(கருத்துரை.) மாய்கையை யொழித்தவர்க்கு மோட்சங் கைகூடும் என்பது கருத்து. (8)

**9.** விகாரங் கெடமாற்றி மெய்யுணர்வு கண்
அகாரமாங் கண்ட றிவு. [டால்

(பதவுரை.) விகாரங்கெடமாற்றி = மனோவிகாரமானது கெடும் வண்ணம்மாற்றி, மெய்யுணர்வுகண்டால்=உண்மையான உணர்ச்சியைக்கண்டால், அறிவு=அறிவானது, அகாரமாய்=அகாரமாகும். (எ-று.)

(கருத்துரை.) மனோவிகாரமற்றவர்களுடைய அறிவு ஞானமயமாகும் என்பது கருத்து. (9)

**10.** சிந்தை யாங்காரஞ் செறிபுல னற்றக்கால்
முந்தியே யாகுமாம் வீடு.

(பதவுரை.) சிந்தை=சிந்தித்தலும், ஆங்காரமும் = அகங்காரமும், செறிபுலன்=நெருங்கிய ஐம்புலன்களும், அற்றக்கால்=ஒழிந்தால், வீடு=மோட்சமானது, முந்தியே யாகுமாம் = முன்னதாகவே கைகூடுமாம். (எ-று.)

(கருத்துரை.) அந்தக்கரணங்களின் சேஷ்டைகள் ஒழியப்பெற்றோர்க்கு வீடு சீக்கிரத்தில் கைகூடும் என்பது கருத்து. (10)

## 9. தூயவெளி காண்டல்.

**1** தோன்றியதெல்லாந் தொடக்கறுத்துத்தூய்வெளியாய்த்
தோன்றியக்காற் றூய வெளி.

(பதவுரை.) தோன்றிய எல்லாம் = காணப்பட்ட யாவற்றையும், தொடக்கறுத்து = நீக்கி, தூய்வெளியாய் தோன்றியக்கால் = பரிசுத்தமான வெளியாகக்காணப்பட்டால், தூயவெளி=ஞானோதயமுண்டாகும்; (எ-று.)

(கருத்துரை.) பரிசுத்தவெளியாகக் காணப்பட்டால் ஞானோதயமுண்டாகும் என்பது கருத்து. (1)

**2.** தெளிவாயதேச விளக்கொளியைக் காணி
வெளியாய வீடதுவே யாம். [ல்

(பதவுரை.) தெளிவாய=தெளிந்த, தேசவிளக்கொளியைக்காணில்=உள்நாட்டுவிளக்கொளியைத்தெரிசித்தால், வெளியாய=யாவராலும் வெளிப்படையாக அங்கீகரிக்கக்கூடிய, வீடதுவேயாம்= மோட்சமானது அதுவேயாகும். (எ-று.)

(கருத்துரை.) அந்தர்முகத்தில் காணப்படுந் தேஜோமயமே மோட்சமாகும் என்பது கருத்து. (2)

**3.** மின்போலுருவ விளக்கொளிபோல் மேற்
முன்போல மூலம் புகும். [காணில்

(பதவுரை.) மினபோலுருவ = மின்னலைப்போல் சொரூபத்தையும், விளக்கொளிபோல்=விளக்கொளிபோல்தேஜோமயத்தையும், மேற்காணின் = வெளிப்படையாகத் தரிசித்தால், முன்போல மூலம்புகும்=முன்போல மூலத்திற்புகுவதாகும். (எ-று.)

(கருத்துரை) தேஜோமயத்தையுடைய பொருளைத் தரிசித்தால் மோட்சமடையலாம் என்பது கருத்து. (3)

4. பளிங்கு வலம்புரி பாலிகர்த்ததாயில்
துளங்கொளியாந் தூய நெறி.

(பதவுரை.) பளிங்கு=பளிங்கையும், வலம்புரி = வலம்புரியையும், பால=பாலையும், நிகர்த்ததாயின் = ஒப்பானதானால், துளங்கொளியாந் தூயநெறி = பரிசுத்தப்பொருந்திய சன்மார்க்கமானது மிக்கதேஜோமயத்தை யுடையதாகும். (எ-று.) (4)

5. சங்கு நிறம்போற் றவள வொளிகாணில்
அங்கையி னெல்லியே யாகும்.

(பதவுரை.) சங்குநிறம்போல் = சங்கினுடையநிறத்தைப்போல், தவளவொளிகாணில்=வெண்மைநிறத்தைத் தெரிசித்தால், அங்கையின் நெல்லியேயாம்=தேஜோமயமானது உள்ளங்கையிலுள்ள நெல்லிக்கனிபோலாகும். (எ-று.) (5)

6. துளங்கிய தூண்டா விளக்கொளிகாணில்
விளங்கிய வீடாம் விரைந்து.

(பதவுரை.) துளங்கிய=விளங்கின, தூண்டாவிளக்கொளிகாணில்=தூண்டாததேஜோமயத்தைத் தரிசித்தால், விரைந்து=சீக்கிரம், விளங்கியவீடாம்=விளங்குகின்ற மோட்சமுண்டாகும் (எ-று.)

(கருத்துரை.) தேஜோமயப்பொருளைத்தரிசித்தால் மோட்சங் கைகூடும் என்பது கருத்து. (6)

7. மின்மினி போன்ற விளக்காகத் தான்றோன்றில்
அன்னப் பறவையே யாம்.

(பதவுரை) மின்மினிபோன்ற = மின்னும்பூச்சைப் போன்ற, விளக்காகதான்தோன்றில்=விளக்காகக் காணப்பட்டால், அன்னப்பறவையேயாம் = அன்னப்பட்சிபோல் உண்மையை உணரக்கூடு மாம். (எ-று.)

(கருத்துரை.) தேஜோமயதரிசனத்தால் உண்மைப்பொருளை யடையக்கூடும் என்பது கருத்து. (7)

8. உள்ளொளிதோன்றி லருளொளி அவ்வொளி யாதி யொளி.

(பதவுரை) உள்ளொளிதோன்றில் = அந்தர்முகஒளியானது காணப்பட்டால், அருளொளி = திருவருள்விளக்கமானது, அவ்வொளி= அந்தவொளியேயாகும், ஆதி ஒளி = (ஆகையால்) அதுபிரதானமான ஒளியாகும். (எ-று.) (8)

9. பரந்த விசும்பிற் பரந்த வொளிகாணில் பரம்பரமே யாய வொளி.

(பதவுரை.) பரந்தவிசும்பில் = எங்கும் வியாபித்திருக்கின்ற ஆகாயத்தில், பரந்தவொளிகாணில்=பரவியிருக்கின்ற தேஜஸைக் கண்டால், பரம்பரமேயாயவொளி=அந்தஒளியே இறைவனாகும் ()

(கருத்துரை) தேஜோமயமே இறைவனுடைய சொரூபம் என்பது கருத்து. (9)

10. ஆதி யொளியாகி யாள்வானுந் தானாகி ஆதி யவனுருவு மாம்.

(பதவுரை.) ஆதி=இறைவனானவன், ஒளியாகி=தேஜோரூபமுடையவனாகியும், ஆள்வானுந்தானாய்=ஆண்டருள்செய்பவனுந் தானேயாகியும், ஆதியவனுருவுமாம் = ஆவது ஆதியிலிருந்து அவனுடைய சொரூபமேயாகும். (எ-று.)

(கருத்துரை.) சர்வம் சிவசொரூபம் என்பது கருத்து. (10)

## 10. சதாசிவம்.

**1.** பத்துத் திசையும் பரந்த கடலுலகும்
ஒத்தெங்கும் நிற்குஞ் சிவம்.

(பதவுரை.) பத்துத்திசையும் = பத்துத்திசைகளிலும், பரந்த = பரவியிருக்கின்ற, கடல் = சமுத்திரமும், உலகம் = உலகங்களிலும், ஒத்து = ஒரே தன்மையாய் சிவம் = சிவமென்னும்பொருளானது, எங்குநிற்கும் = எவ்விடத்திலுமிருக்கும். (எ-று.)

(கருத்துரை.) சிவபெருமான் எங்குங் கலந்திருப்பான் என்பது கருத்து. (1)

**2.** விண்ணிறைந்து நின்று விளங்குஞ் சுடரொளிபோல்
உண்ணிறைந்து நிற்குஞ் சிவம்.

(பதவுரை.) விண்ணிறைந்து நின்று = ஆகாயத்தில் பரவியிருந்து, விளங்கும் = விளங்குகின்ற, சுடரொளிபோல் = தேஜோமயப் பொருளைப்போல, சிவம் = சிவமானது, உண்ணிறைந்து நிற்கும் = இருதயத்தில் கலந்திருக்கும். (எ-று.)

(கருத்துரை.) சர்வேஸ்வரனானவன் சகல ஆன்மகோடிகளுள்ளுங் கலந்திருப்பான் என்பது கருத்து. (2)

**3.** ஆகமுஞ் சீவனு மாசையுந் தானாகி
ஏகமாய் நிற்குஞ் சிவம்

(பதவுரை.) ஆகமும் = சரீரமும், சீவனும் = உயிரும், ஆசையும் = ஆசையும், தானாகி = தானேயாய், சிவம் = சிவமானது, ஏகமாய்நிற்கும் = ஒன்றாகவிருக்கும். (எ-று.)

(கருத்துரை.) சதாசிவமானது எல்லாப் பொருளாகவுமிருக்கும் என்பது கருத்து. (3)

4. வாயுவாய் மனமாய் மற்றுமாய் அப்பொருளாய்
ஆயுமிடந் தானே சிவம்.

(பதவுரை.) வாயுவாய் = காற்றாகியும். மனமாய் = மனமாகியும். மற்றும் = இன்னும். அப்பொருளாய் = அனைத்துப்பொருளாகியும், ஆயும் இடந்தானே சிவம் = ஆராய்கின்ற இடமே சிவமாகும். (எ-று.)

(கருத்துரை.) சர்வபொருள்களிலும் ஆராய்ந்தவிடமே சிவபெருமானாவான் என்பது கருத்து. (4)

5. எண்ணிறந்த யோனி பலவாய்ப் பரந்தெ
உண்ணிறைந்து நிற்குஞ் சிவம். [ங்கும்

(பதவுரை.) எண்ணிறந்த = அளவுசொல்லப்படாத. யோனி = யோனிகளில். பலவாய்ப்பரந்து = பலவகையாகப் பரவி, எங்கும் = எவ்விடத்திலும், சிவம் = சிவபெருமானானவன். உண்ணிறைந்து நிற்கும் = உள்வியாபகமாகவிருக்கும். (எ-று.)

(கருத்துரை.) பலயோனிகளிலும் பலவகையாக வியாபித்திருக்கும் என்பது கருத்து. (5)

6. ஒன்றேதா னூழி முதலாகிப் பல்லுயிர்க்
ஒன்றாகி நிற்குஞ் சிவம். [கும்

(பதவுரை.) ஒன்றேதான் = ஒருபொருளே, ஊழிமுதலாகி = ஊழிக்காலமுதலாகி, பல்லுயிர்க்கும் = சகல ஆன்மாக்களுக்கும், ஒன்றாகிநிற்கும் சிவம் = சிவபெருமான் கலந்திருப்பான். (எ-று.)

(கருத்துரை.) சிவபெருமான் ஒருவனே சகல வுயிர்களிலுங் கலந்திருக்கிறவனாவான் என்பது கருத்து. (6)

7. மூலமொன்றாகி முடிவொன்றா யெவ்வுயிர்க்குங்
காலமாய் நிற்குஞ் சிவம்.

(பதவுரை) மூலமொன்றாகி=காரணமாகிய ஒருபொருளாகியும், முடிவு ஒன்றாய் = முடிவுப்பொருள் ஒன்றாகியும், எவ்வுயிர்க்கும்=எல்லாவுயிர்களுக்கும், காலமாய்நிற்கும் சிவம் = சிவமானது காலமாய்நிற்கும். (எ-று.)

(கருத்துரை.) மூலமும் முடிவுமாக விருப்பவன் சதாசிவனே என்பது கருத்து. (7)

8. மண்ணிற்பிறந்த வுயிர்க்கெல்லாந் தானாகி
விண்ணகமே யாகுஞ் சிவம்.

(பதவுரை.) மண்ணிற்பிறந்த=உலகத்திலுண்டான, உயிர்க்கெல்லாந்தானாகி=சகலவுயிர்களுக்குந் தானேமுதலாகி, விண்ணகமேயாகும்சிவம்=சிவபெருமானானவன் ஆகாயசஞ்சாரியேயாவான்.

(கருத்துரை.) சிவபெருமானானவன் உலகத்திலுண்டான ஆன்மகோடிகளுடைய சுழிமுனைஸ்தானத்தில்சஞ்சரிப்பவனாவான் என்பது கருத்து. (8)

9. தோற்றமது வீடாகித் தொல்லைமுத லொன்றாகி
ஏத்தவருமீச னுளன்.

(பதவுரை.) தோற்றமதுவீடாகி = உற்பத்தியே வீடாகியும், தொல்லைமுதலொன்றாகி=பூர்வீகமுதல் ஒரேபொருளாகியும், ஏத்தவரும் ஈசன் உளன்=யாவராலும் துதிசெய்யப்பட்டுவருகின்றசர்வேஸ்வரன் இருக்கின்றான். (எ-று)

(கருத்துரை) பிறவிமுதல் எல்லாவிடங்களிலு மிருக்கின்ற இறைவனையே உண்மையாக யாவருமுணரவேண்டும் என்பது கருத்து. (9)

**10.** நிற்கும் பொருளும் நடப்பனவுந் தானாகி
உற்றெங்கும் நிற்குஞ் சிவம்.

(பதவுரை.) நிற்கும்பொருளும்=நிற்கின்றவஸ்துவும், நடப்பனவுந்தானாகி=நடக்கின்ற பொருளாகியும், உற்று எங்கும் நிற்குஞ் சிவம்=சர்வவிடங்களிலும் சிவம் கலந்திருக்கும் (எ-று.)

(கருத்துரை.) சகலபொருள்களிலும் இறையவன் கலந்திருப்பான் என்பது கருத்து. (10)

## 1. தன்பால்.

### குருவழி.

**1.** தன்பா லறியுந் தவமுடையார் நெஞ்சகத்
அன்பா யிருக்கு மரன். [துள்

(பதவுரை.) தன்பால்அறியும்=தன்னுடையபாலை அறிகின்ற, தவமுடையார்=தவத்தையுடையவர்களது, நெஞ்சகத்துள்=மனதில், அரன்=சர்வேஸ்வரனானவன், அன்பாயிருக்கும்=அன்புடனேயிருப்பான் (எ-று.)

(கருத்துரை.) தன்னைத்தான் அறியவல்லவர் மனத்தின்கண் இறையவன் எழுந்தருளியிருப்பவனாவான் என்பது கருத்து. (1)

**2.** சிந்தை சிவமாகக் காண்பவர் சிந்தையில்
சிந்தித் திருக்குஞ் சிவம்.

(பதவுரை.) சிந்தை=தங்களுடைய மனங்களை, சிவமாகக்காண்பவர்=சிவமாகவே பார்ப்பவர்களுடைய, சிந்தையில்=மனதின்

கன், சிவம்=சிவப்பொருளானது, சிந்தித்து இருக்கும் = எண்ணியிருக்கும் (எ-று)

(கருத்துரை.) மனத்தைச் சிவமென்றே கொள்வோர்க்கு சிவபெருமான் எழுந்தருளுவான் என்பது கருத்து. (2)

3. குருவி னடிபணிந்து கூடுவ தல்லார்க்
கருவமாய் நிற்குஞ் சிவம்.

(பதவுரை.) குருவின் அடிபணிந்து=ஞானாசிரியனுடைய திருவடிகளை வணங்கி, கூடுவது அல்லார்க்கு=சேராதவர்களுக்கு, சிவம்=சிவமானது, அருவமாய் நிற்கும்=ரூபமற்றிருக்கும். (எ-று)

(கருத்துரை.) ஞானாசிரியனுடைய திருவடிகளை உள்ளபடியே வணங்கி அவைகளிற் கூடவல்லார்க்கு அவனுடைய திருவருளானது கூடியதாகும் என்பது கருத்து. (3)

4. தலைப்பட்ட சற்குருவின் சன்னிதியி லல்
வலைப்பட்ட மானதுவே யாம். [லால்

(பதவுரை.) தலைப்பட்ட=உயர்ந்த, சற்குருவின்=ஞானாசிரியனுடைய, சந்நிதியிலல்லால் = திருச்சந்நிதானத்தின் முன்னேயல்லாமல், வலைப்பட்டமானதுவேயாம் = வலையிற்சிக்கிய மானதுவேயாகும். (எ-று)

(கருத்துரை.) சர்வஜெந்துகளும் ஞானாசிரியனுடைய சந்நிதானத்தில் அடங்கியிருக்கவேண்டும் என்பது கருத்து. (4)

5. நெறிபட்ட சற்குரு நேர்வழி காட்டில்
பிறிவற் றிருக்குஞ் சிவம்.

(பதவுரை.) நெறிபட்ட=ஞானவழியிற்சேர்ந்த, சற்குரு=ஞானாசிரியரானவர், நேர்வழிகாட்டில்=உண்மையானவழியை உபதே

சித்தால், பிரிவற்றிருக்குஞ்சிவம் = சிவபெருமானானவன் யாதொ பிரிவுமின்றிக் கலந்திருப்பான். (எ-று.)

(கருத்துரை) ஞானாசிரியனுடைய உண்மையான உபதேசத்தால் இறைவன் திருவருள்செய்து கலந்திருப்பான் என்பது கருத்து.

6. நல்லன நூல்பல கற்பினுங் காண்பரிதே
எல்லை யில்லாத சிவம்.

(பதவுரை.) நல்லன = நன்மையான, நூல்பல = நூல்கள்பலவற்றை, கற்பினும் = கற்றாலும், எல்லையில்லாதசிவம் = அளவு சொல்லப்படாத வியாபகம்பொருந்திய சிவபெருமானை, காண்பரிது = தரிசிப்பது மிகவும் அருமையாகும். (எ-று)

(கருத்துரை.) ஞானாசிரியருடைய கிருபையில்லாமல் அநேக சாஸ்திரங்களைப் படித்திருந்தாலும் சர்வவியாபகப்பொருளானசிவ பெருமானைத் தரிசிப்பது அருமையான காரியமேயாகும் என்பது கருத்து. (6)

7. நினைப்பு மறப்பு மில்லாதவர் நெஞ்சந்
தனைப் பிரியாது சிவம்.

(பதவுரை.) நினைப்பும் மறப்பும் இல்லாதவர் = நினைப்பும்மறப்பும் இல்லாதவர்களுடைய, நெஞ்சந்தனை = மனத்தை, சிவம் = சிவபெருமானானவன், பிரியாது = கலந்திருப்பான். (எ-று.)

(கருத்துரை.) சர்வகாலமும் ஒரேசிந்தனையாக இருப்பவர்களுடைய மனத்தைவிட்டு இறையவன் க்ஷணநேரமும் பிரிந்திருக்கமாட்டான் என்பது கருத்து. (7)

8. ஒன்றிலொன் றில்லாதமனமுடையாருடல்
என்று மொன்றாது சிவம்.

(பதவுரை.) ஒன்றில் = ஒரேபொருளினிடத்தில், ஒன்றாத= கலவாத, மனமுடையாருடல்=மனத்தையுடையவர்களுடைய சரீரத்தில், சிவம்=பரம்பொருளானது, என்றும் ஒன்றாது=எந்தக்காலத்திலும் கலவாது. (எ-று)

(கருத்துரை.) ஒரேபொருளைப்பற்றாதவர்களை இறைவனும்பற்றமாட்டான் என்பது கருத்து. (8)

## 9. நாட்ட மில்லாவிடம் நாட்ட மறிந்தபின் மீட்டு விடாது சிவம்.

(பதவுரை.) நாட்டமில்லாவிடம் = எவராலும் நாட்டத்தையடையப்படாத இடத்தினை, நாட்டமறிந்தபின் = உண்மைப்பார்வையால் உணர்ந்தபின், சிவம்மீட்டுவிடாது = சிவமானது மறுபடியும் திருப்பவிடாது. (எ-று.)

(கருத்துரை.) இறைவன் எழுந்தருளியிருக்கும் இடத்தையுணர்ந்தபின்னர் இறைவன் அவர்களைவிடமாட்டான் என்பதுகருத்து.

## 10. பஞ்சமாசத்த மறுப்பவர்க் கல்லா அல் அஞ்ச லென்னாது சிவம்.

(பதவுரை.) பஞ்சமாசத்தம்=பஞ்சமாபாதகம் என்கிற சத்தத்தை, அறுப்பவர்க்கல்லால் = அறுத்தொழிப்பவர்களுக் கல்லாமல், சிவம் = பரம்பொருளானது, அஞ்சலென்னாது = பயப்படவேண்டாம் என்றுசொல்லாது. (எ-று.)

(கருத்துரை.) யாரொருவர் பஞ்சமாபாதகங்களை விட்டு விலகுகின்றார்களோ அவர்களை உண்மையாய்க்காப்பது சிவமேயாகும் என்பது கருத்து. (10)

## 2. அங்கியிற்பஞ்சு.

**1.** அங்கியிற்பஞ்சுபோலாகாயத்தே நினையில்
சங்கிக்க வேண்டா சிவம்.

(பதவுரை.) அங்கியிற்பஞ்சுபோல்=நெருப்பில்பட்ட பஞ்சைப்போல, ஆகாயத்தே நினையில = ஆகாயத்தினிடத்தில் நினைப்போமாயில, சிவம்=சிவத்தை, சங்கிக்க வேண்டாம்=சந்தேகங்கொள்ள வேண்டாம். (எ-று)

(கருத்துரை.) நெருப்பிற்பட்ட பஞ்சைப்போல ஒன்றுமின்றி எண்ணுபவர்களுக்கு சர்வேஸ்வரனுடைய கிருபையுண்டாகும் என்பது கருத்து. (1)

**2.** மெய்ப்பாலறியாத மூடர்தநெஞ்சத்தின்
அப்பால தாகுஞ் சிவம்.

(பதவுரை.) மெய்ப்பாலறியாத = உண்மைவிஷயத்தை யுணராத, மூடர்தநெஞ்சத்தில்=மூடர்களுடையமனதில், சிவம் அப்பாலதாகும்=சிவபெருமான் கடந்திருப்பான். (எ-று)

(கருத்துரை.) மூடர்களுக்கு இறையவன் தூரத்தேயிருப்பான் என்பது கருத்து. (2)

**3.** நெஞ்சகத்துணோக்கி நினைப்பவர்க்கல்லா
அஞ்சலென்னாது சிவம். [ல்

(பதவுரை.) நெஞ்சகத்துள்நோக்கி=மனத்தைக்கொண்டு பார்த்து, நினைப்பவர்க்கல்லால் = சிந்திப்பவர்களுக்கல்லாமல், சிவம்= சிவபொருளானது, அஞ்சலென்னாது=பயப்படாதீர் என்று சொல்லாது. (எ-று.)

(சுருக்கவுரை.) இறைவனை உள்ளபடியே தாசனநேடையமனத்தைக்கொண்டு சிந்திப்பவர்களுக்கே கிருபாகடாட்சம் செய்வான் என்பது கருத்து. (3)

**4. பற்றிலா தொன்றினைப் பற்றினு லல்லது
கற்றதனு லென்ன பயன்.**

(பதவுரை.) பற்றிலாதொன்றினை = யாதொன்றிலும் பற்றில்லாத ஒருபொருளை, பற்றினுல் அல்லது = பற்றிப்பிடித்தாலல்லாமல், கற்றதனுலென்னபயன் = சர்வசாஸ்திரங்களையும் படித்ததனுல் என்னபிரயோசனம். (எ-று.)

(சுருக்கவுரை.) யாதொன்றிலும் பற்றில்லாத இறைவனை வணங்கினுலே சர்வநூல்களையும் கற்றபயனை யடையலாம் என்பது கருத்து. (4)

**5. தம்மையறிவாரைத் தாமறிந்து கொண்ட
தம்மை யறிவரோ தான். [பின்**

(பதவுரை.) தம்மையறிவாரை = தங்களைத்தாமேயுணர்வாரை, தாம் அறிந்துகொண்டபின் = தாமுணர்ந்துகொண்டபின்னர், தம்மையறிவாரோதான் = தம்மைத்தாமறியு மறிவு உண்டாமோ. (எ-று)

(சுருக்கவுரை.) தம்மைத்தாமறிந்து தலைவனை யுணர்ந்தபின் மீண்டும் இறக்கார் என்பது கருத்து. (5)

**6. அசபையறிந்துள்ளே யழலெழநோக்கில்
இசையாது மண்ணிற் பிறப்பு.**

(பதவுரை.) அசபையறிந்து = அசபாமந்திரத்தை யுணர்ந்து, உள்ளே = மனத்தின்கண்ணே, அழல்எழல் நோக்கில் = அக்கினிகிளம்புவதைப்பார்த்தால், மண்ணில்பிறப்பு இசையாது = இவ்வுலகத்தில் ஜெந்மமுண்டாக மாட்டாது (எ-று.)

(கருத்துரை) யாவரொருவர் அசபாமந்திரத்தை யுணர்ந்து தியானஞ்செய்கின்றார்களோ அவர்கள் மறுஜெனனமெடுப்பதில்லை என்பது கருத்து. (௬)

**7. இமையாத நாட்டத் திருந்துணர்வாருக்**
**கமையாத வானந்த மாம்.**

(பதவுரை) இமையாதநாட்டத்திருந்து = இமைக்காதபார்வையிலிருந்து. உணர்வாருக்கு = உணருகின்றவர்களுக்கு, அமையாத ஆநந்தமாம் = பொருந்தாத வாநந்தமுண்டாகும் (எ-று.)

(கருத்துரை) தூங்காமல் தரிசிப்பவர்களுக்கு என்றுமழியாத ஆநந்தமுண்டாகும் என்பது கருத்து. (7)

**8. துரியங் கடந்த சுடரொளியைக் கண்டால்**
**மரணம் பிறப்பில்லை வீடு.**

(பதவுரை) துரியங்கடந்த = துரியஸ்தானத்தைத் தாண்டியிருக்கின்ற, சுடரொளியை = தேஜோமயப்பொருளை, கண்டால் = தரிசித்தால். மரணம்பிறப்பில்லை = சாதலும் பிறத்தலுமில்லையாம், வீடு = மோட்சமுண்டாகும் (எ-று)

(கருத்துரை) தேஜோமயமானபொருளை உள்ளபடி தரிசிப்பவர்களுக்கு இனிபிறவாநெறி கைகூடும் என்பது கருத்து. (8)

**9. மதிபோ லுடம்பினை மாசற நோக்கில்**
**விதிபோ யகல விடும்.**

(பதவுரை) மதிபோல் = சந்திரனைப்போல, உடம்பினை = சரீரத்தை, மாசற = குற்றமின்றி, நோக்கில் = பார்த்தால், விதிபோயகலவிடும் = விதிபறந்துபோம் (எ-று.) (9)

**10. சீவன் சிவலிங்க மாகத் தெளிந்தவர்நம்**
**பாவ நசிக்குமறிந்து.**

(பதவுரை.) சீவன்=சீவனே, சிவலிங்கமாகச் = சிவலிங்கமாக வே, தெளிந்தவர்தம்=தெளிந்தவர்களுடைய, பாவம் பரிந்து நசிக் கும்=ஜெந்மமானது வேரோடற்றுவிடும் (எ-று)

(கருத்துரை.) சீவனும் சிவனும் ஒன்றேயென்று உணர்பவர்க ளுக்கு பிறவாமையுண்டா மென்பது கருத்து. (10)

## 3. மெய்யகம்.

**1.** மெய்யகத்தி னுள்ளே விளங்குஞ் சுடர் கையகத்தி னெல்லிக் கனி. [நோக்கில்

(பதவுரை.) மெய்யகத்தினுள்ளே = ஸ்தூலசூக்குமசரீரங்களு க்குள்ளே, விளங்குஞ்சுடர்=விளங்குகின்ற தேஜோமயப்பொருளை, நோக்கில்=தரிசித்தால், (அப்பொருளானது) கையகத்தின் நெல் லிக்கனி=உள்ளங்கையில் நெல்லிக்கனிபோல் வெளிப்படையாயக் கிடைக்கக் கூடியதாகும (எ-று.)

(கருத்துரை) இறைவன் ஒவ்வொரு ஆன்மாக்களிலும் கலந் திருப்பவனும் அவ்வான்மாக்கள் ஒவ்வொருசரீரங்களிலும இருப்ப னவுமாகையால் அப்படிப்பட்ட இறைவனைத் தரிசித்தால் அவன் எப்பொழுதும் வெளிப்படுபவனுவான் என்பது கருத்து. (1)

**2.** கரையற்ற செல்வத்தைக் காணுங் காலத் உரையற் றிருப்ப துணர்வு. [தில்

(பதவுரை.) உணர்வு=உணர்ச்சியானது, கரையற்ற செல்வத தைக் காணுங்காலத்தில் = அளவுகடந்தசெல்வமாகிய சாவேஸ்வர னை தரிசிக்குங்காலத்தில், உரையற்றுஇருப்பது = யாதொருசொல் லுமில்லாமலிருப்பதாகும் (எ-று.)

(கருத்துரை.) அளவுகடந்த செல்வமாகிய இறைவனை உள்ள படியே தெரிசித்தால் வாய்பேசாமல் மௌனமடையக்கூடும் என்பது கருத்து. (2)

3. உண்டபசி தீர்ந்தார் போலுடம் பெல்லா
கண்டுகொள் காதல் மிகும். [அங்

(பதவுரை.) உண்ட=புசித்து, பசிதீர்ந்தார்போல்=பசியைநீக்கிக் கொண்டவர்களைப்போல, உடம்பெல்லாங் கண்டுகொள்=சர்வமுழுமைக்கும் கண்டுகொள், காதல்மிகும்=ஆசையானது அதிகரிக்கும் (எ-று)

(கருத்துரை.) பசிதீர்ந்தவர்களைப்போலவே இறையவனுடைய வியாபகம் சர்வமுழுமைக்கும் இருப்பதை உணர்ந்து கொள்ளவேண்டியதென்பது கருத்து. (3)

4. உரைசெயு மோசை யுரைசெய் பவர்க்கு
நரைதிரை யில்லை நமன்.

(பதவுரை.) உரைசெயுமோசை = சொல்லப்படுகின்ற நாதத்துவத்தை, உரைசெய்பவர்க்கு = சொல்லுபவருக்கு, நரைதிரை= நரையும்திரையும், நமன்=எமனும் இல்லை=உண்டாவதில்லை (எ-று)

(கருத்துரை.) நாதத்துவத்தை உண்மையாகக் கண்டறிந்து சொல்லுபவர்களுக்கு நரைதிரைகளும் எமனும் உண்டாவதில்லையாம் என்பது கருத்து. (4)

5. தோன்றாத தூயவெளி தோன்றியக்காலு
தோன்றாமற் காப்ப தறிவு. [ன்னைத்

(பதவுரை.) தோன்றாத = யாவருக்கும் காணப்படாத, தூயவெளி=பரிசுத்தமாகிய தேஜஸானது, தோன்றியக்கால்=காணப்

பட்டால். உன்னை=உன்னை. தோன்றாமல் காப்பது=வெளிப்படுத்தாமல் காப்பது. அறிவு=அறிவாகும் (எ-று)

(கருத்துரை.) எவராலும் உணரப்படாத தேஜோமயமானது யாவருக்குக் காணப்படுகின்றதோ அவர்கள் அறிவு முகாந்தரமாக நற்பேற்றை யடையார்கள் என்பது கருத்து. (5)

**6. வாக்குமனமு மிறந்த பொருள் காணில்**
**ஆக்கைக் கழிவில்லை யாம்.**

(பதவுரை.) வாக்கும்=வசனமும், மனமும்=மனசும், இறந்த பொருள் = ஆகிய இவைகளைக் கடந்திருக்கின்ற பொருளைக்கண்டால், ஆக்கைக்கு=சரீரத்திற்கு, அழிவில்லையாம்=யாதொரு கெடுதியும் உண்டாவதில்லையாம் (எ-று)

(கருத்துரை.) வாக்கையும் மனத்தையும் இறந்திருக்கின்ற கடவுளை உள்ளபடியே தரிசித்தால் சரீரம் அழிந்து படுவதில்லையாம் என்பது கருத்து. (6)

**7. கண்ணகத்தே நின்று களிதருமே காணுங்கால்**
**உன்னகத்தே நின்ற வொளி.**

(பதவுரை.) உன் அகத்தே நின்ற ஒளி=உன்னுடைய மனதின்கண் எழுந்தருளியிருக்கின்ற தேஜோமயப் பொருளானது. காணுங்கால்=பார்க்குமிடத்தில், கண்ணகத்தேநின்று = ஞானக்கண்ணினிடத்திலிருந்து, களிதரும்=ஆநந்தத்தையுண்டாக்கும் (எ-று.)

(கருத்துரை.) ஒவ்வொருவருடைய ஆன்மாக்களிலு மிருக்கின்ற தேஜோமயப்பொருள் தரிசிப்பவர்க்கு கண்காட்சியைக் கொடுக்கும் என்பது கருத்து. (7)

**8. ஆனந்த மான வருளை யறிந்தபின்**
**தானந்த மாகு மவர்க்கு.**

(பதவுரை.) ஆநந்தமான = ஆசையான. அருளை = திருவருளை, அறிந்தபின = உணர்ந்தபிறகு. அவர்க்கு = அவ்வருளையறிந்தார்க்கு. தானந்தமாகும் = தானே அந்தமாக முடியான (எ-று.)

(கருத்துரை) திருவருளாகிய ஆநந்தத்தை யுணர்ந்தபிறகே அவர்களெல்லாம் ஆநந்தரூபத்தை யடைவார்கள் என்பதுகருத்து.

**9. மறவாமற் காணும் வகையுணர் வார்க்
இறவா திருக்கலு மாம்.**

(பதவுரை.) மறவாமல் = மறந்துவிடாமல், காணும் = தரிசிக்கின்ற, வகையுணர்வார்க்கு = விதத்தை யுணர்பவருக்கு இறவாதிருத்தலுமாம் = இறவாதிருக்கும் வல்லமையுங் கைகூடும் (எ-று)

(கருத்துரை.) எவ்விடத்திலுஞ் சர்வேஸ்வரனை மறவாதிருக்குங் குணமுடையவர்கள் ஜந்மமெடுக்கமாட்டார்கள் என்பது கருத்து.

**10. விண்ணிறைந்து நின்ற பொருளே யுடம்
உண்ணிறைந்து நின்ற வொளி. [புதன்**

(பதவுரை) விண்ணிறைந்துநின்ற = ஆகாயம்வரைக்கும் வியாபித்திருந்த, பொருளே = பொருளை, உடம்பு = சரீரமாகும், அதனுள் = அந்தசரீரத்திற்குள். நிறைந்தநின்றஒளி = வியாபித்திருக்கிறது தேஜோமயப்பொருள் (எ-று)

(கருத்துரை) ஆகாயமே சரீரமாகவும் அதற்குள் அடங்கியிருக்கும் சர்வபொருள்களிலும் கலந்திருப்பவன் தேஜோரூபமுடையனாவான் என்பது கருத்து. (10)

# 4. கண்ணாடி.

1. கண்ணாடி தன்னி லொளிபோ லுடம்பி
உண்ணாடி நின்ற வொளி. [னுள்

(பதவுரை) கண்ணாடி தன்னில் = கண்ணாடியில் காணப்படுகின்ற, ஒளிபோல் = ஒளியைப்போல், உடம்பதனுள் = சரீரத்திற்குள், நாடிநின்றஒளி = சோதிருந்தமதேஜோமயப்பொருளாகும் (எ-று.)

(கருத்துரை) கண்ணாடிக்கொளியிருப்பதுபோல் உடம்பினுள் இறையருளிய ஒளியிருக்கின்றது என்பது கருத்து. (1)

2. அஞ்சு புலனின் வழியறிந்தாற் பின்னைத்
துஞ்சுவ தில்லை யுடம்பு.

(பதவுரை) அஞ்சுபுலனின்வழி = பஞ்சேந்திரியங்களின் கிரமங்களை, அறிந்தால் = உணர்ந்தால், பின்னை = பிறகு, உடம்பு = சரீரமானது, துஞ்சுவதில்லை = இறப்பதில்லை. (எ-று.)

(கருத்துரை) பஞ்சபுலன்களின் குணகுணங்களை யுணர்ந்த பெரியோர் உலகத்திலிறக்கமாட்டார்கள் என்பது கருத்து. (2)

3 நாபி யகத்தே நலனுற நோக்கிடிற்
சாவது மில்லை யுடம்பு.

(பதவுரை) நாபியகத்தே = உந்திக்கமலஸ்தானத்தில், நலனுற = நன்மையையடைய, நோக்கிடில் = தரிசித்தால், உடம்பு = சரீரமானது, சாவதுமில்லை = சாகிறதில்லை (எ-று.)

(கருத்துரை.) நாபிஸ்தானத்தின் குணகுணங்களை உள்ளபடியே உணர்ந்தவர் இனியிறக்கமாட்டார்கள் என்பது கருத்து. (3)

## 4. கண்டத் தளவிற் கடிய வொளிகாணில் அண்டத்த னாகு முடம்பு.

(பதவுரை.) கண்டத்தளவில் = விசுத்திஸ்தானத்தி லிருந்து, கடியஒளிகாணில் = நல்லதேஜோமயத்தைத் தரிசித்தால், உடம்பு = அவர்களுடைய சரீரமானது, அண்டத்தனாகும் = தேவசரீரமாகும். (எ-று.)

(கருத்துரை.) விசுத்திஸ்தானத்தின் ஜோதிவிசேஷத்தைக் காணவல்லவர்களது சரீரமானது தேவர்களுடைய சரீரமாகுமென்பது கருத்து. (1)

## 5. சந்திர னுள்ளே தழுவுற நோக்கினல் அந்தர மாகு முடம்பு.

(பதவுரை.) சந்திரனுள்ளே = சந்திரமண்டலத்திற்குள்ளே, தழுவுற = அங்கமிகளம்ப, நோக்கினல் = தரிசித்தால், உடம்பு = சரீரமானது; அந்தமாகும் = சூட்சுமசொரூபத்தை யடையும். (எ-று.)

(கருத்துரை.) சந்திரமண்டலத்திலுள்ளேயென்று அங்கு அறிந்தாண்டால் சரீரம் சூட்சுமசொரூபத்தையடையுமென்பது கருத்து.

## 6. ஆர்ந்தந் தெரியா வுருவந் தனைநோக்கில் பார்க்கும் பரம மவன்.

(பதவுரை.) ஆரக்குந் தெரியா வுருவந்தனை = யாவராலு முணரப்படாத சொரூபத்தை, நோக்கில் = தரிசித்தால், பார்க்கும் = கடாட்சிக்கின்ற, பரமமவன் = பரம்பொருளென்று சொல்லும்படியாவான் (எ-று.)

(கருத்துரை.) யாவராலுமுணரப்படாத இறைவனுடைய சொரூபத்தைத் தரிசனஞ்செய்தால் பரமேஸ்வரனுடைய சொரூபத்தை யடைவான் என்பது கருத்து. (6)

## 7. வண்ண மில்லாத வடிவை யறிந்தபின் விண்ணவ ராகு முடம்பு.

(பதவுரை.) வண்ணமில்லாதவடிவை = அழகுரூபமில்லாமையைக்கொள் சொல்லப்படாத சொரூபத்தை, அறிந்தபின் = உணர்ந்தபின்னர், உடம்பு = சரீரமானது, விண்ணவராகும் = தேவசரீரமாகும் (எ-று)

(கருத்துரை.) அழகுரூபமில்லாமையைச் சொல்லப்படாத இறைவனை உள்ளபடி கண்டவர்களுடைய சரீரமானது தேவர்களுடைய சரீரமாகுமென்பது கருத்து. (7)

## 8. நெற்றிக்குநேரே நிறைந்தவொளிகாணில் முற்று மழியா துடம்பு.

(பதவுரை.) நெற்றிக்குநேரே = சுழிமுனைக்குநேரே, நிறைந்த = வியாபித்திருக்கின்ற, ஒளி = தேஜோமயப்பொருளை, காணின் = தரிசித்தால், உடம்பு முற்றும் அழியாது = சரீரமெல்லாம் அழிவடையாது (எ-று.)

(கருத்துரை) சுழிமுனைஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனை யாவரொருவர் உள்ளபடியே தரிசிக்கின்றார்களோ அவர்கள் சரீரமானது என்றைக்கும் அழிவதில்லை என்பது கருத்து. (8)

## 9. மாதூவெளியின் மனமொன்றவைத்தபின் போதக மாகு முடம்பு.

(பதவுரை.) மாதூவெளியில் = மகத்தாகிய பரிசுத்தமாகிய வெளியினகண், மனம் ஒன்றவைத்தபின் = மனத்தைப்பொருந்தவைத்தபின்னர், உடம்பு = சரீரமானது, போதகமாகும் = ஞானமயத்தையடையும் (எ-று)

(கருத்துரை.) பரிசுத்தமானவெளியினிடத்தில் மனத்தை உள்ளபடியே வைத்திருக்கின்ற வெவ்வொருவருடைய சரீரமுமே ஞான நிலைமையையடையும் என்பது கருத்து. (9)

**10. சுத்தமோ டொன்றி மனமு மிறந்தக்கால்**
**முற்று மழியா துடம்பு.**

(பதவுரை.) சுத்தமோடொன்றி=சுத்த தத்துவத்திற் கலந்து, மனமும்=மனமும். இறந்தக்கால் = யாவற்றையு மிறந்திருந்தால், உடம்புமுற்றும் அழியாது = எல்லாச் சரீரங்களும் அழியாநிலைமை யடைவனவாகும் (எ-று.)

(கருத்துரை.) மனமானது சுத்த தத்துவத்திற்கலந்து யாவற்றையுந் துறந்திருக்குமானால் அவர்களுடைய சரீரமானது அழியா நிலையையடையும் என்பது கருத்து. (10)

## 5. சூனியகாலமறிதல்.

**1. நிரவியழலுருவாய் நீண்டவெளிகாணில்**
**அரவணையா னாகு முடம்பு.**

(பதவுரை.) நிரவி=எவ்விடத்திலும் நிறைந்து, அழலுருவாய் நீண்ட = அக்கினி சொரூபமாய் நீண்டிருக்கின்ற, வெளிகாணில்= ஆகாயத்தைத் தரிசித்தால், உடம்பு=அவர்களுடைய சரீரமானது, அரவணையான் ஆகும்=விஷ்ணுசொரூபத்தையடையும். (எ-று.)

(கருத்துரை.) சர்வவியாபகனான கடவுளை சிற்றம்பலத்தின் கண் தெரிசித்தவர்கள்சரீரமானது விஷ்ணுசொரூபத்தை யடையும் என்பது கருத்து. (1)

2. உருவந் தழலாக வுள்ளத்தே சென்று
புருவத் திடையிருந்து பார்.

(பதவுரை) உருவம் = சரீரமானது. தழலாக = அக்கினிமயமாக. உள்ளத்தேசென்று = மனத்திற்சென்று, புருவத்திடையிருந்து = புருவமத்தியிலிருந்து, பார் = தெரிசிப்பாயாக (எ-று.)

(கருத்துரை) தன்னை அக்கினிசொரூபமாக்கி சுழுனேஸ்தானத்திலிருந்து சாமிவெள்ளையைத் தரிசிக்கவேண்டும் என்பது கருத்து.

3. புருவத் திடையிருந்து புண்ணியனைக் காணில்
உருவற்று நிற்கு முடம்பு.

(பதவுரை) புருவத்திடை = புருவமத்தியில். இருந்து = நின்று, புண்ணியனைக்காணில் = சாமியைத் தெரிசித்தால், உடம்பு = சரீரமானது, உருவற்றுநிற்கும் = சூக்ஷுமமாகநிற்கும் (எ-று.)

(கருத்துரை) சுழுனேஸ்தானத்திலிருந்து இறைவனைத் தெரிசிக்கவேண்டும் என்பது கருத்து. (3)

4. அகம்புறம் போயப் பொருளை யறியில்
உகம்பல காட்டு முடம்பு.

(பதவுரை.) அகம்புறம் = உள்ளும்வெளியிலும், போயபொருளை = வியாபக பரம்பொருளை, அறியில் = உணர்ந்தால், உடம்பு = சரீரமானது, உகம்பலகாட்டும் = அநேககாலம் நிலைத்திருக்கும் (எ-று.)

(கருத்துரை.) உள்ளிடத்திலும் வெளியிடத்திலுங் கலந்திருக்கின்ற இறைவனை ஆராய்கின்றவர்களுடைய சரீரமானது நெடுநாள் இறக்காமலிருக்கும் என்பது கருத்து. 4)

5. ஆவியாழ் போகா தடக்கி யிருந்தபின்
ஓவிய மாகு முடம்பு.

(பதவுரை). ஆவி=ஆவியை, பாழ்போகாத = பாழாய்விடா மல், அடக்கியிருந்தபின் = அடக்கிக்கருத்துக்கொண் டிருந்தால், உடம்பு=சரீரமானது, ஓவியமாகும் = சித்திரம்போல்அசைவற்றிருக்கும். (எ-று)

(கருத்துரை) சரகங்களை வெளிவிடாமல் அடக்குகின்றவர்கள் மோனஞானத்தை யடைவர் என்பது கருத்து. (5)

6. அஞ்ச வடக்கி யறிவோ டிருந்தபின்
துஞ்சுவ தில்லை யுடம்பு.

(பதவுரை) அஞ்சும் அடக்கி = ஐம்புலன்களையும் அடக்கி, அறிவோடு=ஞானத்துடனே. இருந்தபின் = இருந்தபிறகு. உடம்பு = சரீரமானது. துஞ்சுவதில்லை = இறந்துபடுவதில்லை. (எ-று.)

(கருத்துரை) ஐம்புலன்களையும் ஒடுக்கினவர்களுடைய சரீரமானது இறப்பதில்லை என்பது கருத்து. (6)

7. தீயாக வுள்ளே தெளிவுற நோக்கினல்
மாயாது பின்னை யுடம்பு.

(பதவுரை.) தீயாக=அக்கினிசொரூபமாக, உள்ளே = மனத்தின்கண், தெளிவுறநோக்கினல்=ஞானத்தை யடையத்தரிசித்தால், உடம்பு=சரீரமானது, பின்னைமாயாது=பிறகு இறக்காது (எ-று.)

(கருத்துரை.) அந்தர்முகத்தில் அக்கினிசொரூபமாக இறைவனைத்தெரிசித்தால் சரீரம் கீழேவிழாது என்பது கருத்து. (7)

8. தானந்த மின்றித் தழலுற நோக்கிடில்
ஆனந்த மாகு முடம்பு.

(பதவுரை.) தான்=தான், அந்தமின்றி=முடிவில்லாமல், மழ லுற=பொறிபறக்க, நோக்கிடில்=தரிசித்தால், உடம்பு = சரீரமா னது, ஆநந்தமாகும்=பேரின்பத்தையடையும் (எ று)

(கருத்துரை.) எதிலும் கடத்தலில்லாமல் எவன் தரிசிக்கின்ற னோ அவன் சரீரம பேரின்பமயத்தையடையும் என்பது கருத்து.)

## 9. ஒழிவின்றி நின்ற பொருளை யுணரில் அழிவின்றி நிற்கு முடம்பு.

(பதவுரை.) ஒழிவின்றி=யாதொரு ஒழிவுமில்லாமல், நின்ற= இருந்த, பொருளை=சாம்பவையரனை. உணரில்=உள்ளபடியே உண ர்ந்தால், உடம்பு=சரீரமானது. அழிவின்றிநிற்கும்=யாதொரு கெடு தியையு மடையாமலிருக்கும் (எ-று.)

(கருத்துரை) எவ்விடத்திலும் வியாபித்திருந்த கடவுளை உண் மையாகவுணர்ந்தால அவர்களுடைய சரீரம் அழிவில்லாம லிருக் கும் என்பது கருத்து. (௯)

## 10. பற்றற்று நின்ற பழம்பொருளைச் சிந்திக் [கில் முற்று மழியா துடம்பு.

(பதவுரை) பற்றற்றுநின்ற=யாதொரு சம்பந்தமு மில்லாமலி ருந்த, பழம்பொருளை=சர்வேஸ்வரனை, சிந்திக்கின் = நினைத்தால், உடம்பு=சரீரமானது, முற்றும்அழியாது=முழுமையும் கெடாது ()

(கருத்துரை.) இறைவனைச் சிந்திப்பவர்கள் சரீரம் அழியாது என்பது கருத்து. (10)

## 6. சிவயோகநிலை.

**1.** அடிமிசை வாயு வடுத்தடுத் தேகி
முடிமிசை யோடி முயல்.

(பதவுரை.) அடிமிசை=மூலாதாரத்தின்மேல், வாயு=சரமானது, அடுத்தடுத்தேகி=பொருந்துப் பொருந்துப்போய், முடிமிசை=சுழிமுனைஸ்தானத்தின்கண், முயல்=பிரயத்தனப்படு. (எ-று)

(கருத்துரை.) வாயுவோடுகூடச் சம்பந்தப்பட்டே சுழிமுனைஸ்தானத்தில் செலலவேண்டுமெ என்பது கருத்து. (1)

**2.** உண்ணாடி வாயு வதனை யுடனிரப்பி
விண்ணேறு மெள்ள விடு.

(பதவுரை.) உள்நாடி=அந்தர்முகத்தின் நாடியிலுள்ள, வாயு அதனை=சரத்தை, உடனிரப்பி=சரீரத்திற்குள்பூரித்து, விண்டேறு=கும்பகத்தில், மெள்ளவிடு=மெதுவாகவெளியேவிடுவாய். (எ-று)

(கருத்துரை) வாயுவை பூரிக்கவேண்டிய கிரமப்படி பூரித்து பின் கும்பிக்கவேண்டும் என்பது கருத்து. (2)

**3.** மெள்ள விரேசித்து மெய்விம்மிப் பூரித்துக்
கொள்ளுமின் கும்பங் குறித்து. [துக்

(பதவுரை.) மெள்ள=மெதுவாக, இரேசித்து=இரேசகஞ்செய்து, மெய்விம்மி=சரீரம்விம்முதலையடைந்து, பூரித்து=பூரகஞ்செய்து, கும்பகங்குறித்து=கும்பத்திலுள்ளேகுறித்து, கொள்ளுமின்=கொள்ளுங்கள். (எ-று.)

(கருத்துரை.) மெதுவாகச் சரத்தைவாங்கி இரேசித்துப் பின் பூரகஞ்செய்து அதன்பிறகு கும்பகஞ் செய்யவேண்டும் என்பது கருத்து. (3)

**4.** இரேசக முப்பத் திரண்டது மாத்திரை
பூரகம் பத்தாறு புகும்.

(பதவுரை.) இரேசகம் = இரேசகத்தினுடைய, மாத்திரை= அளவாவது, முப்பத்திரண்டு = முப்பத்திரண்டுமாத்திரையும், பூரகம்=பூரகமானது, பத்தாறு=பதினாறு, புகும்=புகும். (எ-று)

(கருத்துரை.) இரேசகத்தினுடைய மாத்திரை முப்பத்திரண்டும் பூரகத்தினுடைய மாத்திரை பதினாறுமாகும் என்பது கருத்து.

**5.** கும்பக நாலோ டறுபது மாத்திரை
தம்பித் திடுவது தான்.

(பதவுரை.) கும்பகம் = கும்பகமானது, நாலோடறுபதுமாத்திரை=அறுபத்துநான்குமாத்திரையாகவும், தம்பித்திடுவது தான்= ஸ்தம்பிக்கவேண்டும். (எ-று.)

(கருத்துரை.) கும்பகம் அறுபத்துநான்கு மாத்திரையளவு ஸ்தம்பிக்கவேண்டும் என்பது கருத்து. (5)

**6.** முன்ன மிரேசி முயலுபின் பூரகம்
பின்னது கும்பம் பிடி.

(பதவுரை.) முன்னம்=முன்னதாக, இரேசி=இரேசகஞ்செய், பின்பூரகமுயலு=பிறகுபூரகஞ்செய், கும்பம்பின்னதுபிடி = அதன் பிறகு கும்பத்தைசெய். (எ-று.)

(கருத்துரை.)முன்னர் இரேசகத்தையும், அதன்பிறகு பூரகத்தையுய் அதன்பிறகு கும்பகத்தையுஞ் செய்யவேண்டும் என்பது கருத்து. (6)

**7.** ஈரைந் தெழுபத்தி ராயிர நாடியுஞ்
சேருமின் வாயுச் செயல்.

(பதவுரை.) ஈரைந்து = பத்தும், எழுபததீராயிர நாடியும்= எழுபத்தீராயிரநாடிகளையும், வாயுசெயல்=வாயுவின் செய்கையில், சேருமின்=சேருங்கள். (எ-று.)

(கருத்துரை) எழுபததீராயிர நாடிகளையும் தசநாடிகளையும் வாயுவில் சேர்க்கவேண்டும் என்பது கருதது. (7)

8. வாச லீரைந்து மயங்கிய வாயுவை
யீசன்றன் வாசலி லேற்று.

(பதவுரை.) வாசலீரைந்தும்=பத்து வாசல்களிலும், மயங்கிய=மயக்கப்பட்டிருக்கின்ற, வாயுவை=தசவாயுக்களையும், ஈசன்றன்வாசலில் ஏற்று=சர்வேஸ்வரன் எழுந்தருளியிருக்கின்றவாயிலில் செலுத்து. (எ-று.)

(கருத்துரை.) பலவாசல்களின் வழியாகச சஞ்சரிக்கின்றவாயுவை சுழிஞஸ்தானத்தில் செலுத்தவேண்டும் என்பது கருத்து. (8)

9. தயாவினில் வாயு வலத்தி லியங்கில்
தியான சமாதிகள் செய்.

(பதவுரை.) தயாவினில்=தயவுடனே, வாயு = வாயுவானது, வலத்தில்இயங்கில்=வலதுபக்கத்தில் சஞ்சரிக்குமானால், தியான சமாதிகள்செய்=தியானம் சமாதிமுதலியவைகளைச்செய். (எ-று.)

(கருத்துரை.) வாயுவானது வலதுபக்கத்தில் சஞ்சரிக்கின்ற காலத்திலேயே தியானமுதலியவைகளைச செய்யவேண்டும் என்பது கருத்து. (9)

10. ஆதியாமூல மறிந்தஞ் செழுத் தினைப்
பேதியா தோது பினை.

(பதவுரை.) பினை=பிறகு, ஆதியாம்=முதன்மையதாகிய. மூலம் அறிந்து=காரணத்தையுணர்ந்து, அஞ்செழுத்தினை=பஞ்சாட்சரத்தை, போதியாது ஓது=யாவருமுணராதபடி துதிசெய். (எ-று)

(கருத்துரை.) இவைகளையெல்லாஞ்செய்தபிறகு பஞ்சாட்சரதியானஞ்செய்யவேண்டும் என்பது கருத்து. (10)

## 7. ஞானநிலை.

**1.** தற்புருட மாமுகந் தன்னிற் றனியிருந்
துற்பன மஞ்சை யுரை.

(பதவுரை.) தற்புருட மாமுகந்தன்னில்=தற்புருடமான மகத்தானமுகத்தில், தனியிருந்து=தனியேயிருந்து, உற்பனம்=மேலானதாகிய, அஞ்சை உரை=பஞ்சாட்சரங்களைத் தியானஞ்செய். எ-று

(கருத்துரை.) தற்புருடமுகத்திலிருந்து பஞ்சாட்சரதியானஞ் செய்யவேண்டும் என்பது கருத்து. (1)

**2.** தற்புருட மாமுகமேற் றாரகைதன்மேலே
நிற்பது பேரொளி நில்.

(பதவுரை.) தற்புருடமாமுகமேல்=தற்புருடமென்னும் மகத்தாகியமுகத்தின்மேலிருக்கும், தாரகைதன்மேலே= நட்சத்திரத்தின்மேலே, நிற்பது பேரொளி=இருப்பது பேரொளியாகும் (ஆகையால்) நில்=அவ்விடத்தில் நில். (எ-று.)

(கருத்துரை.) தற்புருடமுகத்திற்கு மேலிருக்கும் நட்சத்திரத்திற்குமேல் நிற்கவேண்டும் என்பது கருத்து. (2)

**3.** ஓதியதற்புரு டத்தடி யொவ்வவே
வேதியா தோது பினை.

(பதவுரை.) ஓதிய=சொல்லப்பட்ட, தற்புருடத்தடி = தற்புருடமுகத்தினடியில், ஒவ்வவே = ஒப்பாகவே. பிசை=பிரகு, பேதியம தீ=மனவிகற்பியாசமில்லாமல், ஓது=தறிசெய். (எ-று.) (௪)

4. கொழுந்துறுவன்னி கொழுவுற வொவ்வி எழுந்தா ரகையா மிது. [ல்

(பதவுரை) கொழுந்துறுவன்னி = கொழுந்துவிட்ட அக்கினியானது, கொழுவுற=செமமையாக, ஒவ்வில்=சம்பந்தப் பட்டால், இது=இது, எழுந்தாரகையாம்=எழுகின்றநட்சத்திரமாகும்(எ-று.)

5. மறித்துக் கொளுவிடு வன்னி நடுவே குறித்துங் கொளுஞ்சீயைக் கூட்டு.

(பதவுரை.) மறித்து=தடுத்து, கொளுவிடு=கொளுத்துகின்ற வன்னிநடுவே=அக்கினி சேத்தினடுவே, குறித்துக்கொளும்=யாவரையுங் குறித்துக் கொள்ளுகின்ற, சீயைகூட்டு = சிகாரத்தைச் சேர. (எ-று) (5)

6. காலுந் தலையு மறிந்து கலந்திடில் சாலவும் நல்லது தான்.

(பதவுரை.) காலுந்தலையும் அறிந்து=காலையுந்தலையையுமுணர்ந்து, கலந்திடில்=சேர்ந்தால், சாலவும்=மிகவும், நல்லது தான்= நலமதாகும். (எ-று.) (6)

7. பொன்னொடு வெள்ளியிரண்டும்பொருந்தி அன்னவன் றாளதுவேயாம். [டில்

(பதவுரை.) பொன்னொடு வெள்ளியிரண்டும்=சோமசூரியர்களிருவரும், பொருந்திடில=சேர்ந்தால், அன்னவன் = இறைவனுடைய, தாளதுவேயாம்=திருவடிகளைக்கூடும். (எ-று.) (7)

8. நின்றவெழுத் துட னில்லாவெழுத் தினை
யொன் றுவிக்கி லொன்றே யுள.

(பதவுரை.) நின்றஎழுத்துடன் = இருந்தஎழுத்துடனே, நில்லாஎழுத்தினை = நில்லாத எழுத்தை, ஒன்றுவிக்கில்=சேர்த்தால், ஒன்றேயுள=ஒருபொருளே யுள்ளதாகும். (எ-று.) (8)

9. பேசா வெழுத் துடன் பேசுமெழுத் துறில்
ஆசான் பரனந்தி யாம்.

(பதவுரை) பேசா எழுத்துடன் = மௌனஅட்சரத்துடனே, பேசும் எழுத்துறில்=பேசுகின்ற எழுத்துஞ்சேர்ந்தால், ஆசான்= குருவானவன், பரனந்தியாம்=பரமேஸ்வரனுவான். (எ-று.) (9)

10. அழியாவுயிரை யவனுடன்வைக்கில்
பழியான தொன் றில்லை பார்.

(பதவுரை.) அழியாவுயிரை=நித்தியமானஉயிரை, அவனுடன் வைக்கில் = ஈஸ்வரனிடததிலே சேர்தது வைத்தால்,பழியானதொன்றில்லை = யாதொருபழியும் உண்டாவதில்லை, பார் = நீபார்ப்பாயாக. (எ-று.) (10)

## 8. ஞானம்பிரியாமை.

1. பிறந்திட மாலிடம் பேரா திருப்பின்
இறந்திடம் வன்னி யிடம்.

(பதவுரை.) பிறந்திடம்மாலிடம்=பிறந்தஇடமானது மாலிடமாகும், பேராது இருப்பின்=நீஙகாதிருக்கு மானுல், இறந்திடம்= இறந்த இடமானது, வன்னியிடம்=அக்கினியிடமாகும். (எ-று.)(1)

2. சாகாதிருந்த தலமே மவுனமது
ஏகாந்த மாக விரு.

(பதவுரை.) சாகாதிருந்ததலமே = சாகாதிருந்தஇடமே, மவுனம்=மவுனமாகும், அது=அதுவே, ஏகாந்தமாக இரு = ஒரேஇடமாக இருப்பாயாக (எ-று.) (2)

3. வெளியில் விளைந்த விளைவின் கனிதான்
ஒளியி லொளியா யுறும்.

(பதவுரை.) வெளியில்விளைந்த=ஆகாயத்திலுண்டான, விளைவின்கனிதான்=விளைவின்கனியே, ஒளியில் ஒளியாயுறும்=தேஜோமயத்தின் உட்கிடையான தேஜோமயமாகவிருக்கும் (எ-று.) (3)

4. மறவா நினையா மவுனத் திருக்கில்
பிறவா மிறவார் பினை.

(பதவுரை.) மறவா=மறக்காமலும், நினையா=நினைக்காமலும், மவுனத்து இருக்கில்=மௌனஞானத்திலிருந்தால், பினை=பிறகு, பிறவார் இறவார்=பிறக்கவுமாட்டார் இறக்கவுமாட்டார். (எ-று.)

5. குருவாம் பரனந்தி கூடல் குறித்தாங்
கிருபோது நீங்கா திரு.

(பதவுரை.) குருவாம் பரனந்தி = குருவாகிய பரமேஸ்வரனுடைய, கூடல்=சேர்க்கையை, குறித்து=நினைத்து, ஆங்கு= அவ்விடத்தில், இருபோதும்=இரண்டுவேளையும், நீங்காதிரு=பிரியாமலிருக்கவேண்டும். (எ-று) (5)

6. சுந்தரச்சோதி துலங்குமிடமது
மந்திரச் சக்கரமு மாம்.

(பதவுரை.) சுந்தரச்சோதி = அழகுபொருந்திய சோதியானது, துலங்கும் இடமது = விளங்குகின்ற இடமே, மந்திரசக்கரமுமாம்=மந்திரமான சக்கரமுமாகும். (எ-று.) (6)

7. தூராதி தூரஞ் சொல்லத் தொலையாது
பாராப் பராபரம் பார்.

(பதவுரை.) பாராப்பராபரம=பார்க்கமுடியாத பராபரப்பொருளானது, தூராதிதூரம் = தூராதிதூரத்திலிருக்கும், சொல்லத் தொலையாது=இதைச் சொல்லமுடியாது, பார்=நீபார். (எ-று.)(7)

8. ஈரொளி யீதென் றிறைவ னுரைத்தனன்
நீரொளி மீது நிலை.

(பதவுரை.) ஈரொளியீதென்று=இது இருஒளியென்று,இறைவன் உரைத்தனன் = பரமேஸ்வரன் சொன்னான், ஈரொளிமீது நிலை=ஆனால் அவ்விரண்டொளியின்மீதே உயர்ந்தநிலையாகும். (8)

9. அந்தமு மாதியு மில்லா வரும்பொருள்
சுந்தர ஞானச் சுடர்.

(பதவுரை.) அந்தமும் ஆதியும் இல்லா = ஆதியந்தமில்லாத, அரும்பொருள் = அருமையாகிய பொருளானது, சுந்தர ஞானச சுடர்=அழகிய ஞானவொளியாகும். (எ-று.) (9)

10. இதுமுத்திசாதனமென் றேட்டில்வரைந்
பதிவைத் தனன்குரு பார். [து

(பதவுரை.) இது=இதுவே, முத்திசாதனம் என்று =மோட்ச வழியென்று, எட்டில்வரைந்து = எட்டிலெழுதி, பதிவைத்தனன் குரு=ஞானாசிரியனானவன் பதியவைத்தனன், பார்=நீபார்.(எ-று.)

(கருத்துரை.) இவ்வகையான உபதேசத்தை ஞானாசிரியன் ஞானசாஸ்திரத்தில் எழுதிவைத்திருக்கிறான் என்பது கருத்து (10)

## 9. மெய்ந்நெறி.

**1.** செல்லல் நிகழல் வருகால மூன்றினையுஞ்
சொல்லு மவுனத் தொழில்.

(பதவுரை.) மௌனத்தொழில்—மௌனஞானத்தினது, தொழில், செலலல் நிகழல்வருகாலமூன்றினையும் சொல்லும் = இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலஙகளாகிய மூன்றினையுஞ் சொல்லுதலாம். (எ-று.) (1)

**2.** பஞ்சிற் படுபொறி போலப் பரந்திருந்து
துஞ்சாது ஞானச் சுடர்.

(பதவுரை.) பஞ்சிற்படு=பஞ்சில்பட்ட, பொறிபோல =நெருப்புபொறியைப்போல, பரந்திருநது =வியாபிததிருந்து, ஞானசசுடர்=ஞானஒளியானது, துஞ்சாது=உறஙகாது. (எ-று.) (2)

**3.** இமைப்பிற்பரந்தங் கொடுங்குமின்போல்
நமக்குட் சிவன்செயல் நாடு.

(பதவுரை.) இமைப்பிற்பரந்து=இமைநேரத்தில் எவ்விடத்திலும்பரவி, அஙகு=அப்பொழுதே, ஒடுஙகும் = மறைந்துவிடுகின்ற, மின்போல்=மின்னலைப்போல, நமக்குள்=நமக்குள்ளே, சிவன்செயல்=சிவனுடையசெயலை, நாடு=விரும்பு. (எ-று.) (3)

**4.** குவித்துமனத்தைக் குவித்துள்ளே யோங்
செவித்துப் பெறுவ தெவன். [கில்

(பதவுரை.) மனத்தைகுவித்து=மனத்தையொருங்கசசெய்து, குவித்துள்ளே ஓங்கில்=உள்ளேகுவித்துஉயர்ந்தால், செவித்துப்பெறுவது எவன்=செபித்துப் பெறுவது என்ன? (எ-று.) (4)

5. காலுந் தலையு மொன்றாகக் கலந்திடம்
நாலா நிலையென நாடு.

(பதவுரை.) காலும்தலையும்=காலென்பதும் தலையென்பதும், ஒன்றாகக் கலந்திடம் = ஒன்றாகக்கலந்த இடம், நாலாநிலையென நாடு=அதுவேதுரியநிலையென்று ஆஸ்ரயிப்பாய். (எ-று.) (5)

6. மூலநிலமிசை மூன்றுநிலத்தினில்
ஆல மருந்துஞ் சிவம்.

(பதவுரை.) மூலநிலமிசை = மூலாதாரத்தில், மூன்றாம்நிலத்தினில்=மூன்றாவதாகிய இடத்தில், ஆலம் அருந்தும்சிவம்=சிவபெருமானானவர் எழுந்தருளியிருப்பார். (எ-று.) (6)

7. எழுஞ்சுடருச்சியின் மேன்மனம்வைக்கத்
தொழிலொன் றிலாத சுடர்.

(பதவுரை.) எழும்=எழுகின்ற, சுடர்=சுடரையுள்ள, உச்சியின்மேல்=உச்சிக்குமேலே, மனம்வைக்க = மனத்தைவைக்க, தொழிலொன்றிலாதசுடர்=யாதொருதொழிலுமில்லாதசுடராம். (7)

8. அடைத்திட்டவாசலின் மேன்மனம்வை
படைத்தவன் தன்னையே பார். [த்துப்

(பதவுரை.) அடைத்திட்ட வாசலின்மேல்=கதவை யடைத்திருக்கின்றவாசலின்மேல்,மனம்வைக்க-மனத்தைவைத்து, படைத்தவன் தன்னையேபார்=சிருஷ்டித்தகடவுளைப்பார். (எ-று.)

(கருத்துரை.) கதவடைத்திருக்கின்றவாசலின்கண் மனத்தை வைத்து யாவரையும்சிருஷ்டித்தகடவுளைத் தெரிசிக்கவேண்டுமென்பது கருத்து. (8)

9. அறுபதொடாறு வருடமிதனை
உறுதிய தாக வுணர்.

(பதவுரை.) அறுபதொடாறுவருடம் = அறுபத்தாறு வருஷம் வரைக்கும், இதனை=இதை, உறுதியதாகவுணர்=உறுதியாக ஆராய்வாய். (எ-று.)

(கருத்துரை.) இவ்விஷயங்களை யெல்லாம் அறுபத்தாறு வருஷம்வரைக்கும் ஆராயவேண்டும் என்பது கருத்து. (9)

10. அட்டமாசித்தி யடையுமோ ராண்டினில்
இட்ட மிதனைத் தெளி.

(பதவுரை.) அட்டமாசித்தி = அஷ்டமாசித்திகளும், அடையும்=உண்டாகும், (ஆகையால்) ஓராண்டினில் = ஒருவருஷத்தில், இட்டம்=இஷ்டமாக. இதனைத்தெளி=இதை ஆராய்வாயாக. ()

(கருத்துரை.) இதனால் அஷ்டமா சித்திகளையு மடையலாம் ஆகையால இதனை ஓராண்டுவரைக்கும் ஆராயவேண்டும் என்பது கருத்து. (10)

## 10. சூரிய தரிசனம்.

1. வன்னியதெட்டு மதியப்பதினாறு
முன்னிய பன்னிரண்டு முள்.

(பதவுரை.) வன்னியது எட்டு=சூரியன்எட்டும், மதியம்பதினாறு=சந்திரன்பதினாறும், முன்னிய=நினைத்த, பன்னிரண்டுமுள் = பன்னிரண்டுமுள்ளடக்கவேண்டும். (எ-று.) (1)

2. சூரியன்வன்னியொன் றாகிடிற்சோமனும்
பாரு மினீது பயன்.

(பதவுரை.) சூரியன்=சூரியனும், வன்னி=அக்கினியும், ஒன்றாகிடில்=ஒன்றானால், சோமனும்=சந்திரனும், ஈதுபயன்=இந்தப்பயனை, பாருமின்=நீங்கள்பாருங்கள். (எ-று.) (2)

**3.** மதியொடு வன்னியொன் றாகவே வந்தால்
கதிரவ னென்று காண்.

(பதவுரை.) மதியோடு=சந்திரனுடன், வன்னி= அக்கினியும், ஒன்றாகவேவந்தால்=கலந்துவந்தால், கதிரவனும் = சூரியனுவான், என்று=என்று, காண்=காண்பாயாக. (எ-று.) (3)

**4.** மதிக்குட் கதிரவன் வந்தங் கொடுங்கில்
உதிக்குமாம் பூரணைச் சொல்.

(பதவுரை) மதிக்குட்கதிரவன்வந்து = சந்திரனுக்குள்ளேசூரியனும்வந்து, அங்கு ஒடுங்கில்=அவ்விடத்தில் ஒடுங்கினால், பூரணைச்சொல்=பௌர்ணமியென்னுஞ் சொல்லானது, உதிக்குமாம்=உண்டாகுமாம். (எ-று.)

(கருத்துரை.) சந்திரனுக்குள்ளே சூரியன்வந்து ஒடுங்கினால் பௌர்ணமியென்று சொல்லுவார்கள் என்பது கருத்து. (4)

**5.** தோற்றுங் கதிரவ னுண்மதி புக்கிடில்
சாற்று மமாவாசை தான்.

(பதவுரை.) தோற்றும்=காணப்படுகின்ற, கதிரவனுள்=சூரியனுக்குள், மதிபுக்கிடில்=சந்திரன் ஒடுங்கினால், சாற்றும் = சொல்லப்படுகின்ற, அமாவாசைதான்=அமாவாசையாகும். (எ-று.)

(கருத்துரை.) சூரியனுக்குள் சந்திரன்ஒடுங்கினால் அமாவாசையாகும் என்பது கருத்து. (5)

**6.** வன்னி கதிரவன் கூடிடி லத்தகை
பின்னிவை யாகு மெலாம்.

(பதவுரை.) அத்தகைவன்னி = அப்படிப்பட்ட அக்கினியும், கதிரவன்=சூரியனும், கூடிடில்=சேர்ந்தால், பின்=பிறகு இவையாதும் எலாம்=இவைகளெல்லாமாகும். (எ-று.) (6)

**7.** அமாவாசை பூரணை யாகுமவர்க்குச்
சமனு முயிருடம்பு தான்.

(பதவுரை.) அமாவாசை=அமாவாசையே, பூரணையாகும் அவர்க்கு=பௌர்ணமியாக கொள்ளுபவருக்கு, உயிர் உடம்புதானும்=உயிரும்உடம்பும், சமனும்=சமானமாகும். (எ-று.) (7)

**8.** அண்டத்திலுமிந்த வாறென்றறிந்திடு
பிண்டத்திலு மதுவே பேசு.

(பதவுரை.) அண்டத்திலும் = வெளியண்டத்திலும், இந்தவாறென்று=இவ்விதமென்று, அறிந்திடு=உணர்ந்து, பிண்டத்திலும=உள்ளண்டத்திலும, அதுவேபேசு = அப்படியேயாகுமென்று பேசு. (எ-று.)

(கருத்துரை.) அண்டத்திலும் பிண்டத்திலும் ஒன்றென்றே யுணரவேண்டும் என்பது கருத்து. (8)

**9.** ஏறுமதிய மிறங்கிடி லுறங்கிடும்
கூறுமப் பூரணை கொள்.

(பதவுரை.) ஏறும்மதியம்=ஏறுகின்றசந்திரனென். இறங்கிடில்=இறங்குமானால், உறங்கிடும்=உறங்கும், கூறும்=அப்பொழுது சொல்லப்படுகின்ற, அப்பூரணை=அந்தப் பௌர்ணமியை, கொள்=கொள்ளக்கடவாய். (எ-று.) (9)

**10.** உதிக்கு மதியமுங் கண்டங் குறங்கில்
மதிக்கு மமாவாசை யாம்.

(பதவுரை.) உதிக்கும்மதியமும்=உதயமாகின்றசந்திரனையும், கண்டு=தெரிசித்து, அங்கு=அவ்விடத்தில், உறங்கின்=தூங்கினால், மதிக்கும்=நினைக்கப்படுகின்ற, அமாவாசையாம் = அமாவாசையாகும். (எ-று.) (10)

## 11. உயர்ஞானதரிசனம்.

**1.** கொண்டிடுமெண்டல மூன்றங்கிதன்னையிப்
பிண்டமு மூழி பிரியா.

(பதவுரை.) கொண்டிடு = யாவராலுங் கொள்ளப்படுகின்ற, மண்டலமூன்று=மும்மண்டலங்களுள், அங்கிதன்னை=அக்கினிமண்டலத்தை, இப்பிண்டமும்=இந்தப்பிண்டத்திலும், ஊழிபிரியா= ஊழியிலும் பிரியமாட்டா. (எ-று.)

(கருத்துரை.) மும்மண்டலங்களுள் அக்கினி மண்டலத்தை எந்தக்காலத்திலும் பிரியமாட்டா என்பது கருத்து. (1)

**2.** வெள்ளிபுதனொடு திங்களிடமெனத்
தள்ளுமின் கால சரம்.

(பதவுரை) காலசரம்=காலத்தில்நடக்குஞ்சரத்தை, வெள்ளி புதனொடுதிங்கள்=வெள்ளி புதன் திங்கள் இம்மூன்றுநாட்களிலும், இடமெனத்தள்ளுமின்=இடதுபக்கத்தில் தள்ளுங்கள். (எ-று.)

(கருத்துரை.) திங்கள், புதன், வெள்ளி இக்கிழமைகளில் சந்திரநாடியில காலசரத்தைச்செலுத்தவேண்டும் என்பதுகருத்து.(2)

**3.** செவ்வாய் சனிஞா யிறுவல மாகவே
கொள்ளிலிவ் வாறிடரு மில்.

(பதவுரை) செவ்வாய் சனி ஞாயிறு=செவ்வாய் சனி ஞாயிறு என்னுங்கிழமைகளில், வலமாககொள்ளின்=வலதுபக்கமாகத் தள்ளினால், இவ்வாறிடருமில்=இப்படிப்பட்ட துன்பம்ஒன்றுமில்லை.()

(கருத்துரை.) செவ்வாய், சனி, ஞாயிறு என்னும் சூரியநாள்களில் சூரியநாடியில் சரத்தைத்தள்ளவேண்டும் என்பதுகருத்து. (3)

**4.** வளர்பொன் னிடம்பிறைத் தேய்வுவலமா
வளர்பிறை யென்றே மதி.

(பதவுரை.) வளர்=வளர்கின்ற, பொன் = வியாழக்கிழமைக ளில், பிறைத்தேய்வு=தேய்பிறைகளில், இடம் = இடதுபக்கமாக வும், வளர்பிறை=வளர்பிறையில், வலமாம் = வலதுபக்கமாகவும், செல்லுமென்னுமதி=செல்லுமென்றெண்ணுவாய். (எ-று.)

(கருத்துரை.) வியாழக்கிழமைகளில் தேய்பிறையில் இடதுப க்கமாகவும் வளர்பிறையில் வலதுபக்கமாகவும் சரஞ்செல்லுமென் பது கருத்து. (4)

5. வலந்திற் சனிக்கே யிராப்பகல் வாயு
செலுத்து போராது செயல்.

(பதவுரை.) சனிக்கே=சனிக்கிழமைகளில், இராப்பகல்=இரா த்திரியும்பகலும், வாயு=வாயுவை, வலத்தில் = வலதுபக்கத்திலே, போராது=ஒழியாது, செலுத்து=செலுத்துவாய், செயல்=இதுவே அதன்செய்கைகளாம். (எ-று.) (5)

6. இயங்கும் பகல்வல மிராவிடம் வாயு
தயங்குறல் நாடிக்குட் டான்.

(பதவுரை.) வாயு=வாயுவானது, தயங்குற=விளங்க, நாடிக் குட்டான்=நாடிக்குள், பகல்வலம்=பகலில்வலமாகவும், இராஇட ம்=இரவில்இடமாகவும், இயங்கும்=நடக்கும். (எ-று.) (6)

7. அரசறியாம லவன்பேருறைந்துத்
தரைதனை யாண்ட சமன்.

(பதவுரை.) அரசறியாமல்=அரசனை அறியாமல், அவன்பேர்= அவனுடையபேரை, உரைத்து=சொல்லி, தரைதனையாண்டசமன்= பூமியையாண்ட சமனுகும். (எ-று.) (7)

8. கல்லாதமூடர் திருவுருக் கொண்டிடச்
செல்லாத தென்ன செயல்.

(பதவுரை.) கல்லாதமூடர்=கற்காதமூடர்கள், திருவுருக்கொண்டிட=திருவுருவத்தையடைய, என்னசெயல் செல்லாதது=என்னகாரியம் நடவாதது. (எ-று.)

(கருத்துரை.) யாவராயினும் திருவுருக்கொண்டால் எல்லாக் காரியங்களுநடைகூடும் என்பது கருத்து. (8)

**9.** திருவருட்பாலைத் தெரிந்துதெளியில்
குருவிருப் பாமென்று கொள்.

(பதவுரை.) திருவருட்பாலை = திருவருளென்னும் அமிர்தத்தை, தெரிந்து=உணர்ந்து, தெளியில் = ஒளியடைந்தால், குருவிருப்பாமென்றுகொள் = ஞானாசிரியனுடைய இருப்பிடமாமென்று கொள்ளுவாய். (எ-று.)

(கருத்துரை.) திருவருட்பாலை உணர்ந்தவர்கள் குருவிருப்பிடமாவார்கள் என்பது கருத்து. (9)

**10.** கற்கிலுங் கேட்கிலும் ஞானக் கருத்துற
நிற்கிற் பரமமை வீடு.

(பதவுரை.) கற்கிலும் = எல்லாசாஸ்திரங்களைக் கற்றாலும், கேட்கிலும்=கேட்டாலும், ஞானக்கருத்துறை = ஞானமாகிய வானவழியில், நிற்கில்=இருந்தால், பரமமைவீடு=பரம்பொருள் எழுந்தருளியிருக்கின்ற வீடுகைகூடும். (எ-று)

(கருத்துரை.) சகலசாஸ்திரங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கற்றாலும் கேட்டாலும் மோட்சவீடுகைகூடும் என்பது கருத்து. (10)

## ஔவைக்குறள்
### மூலமும்-உரையும்
முற்றுப்பெற்றது.

MAHAMAHOPADHYAYA
V. SWAMINATHA IYER LIBRARY
ANMIYUR MADRAS